www.padippakam.com

இதழ் : 12 நன்கொடை ரூ. 10/

# புதிய தடம்

ஜூலை - செப்டம்பர் 2003



நேர்காணல்



வ.கீதா



சுகன்

## பார்ப்பனியத்தின் அரசியல் பாசிசம்
## பாசிசத்தின் தத்துவம் பார்ப்பனியம்

படிப்பகம்

www.padippakam.com


# மதிவண்ணன் கவிதைகள்

செய்வதென்ன?
என் ஒற்றையறை வீட்டின்
கன்னி மூலைக்குப்
படையெடுத்து வந்தெழுந்தருளிச் செய்த
பூஜையறைத் தெய்வங்கள்.
சாராயம், சுருட்டு
சுட்ட கருவாட்டுடன் கூடிய
மாட்டிறைச்சிப் படையலின்போதும்,
போதையில் பிணையலிடும்
சாயங்காலப் புணர்ச்சிகளின் போதும்.



பட்டனாயிருந்தாலும்
பொண்ணுதர வேணுமானால்
செருப்பு கட்டித்தர வேணுமெனக்
கேட்ட வாலன் பகடையின்
புதல்வர்களிடமிருந்து
பாட்டா, நைக் குழுமங்கள்
மாட்டுத் தோலை அபகரித்துப்போன
அன்று
செருப்பு தைக்கும் எங்கள் ஊசிகளில்
ஒன்று
பழஞ்செருப்பு தைத்தாற்றிக்கொண்டது
ஒன்று
நீங்கள் பேளும் கக்கூஸில் தவறி விழுந்தது
ஒன்று
இக்கவிதையைக் கட்டத் துவங்கியது.

எதிர்ப்படும் போதெல்லாம்
என்மேல் காறி உமிழ்வதை
ஒரு பிறவிக்கடமையைப் போலவே
செய்து வருகிறாய்.
தாமதமாகவே உறைத்தது
உன்வெள்ளுடுப்பை, வெடுக்கென்ற நடையை
நிச்சயிக்க வென்றே
எச்சில் நீர் ஊறும் ரகசியம்.
இப்போதெல்லாம்
உன் வாயிலடைக்க
கைகளில் கொண்டு திரிகிறேன்
தூமைத்துணிகளையும்
தூமையில் தோய்ந்த இக்கவிதைகளையும்



சாதி மீறி நேசித்தவள்களின்
குழிகளின் மீதிருந்து
சிரிக்கிறார்கள் நரிப்பயல்கள்
பலபட்டறைச் சாதியென்று
எங்களை.
அத்தனை தந்திரத்துடன்
சாதியைப் படைத்த
சுன்னியாண்டிக்கு
அதை பத்திரப்படுத்த
பொம்பளைகள் சாமான்தானா கிடைத்தது?

மதிவண்ணன் கவிதைகள்

www.padippakam.com


# புதிய தடம்

இதழ 12

ஜூலை – செப்டம்பர் 2003

☆

வெளியீடு

சமூக விஞ்ஞானப் பயிலகம்,

தமிழ்நாடு

☆

ஆசிரியர் குழு

மேகவண்ணன்

கருணாகரன்

குமரன்தாஸ்

இளம்பரிதி

ஸ்டாலின்

அசோக்

ரமேஷ்

ஹவி

☆



தொடர்புக்கு

மேகவண்ணன்

44, லெட்சுமண தீர்த்தம் தெரு,

இராமேசுவரம் – 623 526.

தமிழ்நாடு

☆

தொலைபேசி

(04573) 22456, 22482

☆

மின்னஞ்சல்

puthiyathadam@yahoo.com

☆



த.சி.ச. பதிவு எண்: 213/01/1999

☆

சந்தா

ரூ.100/- ( பத்து இதழ்கள் )

நன்கொடைகளை

M.Murugesan

என்ற பெயரில் அனுப்பவும்

☆

உள் ஓவியங்கள்

உலகு பெருவை

செந்தில் செல்வன்

முகப்பு ஓவியம்: யாக்கன்

☆

கணினி மற்றும் அச்சாக்கம்

முல்லை ஆர்ட்ஸ் & கிராப்ட்ஸ்

1, அப்பாவு கிராமணி தெரு

எல்லீஸ் சாலை சென்னை – 2

பேச: 044 – 52 15 63 20


## தலையங்கம்


புகுமுன் 4


## நேர் காணல்


வ. கீதா 5

சுகன் கனகசபை 27


## கவிதைகள்


மதிவண்ணன் 2

விஸ்வாமித்திரன் 20

என். டி. ராஜ்குமார் 39

மேகவண்ணன் 40

ஸ்ரீதேவி 40


## சிறுகதை


பாப்லோ அறிவுக் குயில் 32


## கட்டுரைகள்


இளம்பரிதி 11

மதிவண்ணன் 16

குமரன்தாஸ் 22

இந்திரா 38


## கடிதங்கள்


தடம் தொட்டு 36




படிப்பகம்

www.padippakam.com

## புகுமுன்...

# பார்ப்பனியத்தின் அரசியல் பாசிசம்
# பாசிசத்தின் தத்துவம் பார்ப்பனியம்

கடந்த இதழ் வெளிவந்து ஆண்டு ஒன்று ஆகிவிட்டது. காலாண்டிதழாக, தொடர்ச்சியைப் பேணுவதற்கு - ஒவ்வொரு இதழையும் தயாரித்து முடிக்கும் தருணத்தில் எடுத்துக் கொள்ளும் உறுதி (Promise)யை - இனிவரும் காலமேனும் அக்கறையோடு முயற்சிப்போம். 'தடம் தொட்டு' உறவு பேணும் தோழர்கள் படைப்புப் பங்களிப்பு, இதழ் பரவலாக்கம், 'சந்தா' நன்கொடை, விமர்சன ஊக்குவிப்பு என தொய்வின்றி இதழையும் உடன் தம்மையும் வெளிக்கொணர வேண்டுமென கேட்டுக்கொள்ளுமிடத் தில்... ஞாபகமூட்டுகிறோம் - இன்னும் மீந்திருக்கும் எழுதப்படாத சில வரிகளையும் சொல்லப்படாத சில பேச்சுக்களையும்.

ஏறத்தாழ மூன்று வருடங்கள் முடியப் போகிறது - 'பாப்பாத்தி' என்று தன்னைப் பெருமிதத்துடன் அழைத்துக்கொண்ட ஜெயலலிதா தமிழகத்தின் முதலமைச்சராகக் கொலுவிலேறி (அ) முடிசூட்டிக் கொண்டு. அம்மாமியின் நவராத்திரிக் கொலு வைபவக் கூடத்தில் சம்மணமிட்டு உட்கார்ந்திருக்கிறது - பஜனை பாடவும், ஸ்லோகங்கள் சொல்லவும், சுண்டல் வாங்கவும் கூடியிருக்கும் கூட்டம். வந்தவர்கள் வேடிக்கை பார்த்திருக்க, கொலு பொம்மைகளைத் தன் விருப்பம்போல இடம் மாற்றி விளையாடிக்கொண்டிருக்கிறாள் அம்மாமி. இந்த இடத்தில் ஏனோ 'சோ'வின் துக்ளக் தர்பார் நினைவுக்கு வருகிறது. கொலு அவளுடையதாக இருக்கலாம். பொம்மைகள் அவளுடையதாக இருக்கலாம். வீடும் அவளுடையதாக இருக்கலாம். வீதி அவளுடையதா? இருக்க முடியாது.

காவிரி காய்ந்துபோனதால் வயிறு வறண்ட விவசாயிகளும், தறி நின்று போனதால் கஞ்சித் தொட்டிகளின் முன்னே கூடியிருக்கும் நெசவாளர்களும், ஏற்கனவே அனுபவித்து வந்த சலுகைகள் பறிபோய் விடுமோவென தவிப்பிலிருக்கும் அரசு ஊழியர்களும், மாதத்திற் கொன்றாய் கதவடைக்கப்படும் ஆலைத் தொழிலாளர்களும், வேலை கேட்டு அலைந்துகொண்டிருக்கும் படித்த / படிக்காத இளைஞர்களும் பசிக்கு எலிக்கறி தின்னும் பூர்வகுடிகளும், இன்னும் தீண்டத் 'தகாத' தலித் மக்களும் குழுமியிருக்கும் வீதி. ஆம்! வீதி நம்முடையது.

வந்தேறிகளுக்கு அக்கறை கொள்ள என்ன இருக்கிறது? - வீதிக்கு வந்தவர்களைப் பற்றி. 750 கோடியில் வீராணம் குடிநீர்த் திட்டம், 10 ஆயிரம் கோடியில் புதிய நிர்வாக நகரம் (New Chennai), மகாநதியைக் குண்டாற்றோடு இணைத்து தமிழ்நாட்டை வளப்படுத்தும் சபதம் என தான் அடிக்கும் சவடால் எல்லாம் தனது பாசிச முகத்தை மூடிக்கொள்ளப் போதுமானதாயிருக்காது ஜெயாவுக்கு. நெடுமாறன், வைகோ, நக்கீரன் கோபால் மற்றும் 25 நக்சல்பாரி தோழர்களும் சில தமிழ் தேசிய உணர்வாளர்களும் சிறைபடுத்தப்பட்டுள்ளனர் பொடா சட்டத்தின்கீழ். தருமபுரியில் சிவாவும், சென்னையில் ராஜாராம் - சரவணன் இருவரும் 'மோதல்' என்ற பெயரில் காவல்துறையால் படுகொலை செய்யப் பட்டுள்ளனர். இன்னும் சிலருக்கு காத்திருக்கிறது 'Encounter'

'அரசைக் கேள்வி கேட்கும் எந்தப் பண்பாடும் தமிழ்நாட்டில் வளரவில்லை' என்று எழுத்தாளர் வ.கீதாதனது நேர்காணலில் குறிப்பிடுவதுபோல, தமிழ்ச்சமூகம் இருக்கும்வரை தேர்தல் மூலம் பதவிக்கு வரும் எந்தவொரு நபரும் / அரசும் பாசிசப் பாதைக்கு எளிதாக சென்றுவிட வாய்ப்பிருக்கிறது. ஜெயலலிதாவைப் பற்றி பேசிக்கொண்டிருந்தால் சங்கராச்சாரி ஜெயேந்திரனை நினைக்காமல் இருக்க முடிவதில்லை. காஞ்சி சங்கர மடத்திலிருந்து 8 கி.மீ. தொலைவிலுள்ள கூத்தரம்பாக்கம் என்ற கிராமத்தில் மிகச் சிறுபான்மையினராக இருக்கும் தலித் மக்கள் ஊர் பொதுக் கோவில் திருவிழாவின்போது, வலம்வரும் சாமித்தேர் தங்களுடைய குடியிருப்பு தெருக்களுக்கும் வரவேண்டுமென கோரிக்கை வைத்தபோது, 'நீங்களும் உங்களது தெருக்களும் சுத்தமில்லாமல் இருக்கும்போது, சாமித்தேர் எப்படி வலம் வரும்?' என்று திமிராகப் பேசினான் இந்த பார்ப்பன பயங்கரவாதி.

மதம் மாறுவோம் என்று எச்சரித்தனர் கூத்தரம்பாக்கம் தலித் மக்கள். மதமாற்றத் தடைச் சட்டம் கொண்டுவந்து தலித் மக்களை மிரட்டியது மநு தர்ம அரசு.தருணம் பார்த்திருந்தது (இந்துத்துவ) சாதிவெறி. கடந்த மார்ச் 29ஆம் தேதி கூத்தரம்பாக்கம் ஊராட்சி மன்றத்தலைவராக இருக்கும் கஸ்தூரி மோகன் என்ற 'பெண்' தலைமையில் வன்னியர் 200 பேர் ஆயுதங்களுடன் திரண்டு, தலித் மக்கள் குடியிருப்புக்குள் நுழைந்து கடுமையாகத் தாக்கியதில் 70 வயது மூதாட்டி உட்பட 20 பேர் படுகாயமுற்றிருக்கின்றனர். வருடத்திற்கொரு வன்கொடுமை என்பது வழக்கமாகி, தலித் ஒடுக்குமுறையின் 'நினைவு' நாட்கள் கூடிக்கொண்டேயிருக்கின்றன.

விரல்களை 'வாயில்' வைத்துக்கொள்ளச் சொல்லுகின்றன அதிகார வர்க்கமும் ஆதிக்க சாதிகளும் கைகோர்த்திருக்கும் 'பாசிச' அரசுகள். தீர்க்கமான அரசியல் செயல்திட்டங்களை வகுக்க வேண்டிய நெருக்கடி தலித் அமைப்புகளுக்கு எழுந்துள்ளது. சாதி இந்துக்களுக்கு உறுத்தலாகவே இருந்து வருகின்றன தலித் இடஒதுக்கீடுகளும், வன்கொடுமை தடுப்புச் சட்டமும் என்ற போதிலும் இவை போதுமா? என்பதையும் முடிவு செய்யச் சொல்லுகின்றன தொடரும் வன்கொடுமைகளும், சாதி இந்து பொதுப்புத்தியும். தோழர் சுகன் தனது நேர்காணலில் குறிப்பிடும் தலித் தலைமைத்துவமும், எதிர் தாக்குதல் அரசியலும் ஈழத்திற்கு மட்டும் பொருந்துவன அல்ல - நமக்கும்தான்.

இந்த இதழ் தயாரிப்பின்போது, ஒரு நண்பர் கேட்டார், 'கண்ணீர் உகுக்கும் எழுத்துக்களை மட்டும்தான் பதிவு செய்வீர்களா?' என்று. இலக்கிய கிசுகிசுக்களும், அழகியல் அலங்காரங்களும், அக்கப்போர் விவாதங்களும் மட்டுமே பல சிற்றிதழ்களின் குணங்களாக மாறிப்போயிருக்கும் சூழலில் கண்ணீரில் தோய்ந்த எழுத்துக்களின் பிசுபிசுப்பு சங்கடத்தைத் தரலாம் சிலருக்கு. ஆனால் கவனம்: அந்த ஈரப்பதம் எரியும் தன்மை கொண்டது. அந்த நண்பருக்கும் இன்னும் பலருக்கும் சொல்ல வேண்டியதிருக்கிறது.

**காடுகள் பற்றியெரியும் போது**
**ரோஜாக்களுக்காக வருத்தப்பட நேரமேது**
**- ஸ்லோவாஸ்கி**



படிப்பகம்

www.padippakam.com

# தலித் இயக்கங்களுக்கென தனித்துவமான வரலாறு உண்டு..



**வ.கீதா**

*வெகுகாலமாக மார்க்சியம்,பெண்ணியம்குறித்துதனித்தும் எஸ்.வி.இராஜதுரை அவர்களுடன் இணைந்தும், எழுதியும் பேசியும் வருபவர்.ருஷ்யபுரட்சி–இலக்கிய சாட்சியம்,ஃப்ராங்ஃபர்ட் மார்க்சியம், அன்னா அக்மதோவா கவிதைகள் உள்ளிட்ட பல சிறந்த மொழிபெயர்ப்பு கவிதைகள் என மார்க்சிய அறிவுத் தளத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களித்தவர்.பெரியார் – திராவிட இயக்கம் குறித்து கடுமையான விமர்சனங்கள் எழுந் திருக்கும் சூழலில் "சுயமரியாதை சமதர்மம்", "ஆகஸ்ட் 15"என பெரியாரியம் குறித்த அக்கறையான ஆய்வுகளை எஸ்.வி.ஆரோடு இணைந்து செய்திருப்பவர்.தலித் அரசியல் , தலித் இலக்கியம் மீது நம்பிக்கை கொண்டிருப் பவர். ஆங்கிலத்திலும் எழுதிக்கொண்டிருப் பவர். மதுரையில் அவரை சந்தித்து உரை யாடினர்* **ஹவியும் ஸ்டாலினும்.**

***ஹவி :*** ***பெண் விடுதலையில் திராவிட இயக்கங்களுக்கு எந்த அளவு அக்கறை இருந்தது? பல நேரங்களில் பெண் விடுதலைக்கு எதிரான நிலைப்பாடுகளையே திராவிட இயக்கங்கள் எடுத்துள்ளன என்று கருத இடமுள்ளது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?***

வ.கீதா: பெரியார் வாழ்ந்து செயல்பட்ட காலத்திலேயேகூட சுயமரியாதை இயக்கப் பெண்களுக்கே இப்படியான ஐயப்பாடு இருந்திருக்கிறது. 1930-35க்கு இடைப்பட்ட காலத்தில் பெண்களுக்கென தனியாக விடுதி தொடங்க வேண்டுமென்ற பேச்சு அடிபடும்போது, நீலாவதி அம்மையார், ''இந்த ஆண்களெல்லாம் சோசலிசம், உலக் முதலாளித்துவம், கடவுள் மறுப்புக் கொள்கை எல்லாம் பேசிய நேரம்போக மீதி நேரங்களில்தான் பெண் விடுதலை பேச வருவாங்க'' என்று கிண்டலாக சொல்கிறார். இயக்கத்துப் பெண்கள் பெண் விடுதலை பற்றி மட்டும் பேசாமல் சுயமரியாதை இயக்கம் எந்தெந்தத் தளங்களில் செயல்பட்டதோ, அத்தனை தளங்களிலும் தங்களை இணைத்துக் கொண்டு செயலாற்றி இருக்காங்க. அந்த அளவுக்கு தங்களைத் தாங்களே அறிந்து கொள்வதற்கும் பெண் அறிவாளிகளாக, பெண்ணியச் சிந்தனையாளர்களாக மேம்படுத்திக் கொள்வதற்கும் சுயமரியாதை இயக்கம் உறுதுணையாக இருந்திருக்கு. என்னைப் பொறுத்தவரை இந்தி எதிர்ப்புப் போர்ராட்ட காலகட்டத்தில்தான் இந்தப் போக்கில் ஒரு மனமாற்றம் ஏற்படுகிறது. இந்தி எதிர்ப்புப் போராட்ட காலகட்டத்து 'குடியரசு' எடுத்துப் பார்த்தோமானால் முன்னெப்போதும் இல்லாத அளவுக்குப் பெண்களை உருவகப்படுத்தும் சொற்பிரயோகங்கள் இருப்பதைக் காணலாம். அதற்குக் காரணம் என்னவென்றால் மொழி, பண்பாடு, சமூகநலன் இவையெல்லாம் ஏதோவொரு வகையில் பெண்களுடைய மாண்பு, தூய்மை இவற்றோடு தொடர்புடையதாகப் பார்க்கும்போக்கு உருவாகிறது. தமிழ்த்தாய் என்று குறிப்பிடும் இடங்களில் இந்தியை செவிலித்தாய் என்று சொல்வதும், அதன் தொடர்ச்சியாக பல்வேறு நேரங்களில் மொழி / பண்பாடு என்று வரும்பொழுது பெண்ணின் உடம்பைக் குறியீடாகப் பயன்படுத்தும் போக்கையும் நாம் பார்க்கலாம். இந்தி எதிர்ப்பு இயக்கத்திற்கு முன்னர், கறாரான சுயமரியாதைக் கொள்கை உடையவர்கள் மட்டுமே இயக்கத்தில் செயல்பட்டார்கள். அவர்களிடம் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கை குறித்து தெளிவு இருந்தது. ஆனால் இந்தி எதிர்ப்புப் போராட்டம் / தமிழ் உணர்வு என்று வந்தவுடன் சைவர்கள், தமிழ் ஆசிரியர்கள் என பல்வேறுதரப்பினரும் இயக்கத்துடன் இணைந்து கொண்டனர். மொழி, பண்பாடு என்று வரும் பொழுது நம்மையும் அறியாமல் நம் உணர்வுப் பிரவாகம் குறிக்கீடு செய்கிறது இல்லையா?

***ஹவி:*** ***சாதி மறுப்பு திருமணம், சுயமரியாதை திருமணம் அந்த காலகட்டங்களில் அதிகம் நடைபெற்றன. ஆனால் காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றத்திற்கான காரணம் என்ன?***

வ.கீதா: இத்தகைய மாற்றங்களை இந்தி எதிர்ப்புப் போராட்ட காலகட்டத்தின் பின்புலத்தில் வைத்து மதிப்பீடு செய்வது பயனுடையதாக இருக்கும் என்று நினைக்கிறேன். தமிழ் உணர்வுடன் நிறைய 'ஆதிதிராவிட அமைப்புகள் தங்களை சுயமரியாதை இயக்கத்துடன், அப்பொழுது இணைத்துக் கொண்டனர். ஆனாலும் அக்கால கட்டத்தில் 'பெண் விடுதலை' குறித்துப் பேசப் பட்ட அளவுக்குகூட 'தாழ்த்தப்பட்டோர் நலன்' பேசப்படவில்லை என்பதையும் நாம் பார்க்க வேண்டும். இந்தி எதிர்ப்பு அரசியலை



படிப்பகம்

www.padippakam.com

ஆதாரமாகக் கொண்டு கனிந்த தமிழ்தேசியத்தை பரவலாக்கி சாதாரண மக்களை அரசியல் வாழ்க்கைக்குக் கொண்டு வந்த தி.மு.க.வின் வரலாற்றுப் பங்களிப்பு மகத்தானது. அதை மறுக்க முடியாது. ஆனாலும்கூட அவர்கள் எந்த அளவுக்கு எளிய மக்களை அரசியல் தளத்துக்கு கொண்டு வந்தனரோ, அதே அளவு அடிப்படை விசயங்களை மறைத்தும் விட்டனர். அவற்றில் முக்கியமான ஒன்று 'பெண் விடுதலை'. 'தாழ்த்தப்பட்டோர் நலன்' பற்றி பேசிக்கொண்டே தான் இருந்தார்கள் என்றாலும் எந்த அளவுக்கு செயல்பாட்டில் காட்டியிருக்கிறார்கள் என்று ஆய்வு செய்தோமானால் யதார்த்தம் உவப்பளிக்கக்கூடியதாக இல்லை. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் மூலமாக தேசிய பிரச்சினை முன்னுக்கு வந்தபொழுது, மக்கள் மத்தியில் பெரிய அரசியல் சக்தியாக உருவெடுத்த தி.மு.க.வினரின் அரசியல் செயல்பாட்டினால் சுயமரியாதை இயக்கத்தின் பல்வேறு நிலைப்பாடுகளில், குறிப்பாக பெண்ணிய, சாதிய எதிர்ப்பு நிலைப்பாடுகளில் பல மாற்றங்கள், விட்டுக் கொடுத்தல்கள் நிகழ்ந்தன.



**"தலித்துகள் எப்படி இருக்கவேண்டும்? என்று கருத்து சொல்ல பிற தலித்துகளுக்கு மட்டுமே உரிமை இருப்பதாக நான் நினைக்கிறேன். பிறர் சொல்லும் குற்றச்சாட்டுகளில் வரலாற்று நியாயங்கள் இல்லாமல் இருப்பதால்தான் இப்படிப்பட்ட அறநிலைப்பாட்டை நாம் வலியுறுத்த வேண்டியுள்ளது."**

***ஸ்டாலின்:** திராவிட இயக்கங்கள் மொழி, பண்பாடு, கடவுள், மதம் முதலியவற்றுடன் தொடர்புடைய வேலைகளைச் செய்தன என்றாலும், அனைத்தையுமே அவர்கள் மேலோட்டமான பார்வைக்கு உட்படுத்தியதாக ஒரு குற்றச்சாட்டு உள்ளது. அதன் காரணமாகவே மாற்று சிந்தனைகளை, உதாரணமாக அம்பேத்கர் அவர்கள் முன்வைத்த 'பௌத்தம் தழுவுதல்' போல ஒரு மாற்றுச் செயல்பாட்டை இவர்களால் முன்வைக்க முடியவில்லையோ என்ற கேள்வியும் எழுகின்றது. இதன் தொடர்ச்சியாகவே கருணாநிதி அவர்களின் 'சங்கராச்சாரி எதிர்ப்பும்' தி.மு.க.வினரின் மத்தியில் எவ்விதத் தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாமல் போகிறதோ?*

**வ.கீதா:** வரலாற்று ரீதியாக பார்க்கையில் மாற்றுக் கருத்து என்பது 1930களில் தெளிவாக இருந்திருக்கிறது என்பது தெளிவு. பகுத்தறிவு சிந்தனையை வளர்க்கவேண்டும், சமச்சீரான உலகத்தை உருவாக்கவேண்டும் என்பன போன்ற கருத்துக்கள் வலுப்பெற்றன. 'சோசலிசம்' குறித்த சொல்லாடல்கள் பெருகின. திராவிட இயக்கத்தினர், ஒரு கம்யூனிஸ்ட் கட்சி புரிந்து கொள்வது போல சோசலிசத்தைப் புரிந்து கொள்ளவில்லை. அதே நேரத்தில் கம்யூனிஸ்ட் கட்சி பார்க்கத் தவறிய பல விசயங்களில் அவர்கள் கவனம் செலுத்தினர். குறிப்பாக சமயம், சாதி, பண்பாடு தொடர்பானவற்றில் அவர்கள் அதிக அக்கறை செலுத்தினர். 'புரட்சி', 'குடியரசு' இதழ்களில் பல்வேறு விசயங்களைப் பற்றி கட்டுரை எழுதியிருக்கிறார்கள். இத்தாலியில் `Decameron' என்ற மத்திய காலத்தில் எழுதப்பட்ட நூலைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். கிறித்தவப் பாதிரியார்களைக் கேலி செய்யும் நிறைய கவிதைகளோடு வெளிவந்த அப்புத்தகத்தை மொழிபெயர்த்து இங்கே வெளியிடுகிறார்கள். லட்சுமிநாதன் பாரதி என்பவர் ட்ராட்ஸ்கி பற்றியெல்லாம் படித்துவிட்டு, அவர் தேசிய இனப் பிரச்சனை குறித்து என்ன சொல்கிறார் என்று கட்டுரை எழுதினார். ஒரு நவீன பரந்துபட்ட உலகப் பார்வை கொண்ட அறிவாளிகள் இப்படித்தான் சிந்திக்கவேண்டும் என்பதுபோல முன்மாதிரியான பல்வேறு விசயங்களை முதல் தலைமுறையினர் செய்து காட்டினர். எப்பொழுது, அவர்களில் சிலர் 'தேசியம்' என்று பேசத் தொடங்கினார்களோ, (தேர்தல்) அரசியலில் இறங்க முடிவு செய்தார்களோ அப்பொழுதே அவர்கள் சிந்தனையில் சறுக்கல் ஆரம்பமாகி விட்டது. கடவுள் மறுப்புக் கொள்கையே பெரியாரிடமிருந்து அண்ணா துரைக்கு வரும்பொழுது பெரிய சரிவோடுதான் வருகிறது. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என பெரியாரிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் கொண்ட அண்ணாதுரை இந்திய தேசியத்துடன் சமரசம் செய்து கொள்கிறார். அண்ணாவின் கால கட்டத்திலும், அதற்குப் பிறகும் நிறைய மாற்றங்கள் (பெரியாரிய சிதைவுகள்) ஏற்படுவதாக நான் உணர்கிறேன். 'பகுத்தறிவு' என்று பேசிய இடத்தில் 'உணர்வு' என்று பேசினார்கள். சுயமரியாதை என்ற இடத்தில் 'மானம்' என்று பேசினார்கள். சுயமரியாதை வேறு, மானம் என்பது வேறு. சுயமரியாதை என்பதை நீங்க எப்படிப் புரிந்துகொண்டாலும் அது அடிப்படையில் சமூகத்தளத்தில் உறுதிபடுத்தப்படுமொரு விழுமியம். மானம் என்று வரும்பொழுது தனிப்பட்ட உணர்வு மேலோங்குகிறது. அதாவது தன்னுடைய ஆளுமையைப் பிறர் சிறுமைப்படுத்தி விட்டதாக நினைப்பதற்கு, இந்த மானம் என்ற கருத்தாக்கம் உதவியாக இருக்கிறது. இதன் தொடர்ச்சியாக சிறுமை/ பெருமை என்ற கருத்தாக்கம் வளர்ச்சி பெறுகிறது. சுயமரியாதையில் சிறுமை/ பெருமை என்பது கிடையாது. எங்கே ஒடுக்குமுறை (அ) அடக்குமுறை என்று உள்ளதோ அதனை மறுதலித்து அடங்கமறுத்தல் (அ) கலகம் செய்தல் என்பது நிகழ்த்தப்படுகிறது. இப்படிப் பெரியாரிய கருத்துக்களில் / உள்ளடக்கத்தில் நிறைய சிதைவுகள் ஏற்பட்டன. அதே நேரத்தில் வேறு சில ' விநோதமான' விசயங்களையும் தி.மு.க.வினர் செயல்படுத்தினார்கள். அதாவது சங்க இலக்கியம், சிலப்பதிகாரம் போன்றவற்றை சனரஞ்சகப்படுத்துவது. எப்பொழுதுமே இருந்திராத ஒரு தமிழ்ப் பொற்காலத்தை இவர்களாகக் கற்பனை செய்து, அதை எல்லா இளைஞர்களிடமும் எடுத்துச் சென்று ' தமிழன் இப்படித் தான் வாழ்ந்தான்' என்று சொல்லி அவர்களை ஈர்ப்பது' என குறிப்பாக, 50களில் தொடங்கிய அவர்களின் பிரச்சாரத்தினால் வர்க்கம், சாதி கடந்த பொது தமிழ் உணர்வைக் கட்டி எழுப்புவதில் வெற்றி பெற்றனர். ஆதிதிராவிடர் உட்பட நிறையப் பேர் அப்படிப்பட்ட பொதுமை உணர்வில் (தமிழ் உணர்வில்) இணைந்தனர். அத்தகைய பொதுமை ஒரு மருட்சியே என்று இன்றைக்கு நாம் சொன்னாலும், அன்று அந்த அனுபவத்தை உணர்ந்தவர்களுக்கு அது போலியான உணர்வாகத் தோன்றவில்லை. வரலாற்று ரீதியாக நடைபெற்ற இதன் நடைமுறைப் பலன் (actual Impact) என்னவென்று பார்த்தல் வேண்டும்.

***ஸ்டாலின்:** பெரியார் தாழ்த்தப்பட்டோர் விடுதலையையும் இணைத்தே பார்ப்பனர் அல்லாதோர் என்ற கருத்தாக்கத்தை முன்வைத்துப் பேசினார். ஆனால் 60களுக்குப் பிறகு திராவிட இயக்கம் இடைநிலைச் சாதிகளுக்கான அதிகாரத் தளமாக மாறிவிட்டது. இவ்வகையான இயக்கப் போக்கில் தலித் விடுதலை குறித்து திராவிட இயக்கங்களின் பார்வையும், பங்களிப்பும் என்னவாக இருக்கிறது?*



படிப்பகம்

www.padippakam.com

வ.கீதா: திராவிட இயக்கம் தலித் விடுதலைக்கு ஆதரவாக நின்றதாக, இன்று பொது நினைவிலோ அல்லது கூட்டு நினைவிலோ எதுவும் இல்லை. 10-20 வருடங்களுக்கு முன்பு இருந்திருக்கலாம். இன்று அப்படியான நினைவுகள் இல்லாமல் போனதற்கு இரண்டு காரணங்களைச் சொல்லலாம். ஒன்று 20 வருடங்களாக திராவிட இயக்கங்களில் ஏற்பட்ட மோசமான சரிவு. மற்றொன்று மிக வலுவான தலித் எழுச்சி. எந்தவொரு இயக்கமும் தன்னுடைய எழுச்சிக்கு நியாயம் சேர்ப்பதுபோலத்தான் வரலாற்றைக் கட்டமைக்கும். தனக்குத்தானே ஒரு உலகப் பார்வையை உருவாக்கி அதைப் பொதுமைப் படுத்துவதே அனைத்து அரசியல் இயக்கங்களும் செய்கின்ற வேலை. தலித் இயக்கங்களும் அதைத்தான் செய்து வருகின்றன. 80களின் கடையாண்டுகளில் ஒலிக்கத் தொடங்கிய தலித் குரல் இன்று வலுப்பெற, வலுப்பெற, 'எங்கள் வரலாற்றை நாங்கள்தான் எழுதுவோம்' என்ற கருத்தும் பலப்படுகிறது. தலித்துகள் கட்டமைக்கும் வரலாற்றில் இன்றைய அரசியல், சமூக நிர்ப்பந்தங்களின் நிழல் குறுக்கிடுவதால் கடந்தகாலத்தை வேறுவிதமாக அர்த்தப்படுத்திக் கொள்ளும் கட்டாயம் ஏற்பட்டு விடுகிறது. இதனால்தான் பெரியாரின் சிந்தனை, நடைமுறை ஆகியன பல்வேறுவிதமான வினோத தர்க்கங்களுக்கு உட்படுத்தப்படுகின்றன. ரவிக்குமார் போன்றோர் பெரியார் குறித்து ஒரு பகுதியை மேற்கோள் காட்டும் போது, இன்னொரு பகுதியை மறைத்து விடுகின்றனர். துண்டு துண்டாக மேற்கோள்களைப் பயன்படுத்தும் போது நிறைய சிக்கல்கள் உருவாகிறது. தலித் முரசு-ல் புனித பாண்டியன்கூட இதைத் தெளிவாக விளக்கி யுள்ளார். புனித பாண்டியன் பார்வையில் எனக்கு முழு உடன்பாடு உண்டு. பெரியார் விமர்சனத்திற்கு அப்பாற் பட்டவர் அல்லர். சமகாலக் கோபவுணர்வை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு வரலாற்றை சகட்டுமேனிக்கு விளக்குவது என்பது பெரியார் குறித்த காத்திரமான ஆய்வுகளுக்கு நம்மை இட்டுச் செல்லப் போவதில்லை. திராவிட இயக்கங்களின் அரசியல் போதாமையை கோபத்துடன் மட்டுமின்றி நேர்மையாகவும் நாம் ஆராய வேண்டும்.

***ஹவி: திராவிட இயக்கம் பெரியாரின் நிலைப்பாடுகளை காலப்போக்கில் படிப்படியாக கைவிட்டுவிட்ட நிலையில் , இடதுசாரிகளும் சாதி ஒழிப்பு குறித்து தங்கள் வேலையை சரியாகச் செய்யாத காரணத்தினால்தான் தலித் எழுச்சி வீறு கொண்டதா? அல்லது தனித்துவம் மிகுந்ததாக உருவெடுத்ததா?***

வ.கீதா: தலித் இயக்கங்களுக்கென தனித்துவமான வரலாறு உண்டு. இடதுசாரி இயக்கங்கள் தங்கள் வேலையை சரியாக செய்திருந்தால்கூட தலித் இயக்கங்கள் உருவாகியேயிருக்கும். தனித்துவமான தலித் இயக்கங்கள் உருவாவதற்கான எல்லா சமூக / வரலாற்று சாத்தியப் பாடுகளும் நம் சமுதாயத்தில் இருந்தன / இருக்கின்றன. பெண்களுக்கு சம உரிமைவேண்டும் என்று கேட்கின்ற அதே நேரத்தில் காலம் காலமாகப் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்காகத் தனிப் பட்ட சலுகைகள் வேண்டும் என்றும் கேட்பது போல, சமநீதி, சம கௌரவம் கேட்கும் அதே நேரத்தில் சாதி ரீதியாக இழிவுபடுத்தப் பட்ட காரணத்தால், தனிப்பட்ட சலுகைகளைப் பெற்றுத்தான் தலித்கள் மற்றவர்களோடு போட்டி போடக்கூடிய வகையில் தங்களை மேம்படுத்திக் கொள்ள முடியும். இதனால் தலித்கள் தனியாகவும் இயங்க வேண்டியுள்ளது.



**பார்ப்பனர்களிடமிருந்து இடைநிலைச் சாதியினர் அதிகாரங்களைக் கைப்பற்றியுள்ளனர் என்று சொல்ல முடியாது.பார்ப்பனர்கள் தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்திக்கொள்வதற்காக இடைநிலைச் சாதிகளோடு அதிகாரத்தைப் பகிர்ந்துகொண்டுள்ளனர் என்பதுதான் யதார்த்தம்.**

***ஸ்டாலின்: பெரியார் தலைமையிலான திராவிட இயக்கம் உருவாவதற்கு முன்பாகவே அயோத்திதாசர், இரட்டைமலை சீனிவாசனார், எம்.சி.ராஜா, சிவராஜ் என ஒரு மரபுத் தொடர்ச்சி இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் இருந்துள்ளது. இந்த நூற்றாண்டின் துவக்கத்திலேயே உருவான தலித் எழுச்சி பார்ப்பனர் அல்லாதோர் என்ற பொதுவான பெயரில் தடுக்கப்பட்டதா? திராவிட இயக்கத்தின் தற்போதைய சிதைவிலிருந்துதான் மங்கிப் போயிருந்த தலித் எழுச்சி மீண்டும் எழுந்து வருகின்றதா?***

வ.கீதா: அயோத்திதாசர், எம்.சி.ராஜா, இரட்டைமலை சீனிவாசன் போன்றவர்களை நாம் இயக்கத் தலைவர்களாகக் கருத முடியுமா? என்று தெரிய வில்லை. இன்று அவர்களது நினைவு தலித் அரசியலுக்கு ஆதாரமாக உள்ள போதிலும், அவர்கள் வாழ்ந்த காலகட்டத்தில் அவர்கள் அவ்வாறு கருதப்பட்டதற்கான சான்றுகள் இல்லை. திராவிட மகாஜன சங்கம் மற்றும் சில அமைப்புகளை அயோத்தி தாசர் உருவாக்கியிருந்தாலும், அவை வகுப்பு (சாதி) அமைப்புகளாகத்தான் பிறரால் அணுகப்பட்டது. பறையர்களைத் தவிர்த்து மற்றவர்கள் அதில் இணைந் தார்கள் எனச் சொல்ல முடியாது. அரசியல் ரீதியாக பெரிய இயக்கமாக இறங்கி, அவர்களால் எதுவும் செய்ய முடியாததற்குக் காரணம், வரலாற்றுப்பூர்வமாக, 19ம் நூற்றாண்டின் இறுதியிலோ, 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலோ ஒரு பெரிய மக்கள் இயக்கம் கட்டுவதற் கான சூழல் இந்தியாவில் இல்லை என்பதுதான். ஆங்கிலம் தெரிந்த நான்குபேர் கூடிப் பேசுவதாக இருந்த தேசிய காங்கிரஸ் இயக்கம்கூட அப்பொழுது மக்கள் இயக்கமாக இல்லை. நீங்கள் குறிப்பிடும் தலைவர்களைக் கருத்தியல் முன்னோடிகளாகப் பார்க்கலாம். ஆனால் இயக்க ரீதியாக சுய மரியாதை இயக்கத்திற்கு தனிப்பெரும் இடம் உண்டு. நீங்கள் குறிப்பிட்ட தலைவர்களின் சிந்தனைகளை உள்வாங்கிக் கொண்டு, சுயமரியாதை இயக்கத்த வர்கள் ஒட்டுமொத்த சமூக விடுதலையோடு, அதை இணைத்துப் பேசினார்கள். மேலும் தலித் இயக்கப் பின்புலத்தில் வந்த அனைவரும் தன்னிச்சையாகவே, சுயமரியாதை இயக்கத்துடன் தங்களை இணைத்துக் கொண்டனர். 'தமிழன்' பத்திரிகைக்கு குடியரசிலும், 'குடியரசு' பத்திரிகைக்கு தமிழன் பத்திரிகையிலும் பரஸ்பரம் விளம்பரம் செய்திருக்கிறார்கள். அவர்களுக்குள் அரசியல் ரீதியான உறவு இருந்திருக்கிறது.

***ஸ்டாலின்: இங்குள்ள மரபு, பண்பாடு முதலியவையும் சாதி, மதம் போன்றவையும் பின்னிப் பிணைந்துள்ள சூழலில் அடுத்தகட்ட சரியான வரலாற்றுப் பாதைக்கு நமக்கு எத்தகைய மரபு வேண்டும்? ஒரு தலித் ஆய்வாளராக மரபு குறித்துப் பேச வரும்பொழுது ராஜ் கௌதமன் கூட வள்ளலாரைப் பற்றி எழுதுவதற்கு நீங்கள் தூண்டுதலாக இருந்ததாகக் குறிப்பிடுகிறார்...***



படிப்பகம்

www.padippakam.com

**“இந்துத்துவத்திற்கு எதிரான போராட்டம் என்பது அரசியல் ரீதியான போராட்டமாகத்தான் இருக்க முடியும். அத்தகைய போராட்டத்தை தலித் மக்களும், பார்ப்பனர் அல்லாத ஜனநாயக சக்திகளும் இணைந்து செய்வதுதான் சரியானதாக இருக்கும்.”**



வ.கீதா: தெய்வ வழிபாடு என்பது இயல்பான, வாழ்க்கையோடு ஒட்டிய விசயமாகத்தான் பலருக்கும் இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் நிறையப்பேர் அதற்கு முக்கியத்துவம் கொடுப்ப தில்லை. ஆனால் கடந்த பத்து ஆண்டுகளில் ஆர்.எஸ்.எஸ்.சின் தீவிர வளர்ச்சியும், பா.ஜ.க.வின் அரசியலும் அதற்கு முக்கியத்துவம் தரக்கூடிய சூழலை உருவாக்கியுள்ளன. வரலாற்று ரீதியாக, இந்தியாவில் சாதி அடையாளம் சமயத்துடன் தொடர்பு கொண்டதாகவே இருக்கிறது. சாதியுணர்வுடன் கூடிய சமயவுணர்வுதான் நமது பண்பாட்டு வெளிப்பாடுகளை ஆட்கொண்டுள்ளது. இப்படிப்பட்ட சூழலில் நமது மரபு என்று எதைச் சொல்ல முடியும் என்பது குழப்பமாகவே இருக்கிறது. ஆனால் நமது கற்பனையே சாதியோடும், மரபோடும், அது வளர்த்த பண்பாட்டோடும்தான் இருக்கிறது. இதனால் என்னைப் பொறுத்தவரை மரபை எளிதாகப் புறந்தள்ளிவிட முடியாது.

ராஜ் கௌதமன் அவரது ஆரம்பகால 'தலித் பண்பாடு' வரையறையில் எதுவுமே வேண்டாம் என்றுதான் சொல்கிறார். பிறகு எழுதிய இலக்கிய வரலாற்றில் சங்க இலக்கியத்தின் ஒழுங்கு, நெறி போன்றவற்றை கேள்விக் குட்படுத்தினாலும், 'பெண், அறம்' சார்ந்த விசயங்கள் மிக முக்கியமானது என்கிறார். ''கலகக்காரனா இருக்கணும், எல்லாத்தையும் உடைக்கணும், தலைகீழ் மாற்றம் செய்யணும், கேள்வி கேட்டுக்கொண்டே இருக்கணும்" என்று எழுதியவர், "எந்த ஒரு குறிப்பிட்ட, ஏற்கனவே வரையறுக்கப்பட்ட 'சரி'யான கருத்தியல் எல்லைக் குள்ளும் சிக்காமல், களிப்பூட்டக்கூடிய எந்தவொரு விசயத்தையும் என்னுடைய விடுதலைக்கும் ஒட்டுமொத்த சமூக விடுதலைக்கும் உகந்ததாகத் தான் நான் பார்க்கிறேன். அந்த வரிசையில்தான் அனைத்தையும் என்னுடையதாக வரித்துக்கொள்கிறேன்'' என்று மிகுந்த நம்பிக்கையோடு இன்று எழுதுகிறார். அவரிடம் எனக்குப் பிடித்ததே, மரபு என்பதை அவர் புறந்தள்ளவுமில்லை, பின்பற்றுவது மில்லை. தனது கற்பனையும் வேட்கைகளும் தேடல்களும் பயணிக்கவல்ல ஆடுகளமாக மரபினை உருமாற்றிக்கொண்டுள்ளார்.

***ஸ்டாலின்: இந்துத்துவம் வளர்ச்சி பெறுகின்ற இன்றைய சூழலில், அதை எதிர்ப்பதற்கு பெரியார் காலத்து அணுகுமுறைகள் மட்டுமே போதுமானதா? பார்ப்பனர்களிடமிருந்து கணிசமான அதிகாரங்களை இடைநிலைச் சாதியினர் கைப்பற்றி யுள்ளபோது 'இந்துத்துவ எதிர்ப்பில்' தலித் மற்றும் இடைநிலைச் சாதியினர் ஒற்றுமை என்பது சாத்தியமானதா?***

வ.கீதா: இந்துத்துவம் என்பது ஜனநாயகத்திற்கு விரோதமான வளர்ச்சிப் போக்கு. ஜனநாயகத்தை சிதைப்பதற்கு ''இந்துமதத்தை'' இங்குள்ள இந்துத்துவ சக்திகள் பயன்படுத்திக் கொள்கின்றனர். தமிழ்நாடு ஏன் இந்துத்துவத்தின் களமாக மாறும் அபாயம் இருக்கு என்று நான் சொல்கிறேன்னா, இங்குள்ள அரசு எதைச் செய்தாலும் தட்டிக்கேட்க முடியாதபடி மக்கள் முதுகெலும்பு உடைக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அரசைக் கேள்வி கேட்கும் எந்தப் பண்பாடும் தமிழ்நாட்டில் வளரவில்லை. அப்படி வளரவேண்டிய பண்பாடு பெரியாரைச் சார்ந்த பண்பாடாக இருப்பது நமக்கு நல்லது. பெரியாரைச் சார்ந்த பண்பாடானது வெறும் கடவுள் மறுப்புக் கொள்கையாகத்தான் இருக்கவேண்டும் என்று கட்டாயமில்லை. அடிப்படையில் அது ஒரு கேள்வி கேட்கச் சொல்லும் பண்பாடு. சிந்திக்கத் தூண்டும் பண்பாடு.

பார்ப்பனர்களிடமிருந்து இடைநிலைச் சாதியினர் அதிகாரங்களைக் கைப்பற்றியுள்ளனர் என்று சொல்ல முடியாது. பார்ப்பனர்கள் தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்காக இடைநிலைச் சாதிகளோடு அதிகாரத்தைப் பகிர்ந்துகொண்டுள்ளனர் என்பதுதான் யதார்த்தம். இன்றைக்கு நான் பார்ப்பானாக இருக்க வேண்டுமென்றால் என்னுடைய அதிகாரத்தைப் பகிர்ந்துகொண்டால்தான் முடியும். அதில் பார்ப்பனர்கள் தெளிவாகஇருக்கிறார்கள். ஆனால்பிற்படுத்தப்பட்டவர்கள் அனைவருக்கும் இந்துத்துவத்துடன் கைகோர்த் துக்கொள்வதில்ஆதாயங்கள் உள்ளனவா? என்பதைப் பார்க்க வேண்டும். பார்ப்பனர்களோடு சேர்ந்து ஆதிக்கம் செலுத்துபவர்களின் பின்புலமாக இருப்பது வணிகமா? நிலமா? அரசாங்க உத்தியோகமா? என்றெல்லாம் பார்க்கவேண்டும். கடவுள் பற்றுக்கும் இந்துத்துவத்திற்கும் நேரடியான தொடர்பு இருக்கவேண்டுமென்று அவசிய மில்லை. லல்லுபிரசாத் யாதவ் பெரிய கடவுள் பற்றாளர்தான். ஆனால் இந்துத்துவத்தைக் கடுமையாக எதிர்க்கவும் செய்கிறார். பிற்படுத்தப்பட்டோர் அனைவரும் ஒரேவிதமான சிந்தனையோடு உள்ளனர் என்று சொல்ல முடியுமா? இந்துத்துவம் என்பது மதம் சம்பந்தப்பட்டதா? அரசியல் சம்பந்தப்பட்டதா? என்னைப் பொறுத்தவரை இந்துத்துவத்திற்கு எதிரான போராட்டம் என்பது அரசியல் ரீதியான போராட்டமாகத்தான் இருக்க முடியும். அத்தகைய போராட்டத்தை தலித் மக்களும், பார்ப்பனர் அல்லாத ஜனநாயக சக்திகளும் இணைந்து செய்வதுதான் சரியானதாக இருக்கும். மாறாக 'சாதி' அல்லது 'மதம்' முதலியவற்றை முன்நிறுத்தும் பொழுது, அது இந்துத்துவத்திற்கு சாதகமாக அமைவதற்கு அதிக வாய்ப்பு உண்டு. ஆனால் இந்த 'ஒற்றுமை' இலட்சிய அளவில்தான் உள்ளது என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

***ஸ்டாலின்: பிற்படுத்தப்பட்டோர் அனைவருக்கும் ஒரேவிதமான சிந்தனை கிடையாது எனக் குறிப்பிட்டீர்கள். ஆனால் தங்களுக்குக் கீழாக உள்ள சாதிகளை ஒடுக்குவதில் பிற்படுத்தப்பட்ட சாதிகள் அனைத்தும் ஒரே சிந்தனையோடுதான் உள்ளனர். அதன் காரணமாகத்தான் இந்துத்துவத்துடன் பிற்படுத்தப்பட்ட சாதியினரால் இணக்கமாக இருக்க முடிகிறதென நம்ப இடமில்லையா?***

வ.கீதா: வரலாற்றுப்பூர்வமாகவே இடைநிலைச் சாதியினர் தலித்துகளை ஒடுக்குவதற்கு பார்ப்பானோடு சேர்ந்துக்குவாங்க. அதே நேரத்தில் தலித்துகள் இல்லாத இடங்களில் பார்ப்பானோடு முரண்படவும் செய்வானுங்க. உண்மையிலேயே பி.ஜே.பி., ஆர்.எஸ்.எஸ். பின்னால் இடைநிலைச் சாதியினர் அனைவரும் திரண்டுவிடுவார்கள் என்று சொல்ல முடியுமா? குஜராத்தில் வந்தானுங்கன்னா அதற்குக் காரணம் அங்கு தலித் எழுச்சியோ, சாதி எதிர்ப்புப் போராட்டங்களோ இல்லை. ஆனால் இங்கு அத்தகைய மோசமான சூழல் உள்ளதா? இடைநிலைச் சாதிகளின் ஆணவம் இன்று தொடர்ந்து தன்னை வெளிக்காட்டிக் கொண்டு வருவதற்கான காரணம், அந்த ஆணவம் கண்டுள்ள சவால்கள்தானே? இந்த சவால்களைச் சமாளிக்க இவை எந்தளவுக்கு இந்துத்துவத்தை வரித்துக்கொள்ளும்.



படிப்பகம்

www.padippakam.com

இதுதான் கேள்வி? இந்துத்துவத்திற்கு பலம் உள்ளதாக நாம் சொல்லிக்கொண்டேயிருந்தால், நம்முடைய போராட்ட உணர்வை நாம் குறைத்து மதிப்பிடுவதாகத்தானே அர்த்தம்..

**ஹவி:** ***ஹிட்லர் காலத்தில் ஏற்பட்ட பாசிச வளர்ச்சியின் அபாயகரமான விசயங்கள் தற்போதைய நமது சூழலில் தென்படுகின்றதா? காலப்போக்கில் இத்தகைய பாசிசக் கூறுகள் எந்த நிலையை அடையும்?***

வ.கீதா: தீர்மானமாக எதையும் சொல்ல முடியாது. ஹிட்லர் காலகட்டத்தில் உருவான பாசிசம் என்பது வேறொரு நாட்டில், சூழலில் நடைபெற்ற ஒன்று. முக்கியமான விசயம் என்னவெனில், ஹிட்லரின் பாசிச நடவடிக்கைகளுக்கு எதிராகக் கண்டனங்களைப் பதிவு செய்ய முடியாதபடி அங்குள்ள ஜனநாயக சக்திகளின் குரல்வளைகள் நொறுக்கப் பட்டிருந்தன. அத்தகைய மிக மோசமான கட்டத்திற்கு நாம் இன்னும் வரவில்லை. இங்கு நிறையப்பேர் குரல் எழுப்புகின்றோம். கண்டனங்களைப் பதிவு செய்கிறோம். அதனால் என்ன பலன்? என்று கேட்டால் பெரிதாக ஒன்றுமில்லை என்றுதான் சொல்லவேண்டும். அந்த அளவுக்கு நம் மக்கள் சமுதாயமும், அரசியல் சமுதாயமும் சீர்கெட்டுக் கிடக்கு.

**ஹவி:** ***சமீபத்தில் கேரளாவில் பழங்குடியினர் நடத்திய போராட்டத்திற்கு 'ஜானு' என்ற பெண் தலைமையேற்று இருந்தார், ஆயுதப் போராட்டமோ அல்லது வேறு வகையான போராட்டமோ பெண்கள் தலைமையில் நடைபெறுவதை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்...?***

வ.கீதா: ''பெண் தலைமை'' என்ற ஒரே விசயத்திற்காக மட்டும் கேரளப் பழங்குடியினரின் போராட்டம் முக்கியத்துவம் பெற்றதாக நான் நினைக்க வில்லை. அதற்கும் மேலாக அத்தகைய போராட்டத்தின் பின்னால் உள்ள சமூக உணர்வே, அப்போராட்டத்தின் முக்கியத்துவத்தை சொல்கிறது. ஆதிவாசிகளின் நலன், சுற்றுச்சூழல், அந்த மண்ணிற்கும் ஆதிவாசிகளுக்குமான உறவு போன்றவற்றையெல்லாம் ஆழமாகப் புரிந்து கொண்டுதான் 'ஜானு' அவர்கள் மத்தியில் செயல்பட்டு வந்தார். அதன் காரணமாகவே அப்பழங்குடியின மக்களால் 'ஜானு' சிறந்த தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். ஆகவே 'பெண் தலைமை' என்ற ஒற்றை விசயம் மட்டும் ஒரு நிகழ்வை மதிப்பீடு செய்வதற்குப் போதுமான காரணியாக இருக்க முடியாது. சமூக அக்கறை கொண்ட ஒரு சித்தாந்தத்தின் அடிப்படையில் போராடக்கூடிய பெண் தலைமையை மட்டுமே நம்மால் ஏற்றுக்கொள்ள முடியும். அப்படியில்லாது போனால் ஜெயலலிதா, சுஷ்மா சுவராஜ், உமாபாரதி போன்ற நபர்கள்தான் எஞ்சுவாங்க. பெண் தலைமை என்பதால் இவர்களை ஏற்றுக்கொள்ள முடியுமா?

**ஹவி:** ***நக்சலைட் போராட்டங்கள் தலித்துகளின் பிரச்சினைகளோடும் அவர்களின் விடுதலையோடும் தொடர்புடையதாகவே இதுவரை இருந்திருக்கு.ஆனால் தேர்தல் பாதையை ஏற்றுக்கொண்ட இடதுசாரிகள் மிகத் தாமதமாகவே தலித் பிரச்சினையில் தற்போது அக்கறை கொள்வது பற்றி...?***

வ.கீதா: தலித்துகள் எப்போதுமே இடதுசாரி, நக்சல் இயக்கங்களோடு இணைந்துதான் வேலை செய்தார்கள், தர்மபுரி, ஆந்திரா, பீகார் போன்ற இடங்கள் அதற்கு உதாரணம். கம்யூனிசக் கொள்கைக்கான வலு குறையக் குறைய அதன் குறைபாடுகளைப் பற்றி கேள்வி எழும்பொழுது, 'சாதி' குறித்து அவர்களின் புரிதலும் செயல்பாடும் கேள்விக்குட்படுத்தப்படுவது நியாயம்தானே? தஞ்சாவூரிலும்,பீகாரிலும் நிறைய நம்பிக்கையோடு தான் மேற்கண்ட இயக்கங்களில் தலித்துகள் இணைந்தனர். அவர்கள் எல்லாம் முட்டாள்களா? யாரோடு இணைந்தால் தங்களுக்கு நல்லது என்று அவர்களுக்குத் தெரியாதா? இருப்பினும் சாதிக்கும் வர்க்கத்துக்குமுள்ள தொடர்பு குறித்த கேள்விகளை நக்சலைட்டுகள் போதுமான அளவுக்கு முன்வைத்தனரா? என்றும் நாம் ஆராய வேண்டியுள்ளது.

**ஹவி:** ***ஆரம்ப காலகட்டத்தில் நீங்களும், எஸ்.வி. ராஜதுரை அவர்களும் மேற்கொண்ட ஆய்வுகள் பெரும்பாலும் மார்க்சிய, இடதுசாரி சிந்தனையோடு இருந்தன. பின்னர் பெரியாரிய கருத்தியலோடு ஆய்வுகளை மேற்கொண்ட தற்கு தமிழக, இந்திய சூழலில் தலையெடுத்துவரும் இந்துத்துவ பாசிசம்தான் காரணமா?***

வ.கீதா: மார்க்சியம் சம்பந்தமாகப் பேசுவதற்கு ஒரு 'சிந்தனைக்களம்' வேண்டுமில்லையா? எங்கு பேசுவது? யாரோடு பேசுவது? மார்க்சியம் எப்போதுமே இயக்கத்தோடு இணைந்து வளரும் ஒரு சிந்தனை. இயக்கங்களே இல்லாத சூழலில் அதைப்பற்றி பேசுவதில் அர்த்தமில்லை. கோர்ப்பசேவ் காலகட்டத்திற்குப் பிறகு ஏற்பட்ட வெறுமையான சூழலின் சமகாலத்தில் மண்டல் பரிந்துரைகளும், அதுதொடர்பான போராட்டங்களும் இந்தியாவில் மேலெழும்பியது. வடமாநிலங்களில் மண்டல் பரிந்துரைகளுக்கு எதிராக உயர்சாதியினர் போராட்டம் நடத்தியதைப் போன்று தமிழகத்தில் நடத்த முடியவில்லை. அப்போதுதான் பெரியார் இயக்கத்தின் பங்களிப்பும், தேவையும் முன்னெப்போதும் இல்லாத வகையில் அப்போது முக்கியத்துவம் பெற்றது.

**ஹவி:** ***நீங்களும், எஸ்.வி.ஆர். அவர்களும் மட்டுமல்லாது கோ.கேசவன் போன்ற சிந்தனையாளர்களும் ஆரம்பத்தில் மார்க்சியம் பற்றிப் பேசினர். பிறகு சாதியம் குறித்து பேசினர். அ.மார்க்ஸ் போன்றோர் மார்க்சியம் குறித்து பேசிவிட்டு இன்று பின்நவீனத்துவம், தலித்தியம் குறித்து பேசுகின்றனர். இதை ஒட்டுமொத்த மாக எப்படி தொகுத்துப் பார்க்கின்றீர்கள்?***

வ.கீதா: அறிவாளிகள் என்று தங்களை நினைத்துக்கொண்டிருக்கும் நம் எல்லோருக்கும் 'அறிவு' சொல்வது வரலாறுதான். நாம் யாரும் தன்னிச்சையாக எதையும் சிந்திப்பது கிடையாது. நம் தலையிலிருந்து கருத்துக்கள் உருவாக்கம் பெறுவதும் இல்லை. வரலாற்றில் மாற்றம் வருகிறது. தலித் எழுச்சி மேல் எழும்புகின்றது. முட்டாள்களால் மட்டுமே தலித் எழுச்சியைக் கண்டு கண்மூடிக் கொண்டிருக்க முடியும். நம் கண்முன்னால் நடக்கும் இந்த எழுச்சியை பார்ப்பனர், இடைநிலைச் சாதியினர் போன்று எதிர்க்கலாம் அல்லது வறட்டுத்தனமான மார்க்சியம் பேசி தலித் எழுச்சிக்கும் சமூக விடுதலைக்கும் சம்பந்த மில்லை என்று பேசலாம். ஆனால் சமூக அக்கறையுடன் ஆய்வு செய்யும்பொழுது, தலித் எழுச்சியின் தன்மை, அதன் கேள்விகள், அதன் நியாயங்கள் போன்றவற்றை எதிர்கொள்ளும் பொழுது ஏற்கனவே பேசி வந்த விசயங்களில் இருந்து விலகி புதிய விஷயங்களைப் பேசுவதுதானே நியாயமானது.

**ஸ்டாலின்:** ***தற்போது எழும்பியுள்ள தலித் எழுச்சியின் காரணமாக பல்வேறு கருத்துகள் இன்று பொது விவாதத்திற்கு வந்துள்ளன.***



**“ பெரியார் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர் அல்ல. சமகால கோபவுணர்வை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு வரலாற்றை சகட்டுமேனிக்கு விளக்குவது என்பது பெரியார் குறித்த காத்திரமான ஆய்வுகளுக்கு நம்மை இட்டுச் செல்லப் போவதில்லை. ”**



படிப்பகம்

www.padippakam.com

> “ திராவிட இயக்கம் தலித் விடுதலைக்கு ஆதரவாக நின்றதாக இன்று பொது நினைவிலோ அல்லது கூட்டு நினைவிலோ எதுவும் இல்லை ”

***உலகமயமாக்கலை சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வது என்ற கருத்தை முன்மொழிபவர்கள் படித்த, நகர்ப்புற தலித்துகளாக உள்ளனர். கிராமபுறத்தில் உள்ள தலித்துகள், பெண்கள் குறித்து இன்னும் அக்கறையுடன் விவாதிக்கப்படவில்லை. இன்று உள்ள தலித் சிந்தனை யாருக்கானது?***

வ.கீதா: உலகமயமாக்கலை ஆதரிப்பது/ எதிர்ப்பது என்ற விசயத்தில் தலித் சிந்தனையாளர்கள், தலித் தலைவர்களிடத்தில் நிறைய வேறுபாடுகள் உள்ளது. மகாராஷ்டிராவில் ‘கெயில் ஓம்வெத்’ குறிப்பிடத்தகுந்த சிந்தனையாளர். அவர்Market Socialism’ என்ற பெயரில் உலக வர்த்தக சந்தையில் தலித்துகள் தங்கள் பொருட்களைக் கொண்டு சென்று நேர்மையான நல்ல விலைக்கு விற்க முடியும் என்று பேசுகிறார். ஆனால் ‘கோபால் குரு’ போன்ற தலித் அறிவாளிகள் கெயில் ஓம்வெத் கருத்தைக் கடுமையாக நிராகரித்து “ஒரு சாதாரண தலித் குடியானவனால் உலக வர்த்தக நிறுவனம் பேசக்கூடிய இடத்தில் எப்படி பேரம்பேச முடியும்?” என்று கோபத்துடன் கேள்வி எழுப்புகின்றார். உலகமயமாக்கம் தலித்துகளின் வாழ்க்கையை மென்மேலும் சிதைத்துக்கொண்டு வரும்பொழுது முதலாளித்துவ எதிர்ப்புடன் கூடிய, ஒரு பரந்துபட்ட ஜனநாயக இடதுசாரி இயக்கத்தைக் கட்டவேண்டும் என்ற சிந்தனை நிறைய தலித் சிந்தனையாளர்களுக்கும் இளைஞர்களுக்கும் இருக்கின்றது. உதாரணத்துக்கு ‘ஆனந்த் டெல்டும்டே’ போன்றவர்கள் இதுகுறித்து எழுதியும் பேசியும் வருகின்றனர். இரண்டாவது தலித்துகளின் விடுதலைக்கான சிந்தனை நகரம் சார்ந்ததா? கிராமம் சார்ந்ததா? என்று கேட்டீர்கள். சிந்தனையாளர்கள் எப்போதுமே நடுத்தர வர்க்கத்தை சேர்ந்தவர்கள் தான். எல்லா இயக்கங்களிலும் அவர்கள் அப்படித்தான் இருந்திருக் கிறார்கள். கொஞ்சம் வசதி இருந்தால்தானே சிந்திக்கவே முடியும்? அதேசமயம் வாழ்ந்துபெற்ற அனுபவத்திலிருந்து பிறக்கும் உலகப் பார்வையும் சிந்தனைதானே? கிராமப்புற உழைக்கும் மக்களிடத்துள்ள சிந்தனையாளர்கள் தம்மை ‘அறிவாளி’களாக கருதிக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் இவர்களது அனுபவம் தோய்ந்த பட்டறிவை உள்வாங்காத நகர்ப்புற சிந்தனை சாரமற்றதாகத்தான் இருக்கும்.

***ஸ்டாலின்: தலித்துகளுக்கு வரலாறு முழுவதும் எண்ணற்ற விசயங்கள் மறுக்கப்பட்டு வந்துள்ளன. அம்பேத்கர், பெரியார் இன்னும்பிற தலித் தலைவர்களின் தீவிர முயற்சியின் காரணமாக ஓரளவு உரிமைகளையும், வேலை வாய்ப்புகளையும் பெற்றுள்ள தலித்துகள் இன்று நவீன வாய்ப்பு வசதிகளைப் பயன்படுத்தத் துவங்கியவுடன் “பார்ப்பனியமயமாகிவிட்டார்கள்” என்ற குற்றச்சாட்டு மிக உக்கிரமாகக் குத்தப்படுவது குறித்து?***

வ.கீதா: அன்மையில் ‘தலித் முரசு’ விழாவில் பேசிய பேராசிரியர் இளங்கோ அவர்கள் தலித் நிர்வாகிகளைப் பார்த்து, “எந்த விதத்திலும் நீங்க சமுதாயத்திற்கு திரும்பச் செய்வது கிடையாது. குறைந்தபட்சம் தலித் பத்திரிகைகள் வாங்குகின்றீர்களா?” என்று குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். கடுமையான சமூக நெருக்கடியில் இருந்து மீண்டெழும் தலித்துகளால் மற்றவர்களை விட கூடுதலாக சமூக மாற்றத்தில் பங்களிக்க முடியும் என்பது நம் நிலைப்பாடு. தலித்துகள் எப்படி இருக்கவேண்டும்? என்று கருத்து சொல்ல பிற தலித்துகளுக்கு மட்டுமே உரிமை இருப்பதாக நான் நினைக்கிறேன். பிறர் சொல்லும் குற்றச்சாட்டுகளில் வரலாற்று நியாயங்கள் இல்லாமல் இருப்பதால்தான் இப்படிப்பட்ட அறநிலைப்பாட்டை நாம் வலியுறுத்த வேண்டியுள்ளது.

***ஹவி: சாதிப்படிநிலையான இச்சமூகத்தில் புரட்சியும், போராட்டமும் கூட படிநிலையாகத்தான் இருக்க முடியும் என்று அம்பேத்கர் கூறுவார். இன்றைய சூழலில் நமது போராட்ட வடிவம் எத்தகையதாக இருக்கவேண்டும்?***

வ.கீதா: அதே அம்பேத்கர் அவர்கள்தாம் ‘ஒரு புதிய சமுதாயத்தில் அனைவரும் சகோதரர்களாக இருப்போம்’ என்று சொல்லி செய்ய இயலாது என்பதில் அம்பேத்கர் தெளிவாக இருந்தார். போராட்டம் படிநிலையாக இருந்தாலும் படிநிலையற்ற தரிசனம் நமக்கு இல்லாவிட்டால் வாழ இயலாது என்ற ஏக்கத்தில்தானே அவர் புத்த மதத்தில் தன்னை இணைத்துக்கொண்டார். போராட்ட வடிவம் என்று எனக்கு உண்மையிலேயே யோசிக்கத் தெரியவில்லை.

***ஸ்டாலின்: சமூக மாற்றத்தை சிந்திக்கக்கூடிய அறிவு ஜீவிகளுக்கும் அமைப்பு சார்ந்த தலித் இயக்கங்களுக்கும் ஒருவித இடைவெளி இருப்பதாகத் தோன்றுகிறது. இந்த இடைவெளியைக் கரைப்பதற்கு என்ன செய்வது?***

வ.கீதா: எல்லா இடங்களிலும் இத்தகைய இடைவெளி இல்லை. நிறையப் பகுதிகளில் இருவரும் இணைந்து பணியாற்றுகின்றனர். உதாரணமாக தாத்தா ரெட்டைமலை சீனிவாசன் பேரவையினர் வகுப்புக்கள் எடுக்கின்றனர். பிரச்சாரம் செய்கின்றனர். முக்கியமான விசயம், இத்தகைய இடைவெளியைக் குறைக்கும் பொறுப்பு தலித் அறிவு ஜீவிகளுக்கு மட்டும்தானா? மற்றவர்களுக்கு இல்லையா? ஆனால் நடைமுறையில் தலித் அறிவு ஜீவிகள் தவிர்த்து வேறுயாரும் இந்த வேலையைச் செய்யவில்லை. சமூக மாற்றத்தை விரும்பக்கூடிய அனைத்து ஜனநாயக சக்திகளுக்கும் இந்தப் பொறுப்பு உண்டு. அப்பொழுது மட்டுமே நம்மால் சரியான திசைநோக்கிப் பயணிக்க முடியும். ●

---

கலை இலக்கியப் பெருமன்றம் வருடந்தோறும் வெளிவரும் சிற்றிதழ்களிலிருந்து சிறந்த இரண்டு படைப்புகளை தேர்ந்தெடுத்து முறையே சிறுகதைகளுக்கு கவிஞர் கடலூர் பாலன் நினைவுப்பரிசும், கவிதைகளுக்கு பாவலர் பா.முத்துசாமி நினைவுப்பரிசும், கட்டுரைகளுக்கு அறந்தை நாராயணன் நினைவுப்பரிசும் வழங்கி வருகிறது. 2001ல் வெளிவந்த சிற்றிதழ்களிலிருந்து தேர்ந்தெடுத்த சிறந்த சிறுகதைக்கான முதல்பரிசை ‘புதிய தடம்’ இதழில் வெளியான அபிமானியின் ‘மட்டம்’ என்ற சிறுகதைக்கு வழங்கி சிறப்பித்துள்ளது.

‘புதிய தடம்’ எழுத்தாளர் அபிமானிக்கு வாழ்த்துக்களும் படைப்பாளிகளை கவுரவிக்கும் கலை இலக்கியப் பெருமன்றத்திற்கு நன்றியும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது.

–ஆசிரியர்குழு.

---



படிப்பகம்

www.padippakam.com

■காசி இளம்பரிதி



*வெள்ளையன் கத்தினான் கர்ச்சித்தான்*
*அவனை அடித்து உதைத்தான்*
*என் கரிய சகோதரன் நடுங்கவில்லை*
*அவனது விழிகளில்*
*வலிமையின் தழல் எரிந்தது*
*அவ்வலிமையைக்*
*கறுப்பன் மட்டுமே அறிவான் .*

*- காபெர்டியானோ டம்பரா*

# ஒரு பஞ்சமனின் பயணக் குறிப்புகள்

***நாட்கள் நகர்ந்து கொண்டேயிருக்கின்றன. சூட்டுக்கோலாய் காலம் நம்மீது தீட்டும் தீக்கொப்புளங்களின் அழியாத வடுக்கள் பெருகிக் கொண்டும் இருக்கின்றன. வலிதரும் கொப்புளங்கள் காய்ந்து சுருங்கி மறையாத வடுக்களாய் நிரடும் போதெல்லாம் உள்ளம் சினந்து உடல் சடுகிறது. கோபத்தீ நம்முள் மூளுமா? நம் எதிரிகள் சாம்பலாக நாம் எரியப்போவது எப்போது? நாட்கள் முன் நகர்ந்து செல்லச் செல்ல... நினைவுகளின் பின்னே திரும்பி நடக்கிறேன்.***

ஆகஸ்டு. 12, 2002, இரவு மணி 10.30 ஆகிவிட்டது. 'திண்ணியத்தில் தலித்களை மலம் தின்னவைத்த சாதி வெறியர்களைக் கண்டித்து திருமாவளவன் தலைமையில் விடுதலைச்சிறுத்தைகளின் கண்டன அணிவகுப்பு'- சென்னையின் மூலை முடுக்கெல்லாம் செய்யப்பட்டிருந்த சுவர் விளம்பரம், நடமாட்டம் குறைந்திருந்த தாம்பரம் இரயில் நிலையத்தில் நின்றிருந்த என் ஞாபகங்களில் வந்து போய்க் கொண்டேயிருந்தன. தூரத்தில் புள்ளியாய்த் தெரிந்த வெளிச்சம் சற்று நேரத்தில் இரயில். நிலையத் திற்குள் பூதமாய் நுழைந்து நடைமேடையை உரசி நின்றது ராக்போர்ட் விரைவு வண்டி. முன்பதிவு செய்யப்பட்டிருந்த ஒரு பெட்டியின் கதவருகில் நின்று கொண்டு சகோதரர் ஏபி.வள்ளிநாயகம்(பொதுச்செயலாளர், தாத்தா ரெட்டமலை சீனிவாசனார் பேரவை) கையசைத்தார். அப்பெட்டிக்குள் என்னை நுழைத்துக் கொண்டபோது இரயில் புறப்படத் துவங்கி யிருந்தது. கே.எம் சரீப் (மாநிலத்தலைவர், பகுஜன் சமாஜ் கட்சி) ஜோசப் ரெத்தினம் (தலைவர், இந்திய கிறிஸ்தவக் கட்சி) நுங்கை வீ.பாபு (தலைவர், அம்பேத்கர் மக்கள் இயக்கம்) ஆகியோர் பெட்டியின் உள்ளே பேசிக் கொண்டிருந்தனர்.திருச்சிக்கு அருகில் திண்ணியம் என்ற ஊரில் கடந்த 2002 , மே 20 அன்று தலித்கள் மூவரை மலம் தின்ன வைத்த அவமானத்துக்குரிய சமூக வன்கொடுமை குறித்த உண்மை அறியும் குழுவாகப் பயணப்படும் அவர்களோடு , ஒருவனாக என்னையும் இணைத்துக் கொண்டேன். நள்ளிரவைத் தாண்டும்போது அவரவர்க்கு ஒதுக்கப்பட்டிருந்த படுக்கைகளில் கிடத்திக்கொண்டோம்.

எனது இரயில் பயணங்கள் பெரும்பாலும் முன்பதிவு செய்யப்படாத பெட்டிகளில்தான் அமைந்திருக்கின்றன. எனது பள்ளிக்கூட காலங்களில் என் தந்தையாரோடு அருகாமை ஊர்களுக்கு அடிக்கடி இரயில் பயணம் செய்த காலம் தொட்டு, கல்லூரி நாட்களில் சக நண்பர்களோடு ஊர்சுற்றக் கிளம்பிய காலம் முதல், மார்க்சிய - லெனினிய கட்சியில் தீவிரமாகப் பணியாற்றிய என் கடந்த காலங்களில் சக தோழர்களோடு தில்லி, கொல்கத்தா, பீகார் ,சென்னை என தமிழ்நாட்டின் தென்மாவட்டத்திலிருந்து நீண்ட தூர இரயில் பயணங்கள் செய்த நேற்றைய காலம் வரை, சக மனிதர்களின் வெப்பம் கக்கும் மூச்சுகளுக்கும் எரிச்சல் மூளும் - ரசிக்கத் தூண்டும் - கோபமூட்டும் பேச்சுகளுக்கும் இரயில் ஓசையை மீறும் சலசலப்புகளுக்கும் நடுவில் அமையப்பெற்ற கடைசி வகுப்புப் பெட்டி இரயில் பயணங்கள் ஒரு சந்திப்பு இரயில் நிலையத்தில் லாவகமாகப் பின்னிப் பிணைந்து கிடக்கும் தண்டவாளங்களைப் போல என் நினைவுகளில் குறுக்கும் நெடுக்குமாக ஓடிக்கொண்டிருக்கின்றன இன்னும். கையோடு கொண்டு வரப்பட்டு, பிரிக்கப்படும் உணவுப் பொட்டலங்களிலிருந்து கழிப்பறை மூத்திர நெடிவரை நாசியில் ஏறி இறங்க, நடைபாதை, கதவோரம், இருக்கை களின் அடியில் என உழைத்துக் களைத்த மனிதர்கள் நீட்டி நிமிரவும் வழியின்றி நெருக்கியடித்து பயணம் செய்யும் இரண்டாம் வகுப்பு Un Reserved பெட்டிகளில் உட்காரக்கூட இடமின்றி நான் பயணித்த நாட்கள் நிறைய.

பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்ற மனிதர் களுக்கு இச்சமூகத்தில் அனைத்து சுகபோகங்களும் ரிசர்வ் செய்யப்பட்டிருக்கின்றன - இரயில் பெட்டிகள் உட்பட. முன்பதிவு செய்யப்படாத பெட்டிகளில் பயணம் செய்யும் மனிதர்களுக்கு அடிப்படை வாழ்வாதாரங்களே பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. முன்பொருமுறை சென்னை யிலிருந்து திருச்சிவரை கிட்டத்தட்ட ஏழு மணி நேரம் நடைபாதையில்கூட இடம் கிடைக்காமல் கழிவறைக் கதவோரம் நின்று கொண்டே இரவு முழுவதும் கண்விழித்துப் பயணம் செய்த, அதே ராக்போர்ட் விரைவு வண்டியில் பதிவு செய்யப்பட்ட படுக்கையில் உறக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தேன். இரயில் பெட்டிகளில் இருக்கையும் படுக்கையும் மட்டுமல்ல, அனைத்து மனிதர்களுக்கும் அவரவர்க்குத் தேவையான அனைத்தும் ரிசர்வ் செய்யப்படப் போவது எப்போது?

உறங்கா இரவைக் கழித்த விழிகளோடு திருச்சியில் இறங்கினேன் சகாக்களோடு. முன்பதிவு செய்யப்பட்ட டிக்கெட் இருந்ததால் இரயில் நிலைய சந்திப்பு தங்கும் அறைகளில் ஒன்றை வாடகைக்கு எடுத்தோம். காலைக்கடன், குளியல், சிற்றுண்டி எல்லாம் முடித்து



படிப்பகம்

www.padippakam.com



*அவர்கள் திட்டமிட்டு அயோத்தியில் மசூதியை இடித்தார்கள். அவர்கள் திட்டமிட்டு குஜராத்தை இரத்தச் சகதியில் மூழ்கடித்தார்கள். அவர்கள் திட்டமிட்டு எல்லாவற்றையும் எழுதியும் பேசியும் செயல்படுத்தியும் வருகிறார்கள். மலம் தின்ன வைக்கப்பட்ட தலித்துகளும், வேடிக்கை பார்த்த நாமும் 'திட்டமிட' வேண்டாமா?*

புறப்பட்டபோது வீதிகளில் எழுந்த புழுதிக்குப்பின்னே, காலனித் தெருக்களும் சட்டையணியாத தலித் சிறுவர்களின் வெற்றுடம்புகளும் தெருமுனைக் கோவிலொன்றும் மங்கலாய் நிழலாடின.

பனித்த கண்களில் நிழலாடிய காட்சிகள் மறைவதற்கு முன்பாகவே, ஊரின் எல்லையில்(அ) நுழைவுவாயிலில் கட்டப்பட்டிருந்த - உயர்ந்த மதில் சுவர்களுக்குள் ஒளிந்திருந்த - ஒரு பெரிய கோவில் என் விழிகளை அகல விரிய வைத்தது. அந்தக் கோவிலின் மதிற் சுவரை ஒட்டி நடப்பட்டிருந்த ஒரு அறிவிப்புப் பலகையில் அக்கோவில் காஞ்சி சங்கரமடத்திற்கு சொந்தமானதென எழுதப்பட்டி ருந்தது.

காலனி வீடு கட்டித்தருவதாக, சுப்பிரமணியத்தின் மனைவி ராஜலட்சுமி பஞ்சாயத்துத் தலைவராக இருந்தபோது (கடந்த உள்ளூராட்சி காலத்தில்) தலித்துகளிடம் ஏமாற்றி வாங்கிய லஞ்சப் பணத்தைத் திருப்பித் தருமாறு பலமுறை கேட்டும் பலனில்லாமல் போனதால், ஊர் திருவிழாவிற்கு காப்புக் கட்ட மறுத்தும், ஊர்த் தெருக்களில் பறையடித்து ஊழல் செய்தவர்களை அம்பலப்படுத்தியும் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்த தலித் சகோதரர்களுக்குக் கிடைத்த தண்டனை தான் மலம் தின்ன கட்டாயப்படுத்தப்பட்ட வன்கொடுமை. ஊர்த் திருவிழாவிற்கு வெட்டியான் ஒருவர் காப்புக்கட்ட வேண்டும் என்ற வழக்கத்தை எதிர்ப்பது - சராசரி மக்களுக்கு 'தெய்வக் குற்றம்', சாதி இந்துக்களுக்கு 'அதிகார மீறல்', பார்ப்பன பயங்கரவாதிகளுக்கு 'சனாதன தர்மத்திற்கு வந்த கேடு'. ஊழலை பறையடித்து அம்பலப்படுத்துவது அதிகார வர்க்கத்தின் பார்வையில் சட்டவிரோதம்.

சட்டங்களை உருவாக்குவது, கையாளுவது, தண்டனை தருவது யாவும் வரையறுக்கப்பட்ட அதிகார வர்க்கத்தின் கடமைகள். அதை மீறி சட்டத்தைத் தன் கையில் எடுத்துக்கொள்ளும் சாமானியன் பாதிக்கப் பட்டவனாயினும் குற்றவாளியே . அதனின், அதிகார ஒழுங்குகளை மீறிய குற்றவாளி(!)களுக்கு தண்டனை வழங்கியது திண்ணியத்தில் உள்ளூர் அதிகாரமாக வீற்றிருக்கும் நிலப்பிரபுத்துவ சாதிய சமூக அதிகாரம். பாராளுமன்ற இந்திய அரசியல் சட்டம் பார்ப்பன பயங்கரவாதிகளின் கைகளில். கிராமப்புற நிர்வாகச் சட்டம் சாதி இந்து வெறியர்களின் காலடியில். 'வாழையடி வாழையாக' வந்த வழக்கங்களை எதிர்ப்பது, அடிபணிவ தற்கென்றே உருவாக்கப்பட்ட அதிகாரச் சட்ட(க)ங்களை மீறுவது தண்டனைக்குரிய குற்றங்கள்தானே(!)

'அவரவர் வேலையை ஒழுங்காக செய்தால் நாட்டில் எல்லாம் சரியாக நடக்கும்' என ஜெயேந்திர சங்கரன் அடிக்கடி ஞாபகமூட்டி வருவது நினைவுக்கு வருகிறது. திண்ணியத்தில் கட்டப்பட்டிருந்த அந்தக் கோவில் காஞ்சி மடத்திற்கு சொந்தமானது என்பது தற்செயலானதுதானா? 'இந்துக்கள் திரிசூலம் வைத்துக்கொள்வது தவறில்லை. சீக்கியர்கள் வாளோ, இஸ்லாமியர்கள் கத்தியோ வைத்துக் கொண்டிருந் தால், அது சட்டவிரோதம்' என்று வேறு ஜெயேந்திரன் 'பால் தாக்கரே - பிரவீன் தொகாடியா - அசோக்சிங்கால்' போன்ற ரௌடிகளின் பாணியில் அதிரடியாகப் பேசி வருவதும் தற்செயலானதுதானா? அவர்கள்

புறப்பட்டோம். திருச்சி யிலிருந்து லால்குடிவரை பேருந்திலும் அங்கிருந்து அன்பில் வழியாக காரிலும் திண்ணியத்திற்குள் நாங்கள் நுழைந்த போது நண்பகல் கடந்துவிட்டிருந்தது. தலித் மக்களின் குடியிருப்புகள் ஊரின் ஒரு பகுதியாய் ஒதுக்கத்தில் இருந்தன. குடியிருப்பின் முனையில் விடுதலைச் சிறுத்தைகள் மற்றும் புதிய தமிழகம் கட்சிகளின் கொடிக் கம்பங்கள் நடப்பட்டிருந்தன. பள்ளர், பறையர், அருந்ததியர் என மூன்று சாதியினரும் தனித்தனி தெருக்களில் ஒரே குடியிருப்புக்குள் இருந்தனர். சாதிக்கொரு கோவிலை அவரவர் குடியிருப்புகளில் கட்டியிருந்தனர். சாதி இந்துக்கள் ஊரின் பிரதான வீதிகளில் குடியிருந்தனர். பெரும்பான்மை சாதியினரான கள்ளர்களின் ஆதிக்கத்தில் ஊர் இருப்பதை தலித்துகளின் மீது பிரயோகிக்கப்பட்ட வன்கொடுமை நமக்கு உணர்த்திவிடும்.

சாதி வெறியர்களால் மலம் தின்ன வைக்கப்பட்ட முருகேசன், ராமசாமி, கருப்பையா மூவரும் பாதுகாப்பு கருதி வேறொரு இடத்தில் தங்க வைக்கப்பட்டு இருப்பதாக தலித் மக்கள் தெரிவித்தனர். நடந்த கொடுமைகளை பாதிக்கப் பட்டவர்களின் குடும்பத்தினர் பெருந்துயரத்தோடு எங்களிடம் தெரிவித்தனர். பறையர் சமூகத்தைச் சேர்ந்த செல்வமும் பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த செல்வகுமாரும் விலாவரியாக விபரங்களைத் தந்தனர். எல்லாவற்றையும் பதிவு செய்துகொண்டோம். நாங்கள் சென்றிருந்தபோது பறையர்கள் மூவரை மலம் தின்ன வைத்த சாதி வெறியன் சுப்பிரமணியனும் (ஓய்வு பெற்ற ஆரம்பப்பள்ளி ஆசிரியர்) அவனது குடம்பத்தினரும் கைது செய்யப்பட்டிருந்தனர். ஏனைய சாதி இந்துக்கள் எங்களைக் கண்டு ஒதுங்கிச் சென்றனர். இதுநாள்வரை சாதி இந்துக்களிடம் கூலி வேலைக்குச் சென்று வந்த தலித் மக்களுக்கு தற்போது எவரும் வேலை தருவதில்லை என்றும், ஒருவேளைக் கஞ்சிக்கே வழியின்றி வாடுவதாகவும் உழைத்து ஓடாய்த் தேய்ந்துபோன, கந்தலாடை உடுத்திய தலித் பெண்கள் கண்ணீர் மல்கக் கூறிய வார்த்தைகள் மட்டும் என் காதுகளில் இன்றும் தங்கியிருக்கின்றன.

எங்களைக் குழுமியிருந்த தலித் மக்களின் வறண்ட முகங்களும், ஒட்டிய வயிறுகளும் நாங்கள் வரும் வழியில் சாலையின் இருபுறங்களிலும் ஊரைச் சுற்றியிருந்த ஆதிக்க சாதியினரின் நிலங்களில் செழித்து வளர்ந்திருந்த பயிர்களை எனக்கு ஞாபகமூட்டின. எங்கள் வாடகைக் கார்



படிப்பகம்

www.padippakam.com

திட்டமிட்டு அயோத்தியில் மசூதியை இடித்தார்கள். அவர்கள் திட்டமிட்டு குஜராத்தை இரத்தச் சகதியில் மூழ்கடித்தார்கள். அவர்கள் திட்டமிட்டு எல்லாவற்றையும் எழுதியும் பேசியும் செயல்படுத்தியும் வருகிறார்கள். மலம் தின்ன வைக்கப்பட்ட தலித்துகளும் வேடிக்கை பார்த்த நாமும் 'திட்டமிட' வேண்டாமா?

திண்ணியம் தலித் மக்களின் மீது பிரயோகிக்கப்பட்ட வன்கொடுமையை வெளியுலகிற்குக் கொண்டு வந்து, வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்காக மாற்றி சமூக அக்கறையோடு செயல்பட்டுவரும் உயர் நீதிமன்ற வழக்குரைஞர் பொ.ரெத்தினம், வழக்குரைஞர் செபாஸ்டின் ஆகியோரை திருச்சியில் சந்தித்தபோது வழக்கு குறித்தும், சட்டப்பூர்வ நியாயங்கள் குறித்தும் மேலதிகமான விவரங்களும், நம்பிக்கையும் தெரிவித்தனர். திண்ணியம் வன்கொடுமையைக் கண்டித்து திருச்சியில் ஆக. 12ல் கண்டன அணிவகுப்பு நடத்திய திருமாவளவன் 'குற்றவாளிகள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கா விட்டால், திருச்சியின் சட்டம்- ஒழுங்கை விடுதலைச் சிறுத்தைகள் கையிலெடுப்பார்கள்' என்று திரண்டிருந்த கூட்டத்தில் அறைகூவல் விடுத்தார்.

குற்றவாளிகள் தண்டிக்கப்படவும் (சட்டத்தின் வழியில்) செய்யலாம். ஆனால்

*சாதி வன்முறையும்,*
*தீண்டாமைக் கொடுமையும்*
*தீரப் போவதில்லை-*
*சட்டம் - ஒழுங்கைப்*
*பராமரிக்கும் அதிகாரம்*
*நம் கைகளுக்குவரும்வரை.*

○○

***எங்கள் மொழி***
***உங்களுக்குப் புரியவில்லை என்று சொல்கிறீர்கள்***
***இதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்?***
***உங்கள் விருப்பத்திற்கு மாறாக***
***ஒருநாள் நீங்கள் அதைப்***
***புரிந்துகொண்டுதான் தீரவேண்டும்.***

**— சித்தலிங்க பட்டண ஷெட்டி**

**''தர்மபுரியில் நக்சலைட் வேட்டை''**, நவம்பர் 24, 2002 அன்று தொலைக்காட்சி செய்திகளும் மாலை செய்தித்தாள்களும் அதிகார வர்க்கத்தின் பதட்டத்தை / நடுக்கத்தை / வன்மத்தைக் கூக்குரலிட்டுக் கொண்டிருந்தன. எவரும் எதிர்பார்த்திராதவொரு நாளில் ஒட்டுமொத்த தமிழகத்தின் கவனமும் ஒரே இடத்தில் மையம் கொண்டன. வெறும்வாயை மென்று கொண்டிருந்த பலருக்கும் பரபரப்புத் தீனி போட்டன அரசும் அதன் ஊதுகுழலாகவே எப்பொழுதும் செயல்பட்டு வரும் 'மீடியா'வும். நவ. 24 தொடங்கி தொடர்ந்து ஒரு வாரத்தின் தலைப்புச் செய்தியாக ,தமிழகக் காவல்துறையின் நக்சலைட் வேட்டைக் கதை கற்பனை வளத்தோடு, வலம் வந்து கொண்டிருந்தது. நான்கு நாள் 'தேடுதல் வேட்டை'க்குப் பிறகு மார்ட்டின் (எ) தமிழ்ச்செல்வன், பாலன், மாதையன், ஆனந்தி, துரைசிங்கவேலு, ரமணி (எ) விஜயா உட்பட 25 நபர்களை நக்சல் ஒழிப்புப் பிரிவு காவல்துறை கைது செய்திருப்பதாக செய்திகள் சொல்லின. காவல்துறை நடத்திய 'மோதல்' நாடகத்தில் சிவா (எ) பார்த்திபன் சுட்டுக்கொல்லப்பட்டார். பாலன் என்பவர் குண்டுக் காயத்தோடு உயிர் பிழைத்தார் (அ) கைது செய்யப்பட்டார்.

மலையடிவாரத்திலுள்ள மாந்தோப்பு ஒன்றில் ஆயுதப் பயிற்சி / நாசவேலைகளில் ஈடுபட சதித்திட்டம் / பயங்கர ஆயுதங்கள் பிடிபட்டன/ தப்பியோடிய தீவிரவாதிகள் சென்னையில் ஊடுருவல் / தமிழகம் முழுவதும் நக்சலைட் தொடர்புகளைப் பற்றி புலனாய்வு / முக்கிய இடங்களுக்குப் பாதுகாப்பு என்ற ரீதியில் பொது சமூக உளவியலை பதற்றத்தோடும் பரபரப்போடும் வைத்துக்கொள்ள காவல்துறையின் பொய்ப்பிரச்சாரங்கள் 'மீடியா'வுக்குப் பெரிதும் உதவிபுரிந்தன (அ) 'சுதந்திர' நாட்டின் 'ஜனநாயக'த் தூணாக உயர்ந்து நிற்கும் 'மீடியா' தனது 'நடுநிலை' பிறழாத உத்தியோடு காவல்துறைக்கு உதவியது. தமிழகத்தில் மட்டுமல்ல, ஆந்திரப்பிரதேசம், ஒரிசா, பீகார் போன்ற மாநிலங்களில் நக்சல்பாரிகளையும் காஷ்மீர், அஸ்ஸாம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் இதர பகுதிகளில் தேசிய இன உரிமைகளுக்காகப் போராடுபவர்களையும் 'மோதல்' என்ற பெயரில் சுட்டுக்கொல்லும் நடவடிக்கைகள் கடந்த காலங்களில் கேள்விக்கிடமில்லாத வகையில் தொடர்ச்சியாக, காவல்துறையினராலும் இந்திய இராணுவத்தாலும் கட்டவிழ்த்து விடப்படுவதை, பொது சமூக உளவியல் முணுமுணுப்பின்றி கடந்து செல்ல, கர்ம சிரத்தையோடு மீடியா 'கவனம்' செலுத்துகிறது.

1980களில் திராவிட இயக்கமெனும் கட்டுச் சோற்றுக்குள் வளர்ந்த பார்ப்பனிய பெருச்சாளி எம்.ஜி. இராமச்சந்திரனின் ஆட்சிக்காலத்தில் 'தேவாரம்' தலைமையில் தருமபுரி பகுதியில் 'நக்சலைட் ஒழிப்பு' என்ற பெயரில் அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டதை நாம் மறந்திருக்க முடியாது. 'நக்சலைட் வேட்டை' என்ற பெயரில் அப்பாவி மக்கள் பலரும் 'மோதல்' நாடகத்தில் துடிப்புள்ள இளைஞர்கள் பலரும் அந்நேரத்தில் கொல்லப்பட்டனர். அப்பகுதி உழைக்கும் மக்களின் மீது அரசியல் நெருக்கடி திணிக்கப்பட்டது. எம்.ஜி.ஆரின் 'கழிசடை அரசியல் வாரிசு' பாசிச ஜெயலலிதா ஆட்சிக்காலம் மீண்டும் தருமபுரியை நம் நினைவுகளுக்குக் கொண்டு வந்திருக்கிறது.

துடைத்தழிக்கப்பட்டதாக அரசால் பிரச்சாரம் செய்யப்பட்ட 'தருமபுரி' நக்சல்பாரி அரசியல் நீருபூத்த நெருப்பாக அப்பகுதி உழைக்கும் மக்களின் வாழ்வியல் நிர்ப்பந்தங்களுக்குள் நிரந்தரமாய் கனன்று கொண்டுதானிருக்கிறது என்பதை தற்போதைய நக்சலைட் 'வேட்டை' கதைகளும், கைது நடவடிக்கைகளும் நமக்கு

***அந்த வீட்டின் கதவில்***
***எழுதப்பட்டிருந்த***
***தலைவர் மாவோவின்***
***'மரம் ஓய்வை விரும்பினாலும்***
***காற்று விடுவதில்லை'***
***என்ற புகழ்பெற்ற***
***வாக்கியத்தைப் படம் பிடித்து,***
***ஏதோஒரு தலைமறைவு***
***இரகசியத்தை***
***வெளியிடுவதுபோல***
***பத்திரிகைகள்***
***பிரசுரம் செய்தன.***





படிப்பகம்

www.padippakam.com

உணர்த்திவிடுகின்றன.

எந்தவொரு போராட்டத்திற்குமான / அரசியலுக்குமான / அமைப்பின் தேவைக்குமான காரணங்களை, அப்போராட்டத்தை / அரசியலை / அமைப்பை முற்றாக அழித்துவிடுவதன் மூலம் தீர்த்துவிடலாம் என்று எக்காலத்திலும் எந்தவொரு அதிகார வர்க்கமும் தீர்மானிக்கும் முடிவுகளும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தி இருக்கின்றன. வணிகப் பரபரப்புகளுக்காக செய்திகளைத் தேடியலையும் 'மீடியா'வுக்கு எல்லாமே செய்திகளாகிப் போயின. ஆனால் ஒரு செய்தியின் பின்னுள்ள அரசியலும் வர்க்க நலன்களும் உண்மைகளும் நமக்கு மிக முக்கியமானவை.



பெரும்பாலும் நிராயுதபாணிகளாகக் கைதானவர்களை காவல்துறை காட்டுமிராண்டிகள் நடத்திய விதம் சட்ட விரோதமானது மட்டுமல்ல, வக்கிரமானதும்கூட. கைது செய்யப்பட்ட பெணகள் உட்பட அனைவரையும் அரைநிர்வாணமாக்கி உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் சித்திரவதைகள் செய்துள்ளனர். 'தேடுதல் வேட்டை'யில் கைது செய்யப்படும்போது, உருட்டுக்கட்டைகளைக் கொண்டு போலீசார் போராளிகளை பயங்கரமாகத் தாக்கியதை தொலைக்காட்சிகள் சாமானிய மக்களுக்கு அச்சமூட்டும் நோக்கத்தில் தணிக்கை செய்யாமல் ஒளிபரப்பின. ஏற்கனவே 'தீவிரவாத' பீதியூட்டப்பட்டிருக்கும் சமூகத்திற்கு இக்காட்சிகள் மூலம் பாசிச அரசும், காவல்துறையும், மீடியாவும் சொல்ல விரும்புவதென்ன?

மயான அமைதி நிலவும் (அ) வீண் இரைச்சலில் மூழ்கும் சமூகத்தில் முணுமுணுப்புகளே ஆயினும், மனித உரிமைகளில் அக்கறையுள்ள கேள்விகளை - எதிர்வுகளை - குரல்களைப் பதிவு செய்ய வேண்டிய அவசியமும் ஆற்றாமையும் உந்தித்தள்ள பதினேழு பேரடங்கிய உண்மை அறியும் குழு ஒன்று டிசம்பர் 8, 9 தேதிகளில் தருமபுரி பகுதிகளுக்குச் சென்றது. ஆந்திரப் பிரதேச சிவில் உரிமைக்கழகம் (APCLC), ஜனநாயகப் பாதுகாப்பு முன்னணி (கர்நாடகம்), ஜனநாயக உரிமைகள் பாதுகாப்பு மய்யம் (மகாராஷ்ட்ரா), மனித உரிமைகளுக்கான மக்கள் கழகம் (தமிழ்நாடு பிரிவு), மனித உரிமைப் பாதுகாப்பு மய்யம் (தமிழ்நாடு) மற்றும் சில தனி நபர்களும் பங்கேற்ற இக்குழுவில் ஒருவனாக நானும் பயணப்பட்டேன்.. வழக்குரைஞர்கள் தோழர் தமயந்தி, தோழர் அரிபாபு ஆகியோர் முன்னின்று வழிநடத்திய இக்குழுவின் முடிவுகளிலிருந்தும் என் உணர்வுகளிலிருந்தும் சிலவற்றை இங்கு பதிவு செய்ய வேண்டியது அவசியமெனக் கருதுகிறேன்.

சென்னை இராணி அண்ணாநகர் குடியிருப்புப் பகுதியில் அறிவொளி என்பவருக்குச் சொந்தமான வீட்டைப் படம் பிடித்து தீவிரவாதிகள் தங்கியிருந்த வீடு என்பதாகவும் பல மாதங்கள் பூட்டிக்கிடக்கும் வீட்டில் எதுவும் கிடைக்காத போதும், பல ஆவணங்கள் சிக்கியிருப்பதாகவும் பத்திரிகைகளுக்குச் செய்தி கொடுத்து பரபரப்பூட்டியது காவல்துறை. அந்த வீட்டின் கதவில் எழுதப்பட்டிருந்த தலைவர் மாவோவின் 'மரம் ஓய்வை விரும்பினாலும் காற்று விடுவதில்லை' என்ற புகழ்பெற்ற வாக்கியத்தைப் படம் பிடித்து, ஏதோ ஒரு தலைமறைவு இரகசியத்தை வெளியிடுவதுபோல பத்திரிகைகள் பிரசுரம் செய்தன. அறிவு ஜீவிகளும் போராளிகளும் அடிக்கடி பயன்படுத்தும் இந்த வார்த்தைகள் அன்றைய பரபரப்புச் செய்திகளின் ஊடே ஏறத்தாழ தமிழ்நாட்டின் அனைத்து வீடுகளுக்குள்ளும் வாசிக்கப்பட்டிருக்கும். மரங்களின் இருப்பை / அசைவை / ஓய்வை காற்று தீர்மானித்துக்கொண்டேதான் இருக்கும். மரங்களுக்கு ஆயுள் காலமுண்டு. காற்று நிரந்தரமானது. மரங்களாக நாம் இருப்பதனால் அசையவும் கடமைப் பட்டுள்ளோம். நம் இருப்பே நம் அசைவுகளில்தான் அர்த்தம் கொள்கிறது.

'மோதல்' நடந்ததாகச் சொல்லப்படும் ஊத்தங்கரை சாலஜோகிப்பட்டி பகுதியில் எங்கள் பயணத்தின் முதல்நாள், மக்களைச் சந்தித்த பொழுது, 'நல்லவங்களோ, கெட்டவங்களோ எங்க கிராமத்தில் வந்து அவுங்க பிடிபட்ட தும், செத்துப் போனதும் எங்களுக்கு ரொம்ப வருத்தம்தாங்க' என்று பலரும் குறிப்பாக, பெண்கள் எங்களிடம் தெரிவித்தனர். இப்பகுதியில் நக்சலைட்கள் நடமாட்டம் பற்றி காவல்துறையின் உளவுப் பிரிவுக்கு ஒரு பெண் தொலைபேசி செய்து தெரிவித்ததாக வந்த பத்திரிகைகளின் செய்தி என் நினைவுக்கு வந்தது. மக்களைச் சந்தித்துவிட்டு, அன்று இரவு உண்மை அறியும் குழு, தாங்கள் சேகரித்த விவரங்களைத் தொகுப்பதற்காகவும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற் காகவும் கூடிய பொழுது, குழுவிலிருந்த பேரா.ராமசாமி கூறிய ஒரு செய்தி பயனுள்ளதாக இருந்தது. அதாவது, 'மோதல் நிகழ்ந்த அப்பகுதியில் தனிக் குடியிருப்பாக வாழும் தலித் மக்களுக்கும் ஏனைய சாதியினருக்கும் இடையில் கடந்த பஞ்சாயத்துத் தேர்தலை ஒட்டி பிரச்சினை எழுந்துள்ளது. நக்சலைட்டுகள் பயிற்சி எடுத்ததாகச் சொல்லப்படும் மாந்தோப்பை குத்தகைக்கு எடுத்த குருசாமி தலித் சமூகத்தவர். மாந்தோப்பு உரிமையாளர் முருகேசன் தலித் அல்லாதவர். மாந்தோப்பில் கூடியிருந்த நக்சலைட்டுகளை, குருசாமி மூலம் தங்களைத் தாக்க வந்திருக்கும் 'தீவிரவாதிகள்' என தலித் அல்லாத அப்பகுதி மக்களிடம் சிலர் பிரச்சாரம் செய்திருக்கின்றனர். ஒருவேளை தலித் மக்களின் மீது கொண்டிருக்கும் பகையுணர்வில் யாரேனும் ஒருவர் காவல்துறைக்குக் காட்டிக் கொடுத்திருக்க வாய்ப்பிருக்கிறது' என்பதே அது.

●●●

***நாய்க்கன் கொட்டாய், பென்னாகரம், ஊத்தங்கரை என நினைவிடங்களால் நிரம்பிக்கொண்டிருக்கும் தருமபுரி நிரந்தரமாய் நம் நினைவுகளில் தேங்கிப் போனது. ஆனால் அப்பகுதி உழைக்கும் மக்களின் நிழல்களாக உடனிருக்கின்றன அந்நினைவிடங்கள்.***

ஏற்கனவே இப்பகுதியில் தலித் மக்கள் மீது சாதிய ஒடுக்குமுறையும், கந்து வட்டிக்குப் பணம் தந்து கொடுமையான சுரண்டலையும் செய்துவரும் ரௌடிக் கூட்டத்தினரை எச்சரித்து, தலித் மக்களுக்கு உறுதுணையாக இருப்பவர்கள் நக்சல்பாரிகள்தான். அந்த ரௌடிக் கூட்டத்தினரில்



படிப்பகம்

www.padippakam.com

பெரும்பான்மையோர் பாட்டாளி மக்கள் கட்சியினர். காவல்துறையோடு இவர்கள் கொண்டிருக்கும் கள்ளக்கூட்டு நக்சல்பாரிகளின் அரசியலை எதிர்ப்பதிலும் காட்டிக் கொடுப்பதிலும் பலப்படும் என்பதை சொல்லத் தேவையில்லை. ஆனால் 'நக்சலைட்டுகளைப் பிடிக்க பொதுமக்களே உதவினர். பல இடங்களில் மக்களே பிடித்தும் கொடுத்தனர்' என்றெல்லாம் ஒட்டுமொத்த மக்களையும் கருங்காலிகளுக்கு இணை வைத்து காவல்துறை அயோக்கியத்தனமாகப் பொய்ப் பிரச்சாரம் செய்தது. 'மோதல்' நடக்கும்போது சுற்றிலும் மக்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர் என்றும், கையில் துப்பாக்கியும் இடுப்பில் வெடிகுண்டுகளும் வைத்திருந்த 'சிவா'வினால் பொது மக்களின் உயிருக்குப் பாதிப்பு (!) வந்துவிடக் கூடாது என்பதற்காகவே சிவாவை சுட நேர்ந்தது என்றும், மேலும் உளவுப்பிரிவினர் அடையாளம் காட்டிய பிறகுதான் கொல்லப்பட்டவர் 'சிவா' என்பதே எங்களுக்குத் தெரிய வந்தது என்றும் தருமபுரி காவல்துறை உதவி கண்காணிப்பாளர்கள் வேணுகோபால், தண்டபாணி ஆகியோர் நாங்கள் நேரில் சந்தித்தபோது கூறினர்.

நாங்கள் விசாரித்து அறிந்தவரை சிவாவை சுட்டுக் கொன்ற பின்னரே, பொதுமக்கள் அந்த இடத்தில் குழுமியிருக்கின்றனர். சிவாவை சுடும்பொழுது, அருகில் இருந்த விநாயகத்தை சிறையில் சந்தித்த பொழுது, 'சிவாவைக் கொல்லுங்கடா என கத்திக்கொண்டே போலீசார் குறி வைத்துச் சுட்டனர்' என்று எங்களிடம் குறிப்பிட்டார். போலீஸ் கூறுவதுபோல் ஆயுதங்களை வைத்திருந்த சிவா நினைத்திருந்தால் மோதலில் ஒருசில போலீசாரையாவது கொன்றிருக்க முடியும். ஆனால் அவர் தப்பித்துச் சென்றுவிட எண்ணி ஓடியபோது கால் இடறி, கீழே விழுந்திருக்கிறார். அவரைச் சுற்றி வளைத்த போலீசார் சிவா'வை அடையாளம் கண்டுகொண்ட பிறகே அருகிலிருந்து சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். சிவாவின் மூக்கருகில் பாய்ந்துள்ள தோட்டா கபாலத்தைத் துளைத்துக்கொண்டு பின் தலை வழியாக வெளியேறி இருப்பதை சடலக் கூறாய்வு அறிக்கை (Post mortem Report)யின் மூலமும் தருமபுரி மாவட்ட மருத்துவமனை தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர் கற்பகவல்லி, R.M.O. டாக்டர் உலகநாதன் ஆகியோரை நாங்கள் சந்தித்த நேர்ப்பேச்சிலிருந்தும் அறிந்து கொண்டோம். 'உண்மை'களைக் கொல்லுவது காவல் துறைக்குக் கைவந்த கலை. ஒரு பாசிச அரசு விரும்புவதும் இதைத்தானே?

நவ.14 அன்று நண்பகலில் சுட்டுக்கொல்லப்பட்ட சிவாவின் உடலை, அடுத்தநாள் மாலைவரை அதே இடத்திலேயே போலீசார் கிடத்தி வைத்திருக்கின்றனர். ஏறத்தாழ 15 நாட்களுக்குப் பிறகு நாங்கள் அந்த இடத்திற்குச் சென்று பார்த்தபோது, குருதி குடித்த மண் கருத்துக் கிடந்தது. அவரது உடலை உரிய மரியாதையுடன் அடக்கம் செய்ய அவரது நண்பர்களும், ஆதரவாளர்களும் கேட்ட பொழுது, போலீசார் மறுத்ததோடல்லாமல், அஞ்சலி செலுத்த மருத்துவமனை முன்பு கூடி இருந்தவர்கள் மீது தடியடி பிரயோகம் செய்து மிரட்டியிருக்கின்றனர். சிவாவின் உடலை அவரது சகோதரரிடம் கூட ஒப்படைக்காமல் D.G.P. நெயில்வால் தலைமையில் முகாமிட்டிருந்த காவல்துறை அதிகாரிகள் தருமபுரி இடுகாட்டிலேயே அடக்கம் செய்திருக்கின்றனர். இதே தருமபுரி பகுதியில் 1980களில் தோழர். பாலனைக் கொன்று, அவரது உடலை தானே எரித்து சாம்பலாக்கி, வஞ்சம் தீர்த்துக்கொண்ட காவல்துறையின் வாரிசுகள் அல்லவா? நக்சல்பாரிகளின் / போராளிகளின் பிணம்கூட அதிகார வர்க்கத்தை அச்சமூட்டத்தான் செய்கிறதோ?

மக்களைச் சந்திக்கும் எமது பயணத்தின் இரண்டாவது நாள் - காலை சுமார் 10 மணி அளவில் நாய்க்கன் கொட்டாய் கிராமத்திற்கு வந்தபோது, திருப்பத்தூர் - தருமபுரி நெடுஞ்சாலையில் நிறுவப்பட்டிருந்த உயரமான அந்த பீடத்தை எங்களால் 'கடந்து' செல்ல இயலவில்லை. அது தோழர்கள் அப்பு - பாலன் நினைவிடம். படுக்கை வசமாக ஏறத்தாழ 15 அடி நீளத்தில் சிமெண்ட் குழைத்து செய்யப்பட்ட ஒரு துப்பாக்கி கிடத்தப்பட்டிருந்தது. - செய்தித்தாள்களின் புகைப்படங் களில் சிவாவின் உடல் அருகே கிடந்த நீண்ட துப்பாக்கி என் நினைவுக்கு வந்தது. அதன் மீது ஏறத்தாழ 20 அடி உயர 'அரிவாள் சுத்தியலாலான' பீடம் எழுப்பப்பட்டு அப்பு - பாலன் மார்பளவு சிலைகள் நிறுவப்பட்டிருந்தன. அந்த நினைவிடம் திறப்பு நாளில் தான் வந்திருந்தது பற்றியும், பாலனின் உறுதிமிக்க அரசியல் வேலைகள் குறிப்பாக, அப்பகுதியில் இரட்டைக்குவளை முறையை ஒழிக்க அவர் தீவிரமாகப் போராடியது பற்றியும் எங்கள் குழுவில் ஒருவராகயிருந்த பேரா.அ.மார்க்ஸ் எங்களிடம் நினைவு கூர்ந்தார். நாய்க்கன் கொட்டாய், பென்னாகரம், ஊத்தங்கரை என நினைவிடங்களால் நிரம்பிக்கொண்டிருக்கும் தருமபுரி நிரந்தரமாய் நம் நினைவுகளில் தேங்கிப் போனது. ஆனால் அப்பகுதி உழைக்கும் மக்களின் நிழல்களாக உடனிருக் கின்றன அந்நினைவிடங்கள்.

அப்பு - பாலனின் நினைவுகளோடு நத்தம் காலனிக் குள் நாங்கள் நுழைந்தபோது, மக்கள் எங்களிடம் கொட்டித் தீர்த்த கோபமும், வேதனையும் எழுதித் தீராதது. உளவுப் பிரிவு போலீசார், நக்சலைட் ஒழிப்பு சிறப்புப் படை போலீசார் ஆகியோர் கிராமங்களுக்கு இரவில் கும்பலாகச் சென்று சிலரைக் கைது செய்யப் போவதாக மிரட்டுவதும், விசாரிப்பு களின்றி வேவு பார்த்துச் செல்வதுமாக அச்சமூட்டி வந்திருக் கின்றனர். கைது செய்யப்பட்ட நக்சல்பாரிகளில் நான்கு பேர் இக்கிராமத்தைச் சேர்ந்தவர்கள். தனது ஒரே மகளான ரமணி (எ) விஜயாவை சிறைக்கு அனுப்பியிருக்கும் தாயார் மற்றும் இச்சம்பவத்தில் சற்றும் தொடர்பில்லாத 17 வயதேயான மாதையனின் தாயார் என சில தாய்மார்களின் கண்ணீர் ஒருபுறம் நம்மைக் கரைத்தாலும் *'நாங்க நல்லா இருக்கணும்னுதானே இந்தப் புள்ளைங்க இப்படி அடிபட்டு ஜெயில்ல வாடுதுங்க'* என்று வெளிப்பட்ட அம்மக்களின் வேதனைமிகு வார்த்தைகளின் அடியில், ஆயுதமேந்திப் போராடுபவர்களின் அரசியலுக்கு பயங்கரவாதச் சாயம்பூசி, பொது சமூக உளவியலை தீவிரவாதப் பீதியூட்டி, போராளிகளை மக்களிடமிருந்து அந்நியப்படுத்த பாசிச அரசுகளும் போலீசும் செய்யும் பித்தலாட்டங்களை/ பிரச்சாரங்களைப் புறந்தள்ளும் உறுதி வேர் கொண்டுள்ளது. இந்த வேரிலிருந்து இன்று மட்டுமல்ல, என்றென்றைக்கும் முளைத்துக் கிளம்பும் புரட்சிகர அரசியலுக்கான நம்பிக்கைகள்.

**பின்குறிப்பு :**

1. கைது செய்யப்பட்ட நக்சல்பாரிகள் அனைவரும் பொடா சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

2. நக்சல்பாரிகளின் ஆதரவாளராகயிருந்த குருசாமி என்பவரது மகன் பள்ளியில் படித்துக்கொண்டிருந்த 15 வயதே யான பிரபாகரன் பிணையில் வெளிவந்துள்ளார்.

3. இன்னும் 18 வயது பூர்த்தியாகாத பிரபாகரன் மற்றும் பகத்சிங் ஆகியோர் பொடா சட்டத்தின்கீழ் சிறைப்படுத்தப் பட்டிருப்பதை தருமபுரி மாவட்ட தலைமை நீதிபதியாக இருந்த திரு.அசோக்குமார் வன்மையாகக் கண்டித்ததைத் தொடர்ந்து, உயர்நீதிமன்ற உத்தரவின்பேரில் பகத்சிங் தற்போது சேலம் சிறுவர் சீர்திருத்தப்பள்ளியில் (காவலில்) இருக்கிறார். அவர் கைதுக்குப் பிறகு அவரது தாயார் மனநிலை பாதிக்கப்பட்டவரானார்.

●



படிப்பகம்

www.padippakam.com

# அயோத்திதாசரின் பார்ப்பனிய சிந்தனைகள்

***இந்தச் சாதிய சமூகத்தில் தன்னை ஒடுக்கப்பட்ட சாதித் தன்னிலையாக உணர்ந்த அம்பேத்கர் தன் விடுதலையை, எல்லா ஒடுக்கப்பட்ட சாதிகளின் விடுதலையோடு சேர்த்துப் பார்த்தார். எனவே தான் ஒட்டு மொத்த தலித்துகளின் விடுதலை குறித்தே அவர் சிந்தனை, பேச்சு, போராட்டம், ஆகியவை அமைந்திருந்தன***

■ மதிவண்ணன்

தமிழ்ச் சூழலில் தலித் இலக்கியமும், தலித் அரசியலும் ஓரளவு வேரூன்றி விட்ட நிலையில் சமீப காலமாக தலித் அரசியலில் ஒரு புதிய மாற்றம் மிகத் தீவிரமாக முன்வைக்கப்படுவதை வாசகர்கள் அவதானிக்கலாம். தலித் அரசியலின் அறிமுக நிலையில் முன் வைக்கப்பட்ட அம்பேத்கரிய, பெரியாரிய சித்தாந்தங்களில், பெரியாரைக் காலிசெய்து விட்டு அவ்வெற்றிடத்தில் அயோத்திதாசப்பண்டிதரை முன்னிறுத் துவது தான் அந்த மாற்றம்.

பெரியார் சிந்தனைகளில் தலித் அரசியலுக்கு பங்களிப்பு செய்ய ஒன்றுமில்லையா? ஒரு சந்தர்ப்பத்தில் பேசிய பேச்சை மட்டுமே வைத்து பெரியாரை தலித்து களுக்கு எதிராக நிறுத்தி விட முடியுமா என்பது போன்ற கேள்விகள் ஒருபுறம் இருக்க, தோழர்கள் முன்னிறுத்தும் அயோத்திதாசர் அந்த இடத்துக்குத் தகுதியானவர்தானா என்பதைப் பரிசீலிப்பதும் அவசியமா கிறது. அதோடு, விமர்சனப் பார்வையற்ற ஒரு வழிபாட்டுத் தொனியு டனேயே அயோத்திதாசரை முன்வைக்கும் போக்கு தலித் அரசியலுக்கும், தலித் இலக்கியத்திற்கும் ஊறு விளைவிப் பதாகவே அமையும் என்ற புரிதலுடன், அயோத்திதாசரிடம் வெளிப்படும் சாதியக்கூறுகள் முதலான வற்றை ஆய்வுக்குள்ளாக்கும் முயற்சியாகவே இந்த கட்டுரை.

தலித்துகளால் தங்கள் தலைவராய் ஏற்றுக் கொள்ளப்பட்ட அம்பேத்கர் , அவர் பிறந்த மகர் சாதிக்காரர்களால் மட்டுமல்லாது இந்தியாவில் உள்ள அனைத்து தலித்துகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவர். இந்தச் சாதிய சமூகத்தில் தன்னை ஒடுக்கப்பட்ட சாதித் தன்னிலையாக உணர்ந்த அம்பேத்கர் தன் விடுதலையை, எல்லா ஒடுக்கப்பட்ட சாதிகளின் விடுதலையோடு சேர்த்துப் பார்த்தார். எனவே தான் ஒட்டு மொத்த தலித்துகளின் விடுதலை குறித்தே அவர் சிந்தனை, பேச்சு, போராட்டம், ஆகியவை அமைந்திருந்தன

மறு தலையாக அயோத்திதாசர் அவர் பிறந்த பறையர் சாதியினராலேயே முழுவதுமாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அயோத்திதாசரும் தன்னை



ஒடுக்கப்பட்ட தன்னிலையாக உணர்ந்தாலும் தன் விடுதலையை , தன் சாதியின் முன்னேற்றத்தோடு தொடர்புடையதாகவே பார்த்தார்.தான் பிறந்த பறையர் சாதி தான் உண்மையான பிராமணர் குலமாகும், வேஷ பிராமணர்களின் சதியால் யதார்த்த பிராமணர்களான பறையர்கள் வஞ்சிக்கப்பட்டு தாழ்நிலையில் இருக்கின்றனர் என்கிற விதமாக அவரது புரிதலும், பிரச்சாரமும் இருந்தது.

தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட சாதிகளில் பிரதானமானவை அருந்ததியர், பறையர், பள்ளர், ஆகிய சாதிகளாகும். இவை தவிரவும் சாதிய ரீதியில் ஒடுக்கப்பட்ட குறவர், கணியான்,புதரை வண்ணார், இருளர், காட்டு நாயக்கர் உள்ளிட்ட பிற சாதிகளையும் உள்ளடக்கியதே தலித் என்ற சொல்லாடலாகும் . இவர்களில் பள்ளர் சாதியைக் குறித்து பேசவே செய்யாமல் ஒருவித புறக்கணிப்பை நிகழ்த்தும் அதே வேளையில், இதர தாழ்த்தப்பட்ட சாதிகளை மேலாதிக்கம் செலுத்தும் ஒருவித மேட்டிமைப் பார்வையில் கேவலப்படுத்துவதை தனது எழுத்துக்களில் தொடர்ந்து செய்கிறார் அயோத்திதாசர்.

அம்பேத்கரின் அட்டவணைச் சாதியார் என்ற விளிப்பு எல்லா தலித்துகளையும் உள்ளடக்குவதாக இருந்தது. தீண்டாமை இழிவுகளை நீக்க எல்லா ஒடுக்கப் பட்ட சாதியாரும் ஒன்றுபடுவதை வலியுறுத்துவது அம்பேத்கரின் சித்தாந்தம். அவருடைய முழக்கமே கற்பி, ஒன்று சேர், புரட்சி செய் என்பதுதான்.

அயோத்திதாசரின் பூர்வீக திராவிடர்கள், சாதி



படிப்பகம்

www.padippakam.com

பேதமற்ற திராவிடர்கள் என்கிற விளிப்பு பறையர்களை மட்டுமே உள்ளடக்குவதாக இருந்தது. அதோடு ஒடுக்கப்பட்ட சாதிகளின் இணைவை முன்னிறுத்தவில்லை என்பதோடு , அம்முயற்சிக்கு எதிரானவராகவும் இருந்தார் என்பது மிக முக்கியமானதாகும்.

சனவரி 6, 1909 நாளிட்ட 'இந்தியாவில் தாழ்த்தப்பட்ட ஜாதியோருக்கு நியமிக்கப்பட்ட சங்கம்' என்று தலைப்பிட்ட கட்டுரையில் அயோத்திதாசர் இவ்வாறு எழுதுகிறார்.

*" இந்த டிசம்பர் மாதம் விடுமுறை காலத்தில் சில பெரியோர்கள் கூடி இந்தியாவில் தாழ்த்தப்பட்டுள்ள சாதியோரை சீர்திருத்த வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறார்கள்.*

*இவற்றில் இயல்பாகவே அறிவின்றி தாழ்ந்துள்ள சில வகுப்பாரும் உண்டு. சாதித் தலைவர்களின் விரோதத்தால் தாழ்த்தப் பட்டுள்ளவர் களும் நாளது வரையில் தாழ்த்தி வருகிறவற்றுள் தாழ்ந்தவர் களுமாகிய ஓர் வகுப்பாரும் உண்டு. அவர்கள் யாரென்பிரேல் குறவர், வில்லியர், சக்கிலியர், மலமெடுக்கும் தோட்டிகள் இயல்பாகவே தாழ்ந்த நிலையிலுள்ள வர்கள்.*

*சாதித் தலைவர்களாகும் வேஷ பிராமணர்களால் பறையரென்றும், சாம்பானென்றும், வலங்கையரென்றும் கூறி அவர்களை சுத்த ஜலங்களை மொண்டு குடிக்க விடாமலும், வண்ணார்களை வஸ்திரமெடுக்க விடாமலும், அம்மட்டர்களை சவரஞ்செய்ய விடாமலும், அந்தஸ்தான உத்தியோகங்களில் பிரவேசிக்க விடாமலும், ஏதோ துரை மக்கள் கருணையால் ஓர் உத்தியோகத்தை பெற்றுக் கொண்டபோதிலும் அதனினின்று முன்னுக்கு ஏறவிடாமலும் பலவகை இடுக்கங்களைச் செய்து தாழ்த்திக் கொண்டே வருகின்றார்கள், இவர்களைத் தாழ்ந்த வகுப்பார் என்று கூறலாகாது . சாதி பேதமுள்ள மற்றவர்களால் தாழ்த்தப்பட்ட வகுப்பார் என்று கூறல் வேண்டும்.*

*இவற்றுள் கூளங் குப்பைகளுடன் குணப்பெரும் பொருட்களையும் சேர குவித்து குப்பைக் குழியென்பது போல கல்வியிலும், நாகரீகத்திலும் விவேகத்திலும், ஒற்றுமையிலும் மிகுந்து வேஷ பிராமணர்கள் கற்பனா கதைகளுக்கிணங்காமல் விரோதிகளாய் நின்ற திராவிட பௌத்தர்கள் யாவரையும் பறையர், சாம்பார், வலங்கைய ரென்று தாழ்த்திக் கொண்டதுமன்றி சக்கிலி, தோட்டி, குறவர், வில்லியர் இவர்கள் யாவரையும் ஐந்தாவது சாதியென்னும், பஞ்சம சாதியென நூதன பெயரிட்டு மேன்மக்களாம் பௌத்தர்களையும் அக்குப்பையில் சேர்த்து பஞ்சம சாதியென்று வகுத்திருக்கின்றார்கள்"*
*(அ.தாசர் தொகுதி 1 பக்கம் 97)*

கூளங்குப்பைகள் X குணப்பெரும் பொருட்கள்
இயல்பிலேயே தாழ்ந்தவர் X மேன்மக்கள்
கல்வி, நாகரீகம், விவேகம், ஒற்றுமையற்ற தாழ்ந்த மக்கள் X இவைகளில் சிறந்த பறையர்கள்

என்கிற விதமாக அயோத்தி தாசர் கட்டமைக்கும் இருமை எதிர்வுகளையும் அவற்றின் பின் ஒளிந்துள்ள பாசிசக் கூறுகளையும் தலித் அரசியலில் அக்கறையுள்ள தோழர்கள் கவனிக்கவேண்டும். தோட்டிகளின் குழந்தைகள் படிக்கும் கல்வி சாலைகளுக்கும்,



***பள்ளர் சாதியைக் குறித்து பேசவே செய்யாமல் ஒருவித புறக்கணிப்பை நிகழ்த்தும் அதே வேளையில், இதர தாழ்த்தப்பட்ட சாதிகளை மேலாதிக்கம் செலுத்தும் ஒருவித மேட்டிமைப் பார்வையில் கேவலப்படுத்துவதை தனது எழுத்துக்களில் தொடர்ந்து செய்கிறார் அயோத்திதாசர்.***

பறைக்குழந்தைகள் படிக்கும் கல்வி சாலைகளுக்கும் பஞ்சம பாடசாலையென்ற ஒரே பெயரை வைத்து விட்டார்கள் என்று பதறிப் போகிறார் தலித் சிந்தனையாளர்.

*"ஆயிரத்து ஐந்நூறு வருடகாலமாக இந்த திராவிட பௌத்தர்களை தலையெடுக்க விடாமல் தாழ்த்தி பலவகை இடுக்கங்களைச் செய்து வந்த சத்துருக்களாகிய வேஷ பிராமணர்களுக்கு பருப்பில் நெய்யை விட்டதுபோலும், பாலில் பழம் விழுந்ததுபோலும் மென்மேலும் ஆனந்தம் பிறந்து தங்கள் வஞ்சகங்கள் யாவையும் சரிவர நிறைவேற்றி விடுவதற்காக, தோட்டிகள் பிள்ளைகளுக்குக் கல்வி சாலை வகுத்து அதையும் பஞ்சமர் பாடசாலை எனக் குறித்துவிட்டார்கள். இவ்வகைக் கருத்து யாதெனில், இன்னுஞ்சில காலங்களுக்குப்பின் தோட்டிகள், பறையர்கள் யாவரும் ஒரு வகுப்பாரென்றுங் கூறி இன்னுந் தலையெடுக்க விடாமல் நாசஞ் செய்வதற்கேயாம்."*

(தொகுதி 1 பக்கம் 138)

சாதி பேதமற்ற திராவிடர்கள், சாதிபேதமற்ற திராவிடர்கள் என்று மூச்சுக்கு முந்நூறு முறை தங்களைச் சொல்லிக் கொள்ளும் சிந்தனையாளர்களுக்கு , சாதி பேதமென்பது எது என்ற சிந்தனையை மட்டும் யாராவது சொல்லிக் கொடுக்காமல் போய் விட்டார்களே என்ற குறைதான் நமக்கு. பறையர் சாதியின் உட்பிரிவுகளுள் உள்ள பேதங்களைத் தான் சாதிபேதம் சாதிபேதம் என்று கருதி இருக்கிறார் நம் சிந்தனையாளர்.

இயல்பாகவே தாழ்ந்த சாதியார் குறித்த பட்டியலை இன்னொரு இடத்திலும் தயார் செய்கிறார் தலித் சிந்தனையாளர் அயோத்திதாசர்.

**பண்டிதருக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்புவரைகூட படைத்தலைவர்களாக அருந்ததியர்கள் இருந்த வரலாறு ஏன் வசதியாக மறந்துபோகிறது. மதுரை வீரன், ஒண்டி வீரன், பொட்டிப் பகடை, முத்தன் பகடை, கந்தன் பகடை என்று மாவீரர்கள் பிறந்த மக்கள் கூட்டம் அது என்கிற அறிவு இல்லாமல் போனதா?**



படிப்பகம்

www.padippakam.com

*"சாதி பேதமற்ற திராவிடர்களைப் போல் பராய சாதியோர்களால் நசுங்கி குன்றாமல் அவர்கள் சார்பாய் நிற்கும் படுகர், தொதுவர், கோத்தர், குறும்பர், வில்லியர், குறவர் இவர்கள் மீது மிஷிநெரிமார்கள் கவன கருணை வைத்து கல்வி பயிற்சி செய்து வந்தபோதிலும் கல்வி விருத்தியும், உத்தியோக விருத்தியும் இல்லாமலே மயங்கி நிற்கின்றார்கள். காரணம், இவர்கள் பூர்வம் நல்ல அந்தஸ்தில் இல்லாமல் தற்காலம் இருக்கும் நிலையிலேயே இருந்தவர்களாதலின் கருணை தங்கிய மிஷிநெரியார்கள் யாது விருத்தி செய்யினும் முழு விருத்தியடையாமல் இயங்குகின்றார்கள்.*

*சாதிபேதமற்ற திராவிடர்களோ அத்தகைய திகைப்பின்றி எங்கு கல்வி விருத்தி கிடைக்கின்றதோ அங்கு விருத்திபெற்றுச்சுகமடைகின்றார்கள்."* (அ.சிந்தனைகள் தொகுதி 1 பக்கம் 118).



இந்த பட்டியலில் இயல்பாய் தாழ்ந்த வகுப்பினரின் பட்டியல் இன்னும் கொஞ்சம் பெரிதாய் இருப்பதை வாசகர்கள் கவனிக்கலாம். இயல்பாய் தாழ்ந்த சாதியாய் இருப்பது என்பது எப்படி என்று நமக்கு விளங்கவில்லை. சரித்திரத்தின் பின்னோக்கிய பக்கங்களில் ஒன்றில் இந்த குறிப்பிட்ட சாதியோர் எல்லாம் ஒன்றாய்கூடி இன்று முதல் நாம் இயல்பாய் தாழ்ந்த சாதியராய் இருப்போம் என்று பிரதிக்ஞை எடுத்துக்கொண்டார்களா? அல்லது புத்த பகவான்தான் இவர்களை இயல்பாய் தாழ்ந்த சாதியாய் இருக்கக்கடவீர்கள் என்று அருளாசி அருளிப் போந்தாரா? பார்ப்பனீயம் வழங்கும் வருணாசிரம தர்மம் குறித்த வரையறைகளையும் பிரம்ம தோற்றுவாய் குறித்த கதைகளையும் அயோத்திதாசர் ஏற்கவில்லை என்பதால் இத்தகைய கருதுகோள்களுக்கு நாம் வரலாம்.

பண்டைத் தமிழரின் ஐவகை நிலமும், அந்நிலத்தில் வாழும் மக்களைக் குறித்தும் நாம் அறிந்தபடி குறிஞ்சி நிலம் சார்ந்த மக்களாய் அறியப்படுபவர்கள் குறவர்கள்- குறத்தியர்கள் ஆவார்கள். நம் சிந்தனையாளரின் இயல்பாய்த் தாழ்ந்தோரின் பட்டியலில் தவறாது இடம் பெறும் பாக்கியத்தை இவர்கள் பெற்றதும் பெறும்பேறுதான் போங்கள்.

இத்தகைய குறவர்கள் குறித்த தம் அரிய கண்டுபிடிப்பை நம் சிந்தனையாளர் ஓரிடத்தில் வெளிப்படுத்துகிறார்.

*"நூதன சாதி வேஷம் பூண்டுள்ள யாவரும் சாதி பேதமில்லாமல் வாழ்ந்திருந்தப் பூர்வ குடிகளைத் தாழ்ந்த சாதிகளெனக் கூறித் தாங்கள் தலையெடுக்க விடாமற் செய்வதுடன் வந்து குடியேறும் அன்னிய தேசத் தாருக்குந் தாழ்ந்த சாதியோர் எனக்கூறி அவர்களாலும் இழிவு கூறச் செய்து மலமெடுக்குந் தோட்டிகளுக்கும், மலோ பாதைக்குப் போனால் காலலம்பாது பூனையையும் பெருச்சாளியையும் பிடித்துத் தின்னும் குறவர் வில்லியருக்குங் கற்பித்து இவர்களைத் தாழ்ந்த சாதியோரெனக் கூறச் செய்து வரும் விரோத செய்கைகளையும் நாளுக்கு நாள் கண்டறிய முயன்ற எமக்கு."* (-1913 பக் 489)

நம் தோழர்கள் முன்வைக்கும் தலித் சிந்தனை யாளரின் தலித் உணர்வைக் கண்டு நாம் மெய் சிலிர்த்துப் போகாமல் இருக்க முடியாது. பெரியாரின் நம்மில் கீழ்த்தர மக்கள், சோறு, சீலை, காசுக்கு அலைபவர்கள் என்ற பிரயோகங்களை வைத்துக்கொண்டு அந்தக் குதி குதித் தவர்கள் அதேவிதமாய் இந்த பிரயோகங் களுக்கும் குதிப்பார்கள் என்று எதிர்பார்க் கலாமா? அல்லது பறைச்சிந்தனையாளர் குசு நாறாது, மணக்கும் என்பார்களா? என்பதை அவர்களேதான் முடிவு செய்து கொள்ளட்டுமே.

அங்ஙனமே நம் சிந்தனையாளர் துவேஷங்கொள்ளும் இன்னொரு மக்கள் கூட்டம் சக்கிலியர்கள் ஆவார்கள். இயல்பாய் தாழ்ந்த சாதியாரின் பட்டிய லில் இடம்பெறும் இவர்களை இழித்துப் பேசுவதில் வேறெந்த ஆதிக்கச் சாதி பாசிசச் சிந்தனை யாளனும் பிச்சை கேட்கவேண்டும் போங்கள்!

இயல்பாய் தாழ்ந்த சாதியாருக்கான பொதுக்குணங் களான கல்வியற்ற, நாகரீகமற்ற, விவேகமற்ற, ஒற்றுமையற்ற குப்பை கூளங்கள் என்ற நிரந்தரச் சான்றிதழ் அளித்ததோடு திருப்தி அடையாமல் பறையனாகிய நான் இழிந்தவனா என்று கேட்கும் போதெல்லாம் மேற்படி துர்பாக்கிய சாக்கியரென்னும் சக்கிலியரை நோக்கி கை நீட்டாமல் இருக்க முடியாது அவருக்கு.

*"தாழ்ந்த சாதியோர் வாசஞ்செய்யும் இடத்தில் உயர்ந்த சாதிகள் போவதில் சாதி கெடும் என்பது அவரது அபிப்ராயமாய் இருக்குமாயின் சக்கிலிப்பிணம், தோட்டிப் பிணங்களை அறுத்து சோதிப்பதைவிட பறைச்சேரியின் வழியாகப் போவதால் சாதி கெடமாட்டாது"*

(செப். 23 - 1908 பக்:74)

*"தற்போது கிறிஸ்தவர்கள், பஞ்சமர்கள், மகமதியர்களென்றுக் குறிப்பிட்டு காப்பி வோட்டல் பலகைகளில் எழுதி வைத்துள்ளவைகள் சாதி சம்பந்தச் செயலாயின் மற்றைய குறவர், வில்லியர், சக்கிலியர், தோட்டிகளென்னும் நான்கு வகுப்பாரும் வரலாமோ, வரக்கூடாதோ விளங்கவில்லை. அவர்களும் வரக்கூடாதாயின் அந்நான்கு வகுப்புப் பெயர்களையும் பலகைகளில் எழுதி வைத்திருத்தல் வேண்டும்."*

(ஆகஸ்டு 17-1910 பக்:273)

*"... நமது அம்மட்டன் பறையர்களுக்கு சவரம் பண்ணக்கூடாது. நமது வண்ணான் பறையர்களுடைய வஸ்திரங்களை எடுத்து வெளுக்கப்படாது. டாக்டர் வேலையிலமர்ந்து, தோட்டிப் பிணமாயினும் சக்கிலிப் பிணமாயினும் நன்றாய் தொட்டு அறுக்கலாம். ஊனுறுப்புகளைச் சோதிக்கலாம். ஆயினும் பறையனை*

**அயோத்தி தாசரும் தன்னை ஒடுக்கப்பட்ட தன்னிலையாக உணர்ந்தாலும் தன் விடுதலையை தன் சாதியின் முன்னேற்றத்தோடு தொடர்புடையதாகவே பார்த்தார். தான் பிறந்த பறையர் சாதி தான் உண்மையான பிராமணர் குலமாகும். வேஷ பிராமணர்களின் சதியால் யதார்த்த பிராமணர்களான பறையர்கள் வஞ்சிக்கப்பட்டு தாழ்நிலையில் இருக்கின்றனர் என்கிற விதமாக அவரது புரிதலும், பிரச்சாரமும் இருந்தது.**



படிப்பகம்

www.padippakam.com

**பறையர்கள் பூர்வ பௌத்தர்கள் என்று சொல்வதற்கான காரணங்கள் என்று அவர் காட்டும் அத்தனையும் அருந்ததியர்களுக்கும் பொருந்துபவையாயிருப்பதை ஏன் மறந்து போகிறார் என்பதும் முக்கியமான கேள்வி.**

*மட்டிலுந்தீண்டப்படாது."*

(பிப்:5 - 1913 பக்:452)

இவை தவிரவும் கம்மாளர், சக்கிலியர், பறையர் உறவு குறித்த ஒரு வாசகரின் கேள்வியையும் அதற்கான பண்டிதரின் பதிலையும் பார்ப்போம்.

*வினா:*

*பூர்வ பௌத்த சக்கிரவர்த்திகளின் வமிஷ வரிசையோடும் பௌத்த சிகாமணிகளுமாயிருந்து தற்காலம் பறையரென்று அழைக்கப்படுவோர்களுமாய ஏழை மாக்கள் விசுவ பிரம்ம குலத்தாரென்னும் கம்மாளரிடம் ஜலபானஞ் செய்யாது சாத முதலியது உண்ணாதுந் தங்களைவிட கம்மாளர் கீழானவர்களென்றுக் கொண்டுள்ள வைராக்கியம் யாதுக்கு?*

*கோசிங்கிகள் என்றழைக்கப்படுஞ் சக்கிலியரை பறையரென்போர் மாமன் மைத்துனன் உறவாய் முறை கொண்டாடி, உண்பன, கொள்வன, கொடுப்பனவை களில் சம்பந்தப்படாமனிற்பதோ ஒருவருக்கொருவர் வீதிகளில் ஒருவருக்கொருவர் பாதரட்சை அணிந்து ஏகாது உறுதி செய்துகொண்டு இவ்விரு தரத்தாரில் யாரேனுந் தெரிந்தோ, தெரியாதோ வீதிகளில் பாதரட்சை அணிந்து ஏகினால் இருவகுப்பாரும் பஞ்சாய சபைக்கூட்டி தவறு செய்தவனிடம் அபராதம் முதலியவைகள் வாங்கி வருவதெற்றுக்கு?*

*(சி.முத்துக்குமாரசாமி, நாதமுனி, தீர்த்தகிரி உபாத்தியாயர், ஜோலார்பதி)*

*விடை:*

*"ஜோலார்பதி, உபாத்தியாயர்களே சற்று நோக்குவீர்களாக. தாங்கள் வினவியுள்ள சங்கைகள் யாவும் மத்தியில் தோன்றி மறைந்தவைகளேயாம். அதாவது பிராமணர்களென்போருக்கும், கம்மாளர்களென் போருக்கும் சித்தூர் ஜில்லாவில் நேரிட்ட வழக்கில், கம்மாளர் ஜெயம் பெற்றபோது பிராமணர்களென்போர் பறையர்களென்று அழைக்கப்படுவோரை வலங்கையரெனத் தங்களுடன் சேர்த்துக் கொண்டு இவர்களுக்குக் கற்பித்த விரோதச் செயலால் அவ்வகை உண்பிணையைத் தவிர்த்து வீண் விரோதிகளாகி விட்டார்களன்றி வேறில்லை. மற்றபடி இவர்கள் அவர் களுக்குத் தாழ்ந்தவர்களல்ல. அவர்கள் இவர்களுக்குத் தாழ்ந்தவர்களல்ல. பிராமணர்களென்போர் செய்த விரோத செயல்களேயாம்.*

*வசிஷ்டரைச் சக்கிலிச்சு மகனென்று கூறியுள்ள ஒரு சரித்திரத்தைக் கொண்டும் விஸ்வாமித்திரப் பரம்பரையைக் கொண்டும் மைத்துனர் முறை கொண்டாடி வந்த சில சரித்திரங்களை ஒட்டி பேசி வந்தபோதிலும் அவர்களது அசுத்த செயலை ஒட்டி உண்பிணையற்றிருப்பதுடன் வாசஞ் செய்யும் வீதிகளில் பாதரட்சை அணிந்து வரப்போகாதென்றும் எடுத்து வந்தார்கள்* (சனவரி31, 1912, பக்:695)

கேள்விகளின் இரு பகுதிகளுக்கான பதில்களுக் கிடையே உள்ள வித்தியாசத்தை உணர முடிகிறதா? கேள்வியாளர் ஒருவருக்கொருவர் என்று இரு தரப்பாரையும் குறிப்பிட்டு கேட்பதற்குத் தந்திரமாய் சக்கிலியரை மாத்திரம் குறிப்பிட்டுப் பதில் சொல்வதைக் கவனியுங்கள்.

பறையர்கள் பூர்வ பௌத்தர்கள் என்று சொல்வதற்கான காரணங்கள் என்று அவர் காட்டும் அத்தனையும் அருந்ததியர்களுக்கும் பொருந்துபவையா யிருப்பதை ஏன் மறந்து போகிறார் என்பதும் முக்கியமான கேள்வி.

ஆயிரத்தைந்நூறு வருடங்களுக்கு முன் பறையர்கள் நல்ல நிலையில் இருந்தார்கள் என்று துப்பறிந்து சொல்லும் பண்டிதருக்கு , ஒரு நூற்றாண்டுக்கு முன்புவரைகூட படைத்தலைவர்களாக அருந்ததியர்கள் இருந்த வரலாறு ஏன் வசதியாக மறந்துபோகிறது. மதுரை வீரன், ஒண்டி வீரன், பொட்டிப் பகடை, முத்தன் பகடை, கந்தன் பகடை என்று மாவீரர்கள் பிறந்த மக்கள் கூட்டம் அது என்கிற அறிவு இல்லாமல் போனதா? வெள்ளைக்காரர்கள் வரும் வரையிலும் இங்கு மலம் கழிக்க கக்கூஸ்கள் என்ற ஒரு தனி அமைப்பு இல்லாமலிருந்ததும், அதுவரையில் மனிதக் கழிவுகளை மனிதர் எடுக்கும் அவலம் இல்லாமல் இருந்ததும் உறைக்காமல், மனித இனம் தோன்றியது முதலே அருந்ததியர்கள் மலமெடுத்து வந்ததைப்போல் அத்தனை அருவருப்புடன் அவர்களைப் பார்க்கச் செய்வது எது?

அதோடு அம்மாமிகள் ஸ்ரீராமஜெயம் எழுதுவது மாதிரி பக்கத்துக்கு பக்கம், வண்ணார்களை வஸ்திர மெடுக்க விடமாட்டேன் என்கிறார்கள். அம்மட்டர்களை சவரம் செய்ய விட மாட்டேனென்கிறார்கள் என்று புகார் மனு எழுதிக்கொண்டே போகிறவருக்கு, அவர்கள் மட்டும் வண்ணார்களாகவும், அம்பட்டர்களாகவும் ஏன் இருக்கவேண்டும் என்கிற கேள்வி மட்டும் ஏன் ஒருபோதும் எழவேயில்லை?

தூய்மை X அசுத்தம் என்கிற விதமான எதிர்வுகளைக் கட்டமைத்து மற்றதை தீட்டு என்று ஒதுக்கி வைப்பது பார்ப்பனீயத்தின் கூறு.

கல்வியறிவில்லாமை, நாகரீகமில்லாமை என்ற காரணங்களினால் மனிதர்களில் சேர்த்தியில்லாதவர்கள் என்று காரணம் சொல்லி கருப்பர்களை ஒடுக்கியது வெள்ளையரின் நிறவெறி சித்தாந்தம். இவ்விரண்டு விதமான பார்வைகளுடனும் பிற தலித் சாதியினரை கேவலப்படுத்தும் போக்கை அயோத்திதாசரிடம் நாம் காணலாம்.

இவ்வாறு, பார்ப்பனீயமும், பாசிசமும் இணைந்த பார்வையே ஏனைய தலித் சாதிகள் மீதான அயோத்திதாசரின் பார்வை என்பதை நிறுவலாம். மற்றபடி அவர் தலித்துகளுக்கான சிந்தனையாளர் அல்ல என்பதை நிறுவ அவர் எந்த இடத்திலும் பறையர் தவிர்த்த பிற தலித் மக்களுக்காக ஒருவரியும் எழுதவில்லை என்கிற உண்மையே போதுமான ஒன்றாகும்.

இவ்வளவு விமர்சனங்களிருக்கையில் அயோத்தி தாசரைப் பெரிய ஒளிவட்டத்துடன் முன்னிறுத்தும் தோழர்கள் உண்மையில் அயோத்திதாசரைப் படித்திருக்கிறார்களா? படித்திருந்தால் இந்த கேள்விகள் எல்லாம் அவர்களுக்கு எழவில்லையா? எழுந்தால் அவை குறித்த விமர்சனங்களை எங்கேதும் முன்வைத் திருக்கிறார்களா? குறைந்தபட்சம் புத்தமித்திரன் போன்றவர்கள் முன்வைத்த விமர்சனங்களுக்குப் பிறகும் ஏன் வாய்திறக்க மறுக்கிறார்கள்? என்ற கேள்விகளுடன் இப்போதைக்கு நிறுத்திக்கொள்ளலாம், இதற்காகவாவது வாய் திறப்பார்கள் என்ற நம்பிக்கையுடன்.

●



படிப்பகம்

www.padippakam.com

*விஸ்வாமித்திரன்*

# போர் முகாமிலிருந்து ஒரு கடிதம்

போர்ச்சூழலில்
எங்கே மறைந்தாய் நேற்று

உன்னிடமும் வாளிருப்பதால்
(அது தீட்டப்படாததாயினும்)
களத்திலிருப்பாய் என
நம்பியிருந்தேன்

நரம்பில் ஊசி நுழைக்கும்படியான
தீய செய்தி
நீ தொலைந்த இன்று காலை வந்து
சேர்ந்தது

வழி பிறழ்ந்த
எறும்பினோட்டமாக
எனது பதற்றம் அழுகைப்பட்டது
அக்கணம்

குழந்தைகளும்
(பீரங்கிப் புகையால் உறிஞ்சப்பட்ட
பூக்களின் முகம் மங்கத் துவங்கிவிட்டன)
இனியும் வாழத் துவங்காத
பெண்களும்
உயிரின் இறுதி விளிம்பில்
உடல்காக்க அஞ்சிமருண்ட ஆண்களும்
முந்தைய இரவில்
நான் (நீயும்)
உண்டபின் உறங்கின தருணம்
இருப்பின் திகைப்பு வழிய
குண்டடிபட்டு
இறந்துபோனார்கள்

புதைக்கப்படாமலும் எரிக்கப்படாமலும்
கண்களில்
வாழ்வின் கற்பனை
இன்னும் சாகாமல்

வானம்கூர்ந்து கிடக்கின்றன
மலையுயரும்
அழுகக் காத்திருக்கிற சடலங்கள்

உனது
வாய்பேசாத எழுதுகோலின்
உறைந்த ரத்தம்
நீலம்பாரித்த விதத்தில்

முன்னமே கூட
வெம்மை படர்ந்த உனது
அலுவலகத் தட்டச்சின் சப்தச் சீற்றத்தை
சிறுவரையும் தூக்கிலிட்டு
அகம் மகிழும் போர்குணத்தின்
வெற்றுச் சிரிப்பின் துப்பாக்கித் தெறிப்புக்களாக
உணர்ந்திருக்கிறான்
மஹ்மல்பஃப்பின்★
'ஆசீர்வதிக்கப்பட்ட திருமணத்தின்'
மனம் சிதைந்த கதாகலைஞன்
(அவன் எழுதின புகைப்படங்களில்
தனிமையின் வறுமை
மிகக் குரூரமானது)

அவனைப்போலவே
எதிரியை
கொல்ல அறியாமல்
என்னிடமிருந்த ஆயுதத்தை
தாமதியாது வீசத் துவங்கிவிட்டேன்
காற்று கிழிபட
ஒரு தற்காலிக கவிதையாக

**ஜூன் 30**

**மேலவளவு**
**சாதி ஒழிப்புப் போராளிகள்**
**நினைவு நாள்**



படிப்பகம்

www.padippakam.com

நீ
இதயம் மீண்டு திரும்ப நேரும்
போரின் மீதப் புகையிரவுகளில்
(பெருகி அலையும் கவிஞன்
சே.குவேராவின் அன்பு நிழலாக)
இந்தக் கவிதை
உனது மலம் துடைக்க உதவுமாயின்
கூட
மகிழ்வடைவேன்
சற்று உரக்க நட்பால் புன்னகைத்து

கொலைகளுக்கெதிரான
வருத்தமோ சிறு அழுகையோ
ஆகாது இனி
மேலும்

காணாமல் ஆன
(பிரேதங்களை அடையாளம் தேடும்
தாயின் கோபத்துடன்)
உனக்கு நான் கூறவிழைவது
ஒன்றுதான்

ஒருவேளை
உனக்கும் விரல் முளைத்திருந்தால்
எழுதின
கவிதையை ஆயுதப்படுத்து

எதிரிகளின்
செவிகள் நொறுங்கிவிடும்படியான
அதன் ஓசையை
விரவவிட்டு
உனது இன்றைய இருப்பை தெரிவி





அன்பின்
அகம் விதைக்கும்
கலை யுத்தம் - கைவரப் பெற்றால்
நான்
கூறுமிடம் வந்து சேர்

காலம்
வெகுவாகக் கடந்துவிட்ட போதிலும்
நான்
முன்தொடர்கிறேன்

உணவற்று உறக்கமற்று
காத்திருக்கிறான் ஹாஜி★★
கண்காணிப்பு மடிந்த வீதிகளில்
நமது
தொலைதூர வருகைக்காக
கவலை மற்றும் பயங்களுடன்.

●

(போரின் மூர்க்கத்தால் வாழ்வு
கலைக்கப்பட்ட ஈராக்கிய மக்களுக்கு)

★ *ஈரானிய திரைப்படக் கலைஞர், சமூக போராளி*

★★ *மஹ்மல்பஃப் பின் 'ஆசிர்வதிக்கப்பட்ட திருமணம்'(Marriage of Blessed ) திரைப்படத்தின் மையப் பாத்திரம். ஈரான் - ஈராக்கிய யுத்தத்தால் மனம் சிதைந்து பிரபஞ்ச ரீதியான வன்முறைக்கு எதிராக அக்கறை கொண்டு வாழ்வு உழலும் ஒரு புகைப்படக் கலைஞன் .*

*ஈராக் போர்க்கால ஓவியங்கள்* - **Matt Sesow**


**ஜூலை 23**

**தாமிரபரணி**
**உழைக்கும் வர்க்கத் தியாகிகள்**
**நினைவுநாள்**




படிப்பகம்

www.padippakam.com

# பாசிசத்தின் நிலம் - இடைநிலைச் சாதியினரின் உளவியல்

*மூடத்தனத்தை, கடவுள் நம்பிக்கையை, ஏமாற்றுவதையே ஒரு தொழிலாகச் செய்து வயிறு வளர்ப்போர் தங்களுக்கு ஆதாரமாக இருக்கும் கோவில், கடவுள், மதம் ஆகியவற்றின் பெயரால் திரட்டப்படுவதும், தங்களது விரோதிகள் எனச் சொல்லப்பட்டவர்களது நிறுவனங்கள், வாகனங்கள், சொத்துக்கள், வழிபாட்டுத் தலங்கள் மீது தாக்குதல் தொடுப்பதும், கொள்ளையடிப்பதும் மிகச் சிரமமானதல்ல.*

■ *குமரன்தாஸ்*

கல்லலில் இருந்து இளையான்குடி செல்லும் பேருந்துகள் பெரும்பாலும் நெரிசலாகத்தான் இருக்கும். உட்கார இடம் கிடைப்பதே அரிது. அப்படித்தான் ஒருநாள் பேருந்தினுள் முண்டியடித்து ஏறி இருவர் அமரும் இருக்கையில் ஒருவர் மட்டும் அமர்ந்திருந்ததால் அவரருகில் சென்றமர்ந்தேன். ஜன்னலருகே அமர்ந்திருந்த அவர் உடல் பருமனான ஒரு இசுலாமியர். அவர் எவ்வித அசைவும் இன்றி ஏற்கனவே கால்களை அகட்டி எப்படி அமர்ந்திருந்தாரோ , அப்படியே அலட்சியமாக அமர்ந்திருந்தது எனக்கு கோபத்தை ஊட்டியது. என் மனதிற்குள் அவரைத் திட்டத் துவங்கினேன். அப்போது என் சிந்தனையில் வந்து விழுந்த வார்த்தைகளைக் கண்டு நான் அதிர்ந்து போனேன்.

'இது நாலதான ஆர்.எஸ்.எஸ்.காரன் உங்கள....' என்னுள்ளே அமுங்கிக்கிடந்த எனது மத அடையாளம் மேலே மூடிக்கிடந்த பல்வேறு முற்போக்கு முகமூடிகளை எல்லாம் கிழித்துக்கொண்டு வெளிவந்தபோது அவமானத்தில் நான் குன்றிப்போனேன். எப்படி இவ்வளவு கேவலமான, கொடூரமான ஒரு சிந்தனை என்னுள் எழுந்தது?

நான் பிறந்து வளர்ந்த இந்து மதச்சூழலில் இருந்தும், இந்து மதத்திலிருந்தும் என்னைக் கறாராகத் துண்டித்துக் கொள்ளாததும் , யாராவது கேட்டால், 'எனக்கு மதத்தின் மீது, கடவுள் மீது நம்பிக்கை இல்லை' என்று மழுப்பிக்கொண்டு வந்துள்ளதும் இப்போது புரிகிறது.

தலித் மக்களைத்தவிர, தலித் இயக்கங்களைத் தவிர வேறு யாரும், எந்த சாதியினரும், இயக்கத்தவரும் இதுநாள் வரை மதமாற்றத்தை ஒரு அரசியல் எதிர் நடவடிக்கையாக, இந்து மதத்திற்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

புரட்சியாளர் அம்பேத்கர், தந்தை பெரியார் போல, இங்குள்ள பொதுவுடமையர் மற்றும் பிற கட்சியினர் மத மாற்றம் குறித்து (ஆதரித்து) வெளிப்படையாகப் பேசாதது ஏன் என்பதும் சிந்திக்கத்தக்கது.

ஆர்.எஸ்.எஸ்.சின் வளர்ச்சிக்கான அடித்தளம் இங்குதான் உள்ளது. சாதி இந்துக்களின் ஆழ்மனதில் இசுலாமியரைப் பற்றி ஒரு கற்பிதம் ஏற்றப்பட்டுள்ளது. 'இந்த நாட்டிற்குச் சொந்தமில்லாத அந்நியர், இந்துக்களின் தயவினால், விட்டுக்கொடுத்தலால், பெருந்தன்மையினால் இங்கு உயிர் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். எனவே தங்களோடு போட்டி போட தார்மீக உரிமையற்றவர்கள், உரிமைகளுக்காக போராடக்கூடாதவர்கள், தங்களைக் கண்டு ஒதுங்கிப் போய்விட வேண்டியவர்கள்'. இதற்கு மாறாக இசுலாமியர் தங்களுக்கான சமஉரிமைகளைப் பெற முற்படும்போதும், போட்டி போடும்போதும் சாதி இந்துப் பொது உளவியலானது கோபம் கொள்கிறது.

அந்த வகையில் என்னிடம் பேருந்தினுள் வெளிப்பட்டதுதான் 'இதுநாலதான ஆர்.எஸ்.எஸ்.காரன் உங்கள' என்ற சிந்தனை. இதேபோல இசுலாமியருக்கு நிகராக, ஏன் மேலதிகமாகக்கூட, சமஉரிமையற்றவர்களாக இன்னும் சிலரையும் சாதி இந்து உளவியல் கருதுகிறது. அவர்கள் தலித்துகள், பெண்கள், அலிகள், பழங்குடியினர் போன்றோர்.

சாதி இந்துக்களது இந்தப் பொது உளவியலை இதுநாள்வரை அவர்கள் சார்ந்துள்ள எந்த அரசியல் கட்சிகளுமே பெரியளவில் அசைக்கவில்லை என்பதே உண்மை. (குறிப்பாக சமூக மாறுதலைப்பற்றி பேசுகின்ற பொதுவுடமை அமைப்புகள், புரட்சிகர அமைப்புகள், தேசிய இன விடுதலை அமைப்புகள் போன்றவை இவ்விசயத்தில் விட்ட இடைவெளிகளே ஆர்.எஸ்.எஸ். சின் இன்றைய வளர்ச்சிக்கான முக்கிய காரணியாக இருக்கிறது). இவ்வமைப்புகள் செய்த வேலையின் எல்லை என்பது இசுலாமியரை தாக்குவதிலிருந்து (வெளிப்படையான தாக்குதல்) தனது (கட்சி) ஊழியரை தடுத்து நிறுத்தியுள்ளதும், தாக்கப்பட்டபிறகு கண்டனக் குரல் எழுப்புவதும் என்ற இடத்திலேதான்.

மாறாக, இந்து மதத்தை, இந்து உளவியலை, ஆர்.எஸ்.எஸ்.யை தனது தாக்குதல் இலக்காக ஒருபோதும் கொண்டதில்லை. இதற்கான சித்தாந்த அடித்தளமாக இருப்பது இவர்களது மதச்சார்பின்மை பற்றிய புரிதலும், பொருளாதார வாதமும், பார்ப்பனிய தலைமையுமாகும்.

ஒருமுறை எனது தகப்பனாரும் எனது மாமாவும் பேசிக்கொண்டிருந்தபோது இசுலாமியர் குறித்து இருவரும் ஒரே கருத்தினை வெளிப்படுத்தினர். எனது தகப்பனார் மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர், மாமா இடதுசாரி தொழிற்சங்க உறுப்பினர். அவர்களது பேச்சின் சாரம் இதுதான். ''இசுலாமியர் நமக்கு எதிரான பழக்க வழக்கங்களைக் கொண்டுள்ளவர்கள், நாம் எதைச் செய்தாலும் அதற்கு எதிராக அவர்கள் செய்வார்கள்''.

இந்தியத் துணைக்கண்ட பொது உளவியல் இத்தகையதுதான். நீண்ட காலமாக தாங்கள் வாழ்ந்து வரும் வாழ்க்கை முறை பற்றிய எந்தவித எதிர்ச்சிந்தனையும் இவர்களுக்கு எழவில்லை. அதனால்தான் இந்து மதவெறிக்கும்பல் இசுலாமியரைத்தாக்கும்போது -அதுவும் அனைத்து இந்துக்களின் பெயரால் தாக்கும்போது -




படிப்பகம்

www.padippakam.com

இவர்களுக்கு அது எவ்வித உறுத்தலையும் ஏற்படுத்த வில்லை என்பதோடு வேடிக்கை பார்க்கவும் செய்கின்றனர். ஒரு பொதுவுடமைக் கட்சியின் உறுப்பினர் களது நிலையே இப்படியென்றால் மற்ற முதலாளியக் கட்சியின் உறுப்பினர்களைப் பற்றி கேட்கவே வேண்டாம்.

ஒருநாள் எங்கள் பகுதியில் இந்து முன்னணியைச் சேர்ந்த நபர் ஒருவர் அரசியல் காரணங்களால் யாரோ சிலரால் தாக்கப்பட்டபோது அத்தாக்குதலுடன் தொடர்பற்ற இசுலாமியர் கடைகள் அமைந்திருந்த கடை வீதிக்குள் நுழைந்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சாதி இந்து ஒருவன் ‘அடே துலுக்கப் பயல்களா, அண்ணனுக்கு மட்டும் ஏதாவது ஆச்சுன்னா நீங்கள் எல்லாம் இங்கு கடையே வைக்க முடியாது’ என்றும், இன்னும் பலவாறும் திட்டிவிட்டுச் சென்றான்.



மேலும் இந்து முன்னணி, ஆர்.எஸ்.எஸ். காரர்கள் எந்த ஊரில் தாக்கப்பட்டாலும் தொடர்ந்து எங்கள் பகுதி இசுலாமியர் கடைகள் சூறையாடப்பட்டன. இதன் காரணமாக ஒருவகையான பீதி உருவாகி , இதுபோன்ற தாக்குதல் நிகழ்ச்சிகள் எந்த ஊரிலாவது நடந்த செய்திகள் கேள்விப்பட்டதுமே இசுலாமியர் தங்களது கடைகளை மூடி விட்டுச் சென்று விடுவர். ஆனாலும் இந்து மதவெறிக் கும்பல், அடைத்திருக்கும் கடைகளின் கதவுகளை உடைத்து பொருட்களை கொள்ளையடித்தும், தீயிட்டும் அராஜகம் புரிகின்றனர்.

இச்செயல்களில் ஈடுபட்டவர்கள் யாவரும் இடை நிலைச்சாதி இந்துக்களே. இவர்கள் ஆர்.எஸ்.எஸ்.சின், இந்து முன்னணியின் விளிப்பிற்கு (அழைப்பிற்கு) செவிமடுத்து இசுலாமியர் மீது தாக்குதல் தொடுப்பதற்கு , வெறுமனே இவர்களுக்குள் ஏற்றப்பட்டுள்ள இந்துமதவெறி என்று மட்டும் பார்ப்பதைவிட இவர்களது வாழ்நிலை, பொருளாதாரச் சூழல், இதுபோன்ற தாக்குதல்களில் ஈடுபடும்போது கிடைக்கின்ற ‘பங்கு’ போன்றவற்றையும் இணைத்துக் காணவேண்டும்.

பெரும்பாலான கோயில் நகரங்களில்தான் ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணி எளிதாக வளர்ச்சி பெறுகிறது. கோயில்களால் பலன் பெறுவது இன்று பார்ப்பனர் மட்டுமல்ல. கோவிலை ஒட்டி இடைநிலைச்சாதி இந்துக்கள் பல்வேறுவிதமான வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொண்டுள்ளனர். வேலையில்லாத் திண்டாட்டம், தொழிற்துறை வளர்ச்சி பரவலாக்கப்படாத சூழலில் இதுபோன்ற கோவில்களே பல்வேறு தொழிற்களுக்கான களமாக இருக்கிறது. ஆனால் இத்தொழில்கள் பெரும்பாலும் பார்ப்பனிய மூடத்தனத்தை அடிப்படையாகக் கொண்டும் இருக்கும். குறைந்தது நேரடியாக 500 குடும்பங்களும் மறைமுகமாக 500 குடும்பங்களும் பலன்பெறும் விதமாக கோயிலைச் சுற்றி ஒரு தொழில்துறை கட்டமைக்கப்பட்டிருக்கும்போது ஆர்.எஸ்.எஸ். வளர்ச்சிக்கான இந்து உளவியல் வளர்க்கப் படுவது மிக எளிதாகிவிடுகிறது.

இவ்வாறு மூடத்தனத்தை, கடவுள் நம்பிக்கையை, ஏமாற்றுவதையே ஒரு தொழிலாகச் செய்து வயிறு வளர்ப்போர் தங்களுக்கு ஆதாரமாக இருக்கும் கோவில், கடவுள், மதம் ஆகியவற்றின் பெயரால் திரட்டப்படுவதும், தங்களது விரோதிகள் எனச் சொல்லப்பட்டவர்களது நிறுவனங்கள், வாகனங்கள், சொத்துக்கள், வழிபாட்டுத் தலங்கள் மீது தாக்குதல் தொடுப்பதும், கொள்ளையடிப்பதும் மிகச் சிரமமானதல்ல.

இசுலாமியர் மீதான தாக்குதலை அவர்களது சொத்துக்களைச் சூறையாடுதல் , வாழ்வாதாரங்களை அழித்தல், காயப்படுத்துதல் என்ற நேரடி வன்செயல்களாக மட்டும் நாம் சுருக்கிக் காண முடியாது. இன்னும் பல்வேறு வகையில் நுண்ணளவில் தொடர்ந்து தாக்கப்பட்டு , அவர்களது உளவியலே சிதைக்கப்பட்டு இசுலாமியரல்லாத பிற மத மக்களை சந்தேகத்துடனும் அச்சத்துடனும் அணுகத் துவங்கி விட்டனர். இசுலாமியர் தங்களது சுய விருப்பங்களையெல்லாம் மறைத்துக்கொண்டு இந்துப் பாஸிஸ்டுகள் வரையறுத்துக் கொடுத்துள்ள எல்லைகளுக்குள்ளே பேசவும் செயல்படவும் துவங்கி விட்டனர். சிந்தனைச் சுதந்திரம், கருத்தியல் சுதந்திரம் என்ற அடிப்படை மனித உரிமையே இங்கு கேள்விக் குறியாகி உள்ளது.

சமீபத்தில் நடைபெற்ற உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் போது பாகிஸ்தானும் இந்தியாவும் விளையாடிய (மோதிய) அன்று வடமாநிலங்களில் ‘இந்தியா வெல்ல வேண்டும் என்று இறைவனை வழிபடுவதான’ சுவரொட்டிகளை இசுலாமியர் ஒட்டியுள்ளதாக தினசரி களிலும், தொலைக் காட்சி களிலும் இசுலாமியரது தேசபக்தி என்ற பெயரில் வெளிப்படுத்தியதை நாம் பார்த்தோம். இவ்வாறு தங்களது தேச பக்தியை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயம் சீக்கியருக்கோ, இந்துக்களுக்கோ இங்கு ஏன் ஏற்படவில்லை என்பது இங்கு சிந்திக்கத்தக்கது.

இசுலாமியர் மீதான, ஆழமானதும் நுண்ணளவி லானதுமான தாக்குதலுக்கு மற்றொரு உதாரணம்: உங்களது ஊர்களில் அமைந்துள்ள கடைகள், வணிக நிறுவனங்களது பெயர்களைக் கவனியுங்கள். அது இசுலாமியர் பெரும்பான்மையாக வாழும் ஊராக இருந்தாலும் சிறுபான்மையாக வாழும் ஊராக இருந்தாலும் அங்குள்ள இந்துக்களது கடைகளின் பெயர் அவர்களது மத அடையாளத்தை வெளிக்காட்டும் விதமாக , கடவுள்களின் பெயராலோ அல்லது அவர்களது சாதியின் பெயராலோ ‘ஸ்ரீகிருஷ்ணா ஐயங்கார் பேக்கரி, ‘சுப்பையா நாடார் மளிகை’, இப்படி பலவிதமாகப் பார்த்திருப்பீர்கள். ஆனால் இசுலாமியர் பெரும்பான்மையாக வாழும் ஊர்களைத்தவிர பிற ஊர்களில் இசுலாமியர்களது, கடைகளின் பெயர்கள் அனைத்தும் தங்களது சுய (மத) அடையாளத்தை இழந்து ‘பொது’, ஐரோப்பிய, தமிழ் அடையாளங்களின் பின் தங்களை மறைத்துக் கொண்டிருப்பதைக் காண்பீர்கள். உதாரணமாக: A1, இந்தியா (சில்க்ஸ்), தமிழ்நாடு (மெட்டல்), குறிஞ்சி, அரசன், ஸ்டார், பெஸ்ட், கெஸ்ட், பார்க், சோழா, மிஸ்டர், மாஸ்டர், ப்ரண்ட்ஸ், மினி, ராசி, ராயல், அப்பல்லோ... இப்படி இன்னும் எத்தனையோ விதமான பெயர்கள்.

சிலர் கூறலாம் ‘தங்களது வியாபார நலனுக்காக, எல்லோரும் தங்களது கடைகளில் வந்து தயக்கமின்றி பொருட்கள் வாங்க வேண்டும் என்பதற்காக பொதுப் பெயர் வைத்திருக்கிறார்கள்’ என்று. அந்த தயக்கம் ஏன் என்பதுதான் இங்கு பிரச்சினையே.

அதேபோல் தமிழகத்தில் பெரும் செல்வாக்குச் செலுத்திக்கொண்டிருக்கும் திரையுலகில் நடிகர் ஜேம்ஸ் விஜய் பெயரை விஜய் என்று சுருக்கி தனது கிறித்துவ அடையாளத்தை மறைத்துக்கொள்கிறார். ரஹ்மான் ரகு என்று மாற்றப்படுகிறார். சம்சுதீன் ஷாம் என்றும் மாற்றப்பட்டுள்ளார். இன்னொரு (இசுலாமிய) இயக்குனர் துரை என்றும்



படிப்பகம்

www.padippakam.com

மற்றொருவர் ராஜ்கிரண் என்றும் பெயர் மாற்றப்பட்டதுடன் தொடர்ந்து தனது படங்களில் தான் (இந்து) சாமி ஆடுவதுபோல் காட்சியும் அமைத்தார் என்பதையும் இங்கு இணைத்துக் காண வேண்டும். ஏன் இந்த அவலம்? யாராவது ஒரு இந்து நடிகர் தனது பெயரை அகமத் என்றோ அக்பர் என்றோ மாற்றிக்கொண்டு நடிக்க வேண்டிய நெருக்கடி இங்கு இல்லை என்பதையும் இங்கு சிந்தித்துப் பாருங்கள். நடிகர் மன்சூர் அலிகான் ‘வில்லன்’ ஆக அறிமுகமானார் என்பதாலேயே அவரது சொந்தப் பெயரில் நடிக்க வைக்கப்பட்டுள்ளார் என்பதையும் ‘ஹீரோ’க்கள் கட்டாயமாக இந்துக்களாக இருக்கவேண்டும் என்பதையும் இங்கு காண முடிகிறது.



நடிகர் அப்பாஸ் மட்டும் விதிவிலக்கு, நடிகர் மம்முட்டி தமிழ்ச்சூழலில் இந்துவாகவே பதிவாகியுள்ளார். அவரது பெயர் இசுலாமியப் பெயராகப் பதிவாகவில்லை .

இவையெல்லாம் இசுலாமியர் மீதான இந்துத்துவத்தின் நுண் தாக்குதல்களே யாகும். இதன் மற்றொரு வெளிப்பாடுதான் திருவாளர் அப்துல்கலாம் அவர்களின் கீதை மேற்கோள் காட்டல்கள். மறந்தும் அவர் குரானிலிருந்து மேற்கோள் காட்டு வதில்லை. சனாதிபதி திரு.அப்துல்கலாம் அவர்கள் ஒரு முன்மாதிரியாக இந்துத்து வத்தால் இங்கு விளம்பரப்படுத்தப் படுகிறார். இந்துத்துவ மனநிலைக்கு உறுத்தாத ஒரு வடிவத்துடனும், செயல்பாட்டுடனும் அப்துல்கலாம் பொது உளவியலில் பதிய வைக்கப்படுகிறார். கியானி ஜெயில் சிங் தனது சீக்கிய மத அடையாளத்துடன் இங்கு ஜனாதிபதியாக வலம் வந்தார். ஆனால் திரு.அப்துல்கலாம் தனது மத அடையாளத்தை வெளிப்படுத்தாதவராக இருப்பது தற்செயலானதுதானா என்று யோசித்துப்பாருங்கள்.

இசுலாம், இசுலாமியர் மீதான இடைநிலைச்சாதி இந்துக்களது வெறுப்பு என்பது இன்று பல்வேறு அரசியலின் பெயரால் வெளிப்படுகிறது. (அது பாட்டாளி வர்க்க, தமிழ்தேச அரசியல் என்றமையும் போது இந்துப்பாசிசம் இங்கு மேலும் மேலும் வலிமையாக்கப்படுவதை உணர முடிகிறது)

கடந்த மார்ச் 23-ந்தேதி அன்று மதுரை டினொபிலி அரங்கில் தேசிய தலித் பேரவையும் தலித் தோழமை மையமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கில் பேசிய த.மு.மு.கழகத்தைச் சேர்ந்த தோழர் ஒருவர் தனது உரையில் ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டார். தான் அறிந்த தமிழ் தேசிய கவிஞர் ஒருவர் ‘கல்லை நட்டு நெல்லைத் தூவி வழிபடுவதே நமது தமிழ் வழிபாடு, உங்களது இசுலாமிய வழிபாடு அதற்கு எதிரானது’ என்று கூறினாராம். த.மு.மு.க. தோழரின் அனுபவத்தைப் போலவே நாம் சந்திக்கும் தமிழ் தேசிய அன்பர்களும் சாரத்தில் இந்துக்களாகவே உள்ளனர். அவர்கள் பேசும் தேசியமும் இந்துத் ( தமிழ்) தேசியமாகவே உள்ளது.

நான் சந்தித்த தமிழ் தேசியத் தோழர் ஒருவர் , “இசுலாமியர் தமிழ் தேசிய அடையாளங்கட்கு எதிராக இருக்கிறார்கள், அராபியில் தொழு கிறார்கள், அரபுப் பெயர்களை வைத்துக் கொள்கிறார்கள், கைலியை முழங்காலுக்கு மேலே கட்டிக் கொள்கிறார்கள். கைலியும், அரபுப் பெயரும் தமிழ்த்தேசியத்திற்கு உறுத்தலாக இருக்கிறது” என்று கூறினார். தமிழ்த் தேசியத்திற்கு மட்டுமா? இந்துத் தேசியத் திற்கும்தான். சரி தமிழ் தேசிய அடையாளம் (உடை) எது? எட்டு முழ வெள்ளை வேட்டியும் சந்தன கலர் ஜிப்பாவுமா? இந்த உடையைத்தான் அசோக்சிங்காலும் தொகாடியாவும் ராமகோபாலனும் விரும்புகிறார்கள்.

இசுலாமியரையும், இசுலாமியப் பண்பாட்டையும் தங்களுக்கு எதிரானதாகக் கருதும் தமிழ் தேசிய நண்பர்கள் இனியாவது தந்தைப் பெரியாரை தமது வழிகாட்டியாகக் கொள்வது சரியானதாக இருக்கும். பெரியார் அவர்கள் இந்திய தேச ஆதிக்கத்தை எதிர்த்தவர். ‘தமிழ்நாடு தமிழர்க்கே’ என்ற கருத்தை ஆதரித்தவர். ஆனால் அவர் தமிழ் தேசியத்தை மொழி வழியாக அல்லது இந்து தேசியமாக கட்டமைக்கவில்லை என்பதை நாம் காணவேண்டும். பெரியார் பார்ப்பனிய, வர்ண தர்ம எதிர்ப்புக் கண்ணோட் டத்தையே அனைத்துக்கும் அடிப் படையாகக் கொண்டிருந்தார் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஆகவேதான் பெரியார் ‘இழிவு நீங்க மருந்து இசுலாம்’ என்று மதமாற்றத் தையும் முன்மொழிந்தார். அவர் இசுலாத்தையும், இசுலாமியப் பண பாட்டையும் எதிராக ஒருபோதும் குறிப்பிடவில்லை என்பதையும் மேலும் மொழி (தமிழ்) வெறிஅவரிடம் ஒருபோதும் எழாததையும் ‘உனது மொழி (தமிழ்) சாதி காக்கும் மொழி’ என்று விமர்சித்ததையும் நமது தமிழ்தேசிய தோழர்கள் கவனத்தில் கொண்டு, தமது தமிழ் தேசியத்தைக் கட்டமைத்துக் கொள்ளும்போது மட்டுமே அது இந்துத்துவாவிற்கு எதிரானதாகவும் சுதந்திரம் , சமத்துவம் , சகோதரத்துவம் என்ற குறைந்தபட்ச பண்புகளுடனாவதும் இருக்கும்.

இசுலாமியர் மீதான வெறுப்பை மார்க்சிய வட்டாரம் கொண்டிருப்பதைப் புரிந்துகொள்ள இந்த இடத்தில் மற்றொரு நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டவேண்டும். உலகப்புரட்சி பற்றியும், வர்க்கப் பார்வையே எல்லாவற்றுக் கும் தீர்வு என்றும் கூறுகின்ற தோழர் ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தபோது , அவர் எனக்கருகே அமர்ந்திருந்த தோழரிடம், ‘‘நமது பகுதியில் யாரோ சிலர் வந்து ஆசைகாட்டி மதம் மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் யார் என்று நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும்’’ என்றார். எனக்கு ஏதும் புரியவில்லை. ‘இவர் ஏன் இதுபற்றிக் கவலைப்படுகிறார், கண்டுபிடித்து என்ன செய்யப் போகிறார். யார் மதம் மாறினால் இவருக்கென்ன? ’என்று எனக்குள் எழுந்த கேள்விகளை அவரிடம் கேட்கவும் செய்தேன். அதற்கு அவர் கிருத்தவ மதம் இந்து மதத்தைவிட மோசம், பிற்போக்கானது. அல்லேலுயா என்று கத்திக்கொண்டு, மருத்துவம் பார்க்கக்கூட போக மாட்டார்கள் என்று சொன்னார். இவர் மார்க்சியவாதியா அல்லது ஆர்.எஸ்.எஸ். உறுப்பினரா? என்று என்னுள் கேள்வி எழுந்தது.

***தலித் மக்களைத்தவிர, தலித் இயக்கங்களைத் தவிர வேறு யாரும், எந்த சாதியினரும், இயக்கத்தவரும் இதுநாள் வரை மதமாற்றத்தை ஒரு அரசியல் எதிர் நடவடிக்கையாக, இந்து மதத்திற்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் மேற்கொள்ளவில்லை***

மற்றொரு முறை அத்தோழரிடம் நான் இசுலாத் திற்கு அல்லது பவுத்தத்திற்கு மாறப் போவதாகச் சொன்னேன். அவரால் கோபத்தைக் கட்டுப் படுத்தவே முடியவில்லை. கொதித்துப் போய்விட்டார். ‘நீங்கள் எல்லாம் ஏன் மார்க்சியம் பேசினீர்கள்? எனக்கு அருவருப்பாக இருக்கிறது, இப்படி மதம் மாறி செட்டிலாவதற்காகவா? இசுலாம் இந்து மதத்தைவிட இறுக்கமானது,




படிப்பகம்

www.padippakam.com

பிற்போக்கானது' என்று கத்திவிட்டார்.

ஒரு இந்துவாக வாழ்ந்துகொண்டு, சாதியை மீறாமலும், மத மூடப்பழக்கவழக்கங்களை தன் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் கடைப்பிடித்துக் கொண்டும் மார்க்சியம், சோசலிசப்புரட்சி, வர்க்கப்பார்வை என்று உறுத்தலின்றி பேச முடிந்தவருக்கு இசுலாமியனாக மாறிவிட்டால் அது சமூக மாறுதலுக்கு எதிரான செட்டிலாவதாகப்படுவதை நினைத்தால் சிரிப்புதான் வருகிறது. தோழரைப் பொருத்தவரை, இசுலாம் இறுக்க மானதாகவும், இந்துமதம் சுகமானதாகவும் படுகிறது. சாதியின் பெயரால் வாயில் மலம் திணிப்பவர்களுக்கும், வாயில் சிறுநீர் கழிக்கத் தயாராக இருப்பவர்களுக்கும், 44 பேரை உயிரோடு தீயிட்டுக் கொளுத்தியவர்களுக்கும் அதற்கான சாஸ்திர நியாயத்தை வழங்கும் இந்துமதம் சுகமானதுதான்.

தனக்குத் தேவைப்படும்போது செருப்புத் தைத்துத் தரவும், தனது வீட்டில் மலம் எடுக்கவும், பறையடிக்கவும், தான் ஆதிக்கம் செய்யவும், சாதித் திமிர் கொண்டு பெருமிதம் கொள்ளவும் தனக்குக் கீழே சிலரை விட்டுவைத்திருக்கும்



இந்து மதம் சுகமானதாகவும் இதுபோன்ற வசதிகள் அளிக்காத இசுலாம் இறுக்கமானதாகவும்தான் தெரியும்.

ஒருசாதி இந்துவாக வாழ்வதில் அவருக்கு அருவருப்பு ஏற்படவில்லை. மாறாக, நாம் இசுலாத்திற்கோ பவுத்தத்திற்கோ மாறிச் செல்வதாகச் சொல்வதுதான் அருவருப்பூட்டுகிறது. இதுதான் இந்திய துணைக்கண்ட வர்க்கப் பார்வையில் உள்ள சிக்கல்கள்.

இவ்வாறு இந்துத்துவத்தின் எதிரிகள் என்று இன்று சொல்லிக்கொள்ளும் அமைப்பு, கட்சி ஆகியவற்றின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் தம்மளவில் இந்துக்களாக இருக்கும் சூழலில் பாசிச எதிர்ப்பு என்பது எப்படி சாத்தியம்?

இந்து மதத்தின் அடிப்படையாகிய வர்ணக் கோட்பாடு மனிதர்களை ஐந்தாகப் பிரிக்கிறது. பிராமணர், சத்ரியர், வைசியர், சூத்திரர், பஞ்சமர் என்று. பார்ப்பனர் பிரம்மாவின் முகத்திலும், சத்ரியர் தோள்களிலும், வைசியர் தொடையிலும், சூத்திரர் பாதத்திலும் இருந்து பிறந்த தாகவும் பஞ்சமர் வர்ண தர்மத்திற்கு வெளியே உள்ளவர்கள் என்றும் கூறுகிறது.

இதனையே ஆதாரமாகக் கொண்டு ,புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் 'தலித்துகளாகிய நாங்கள் (பஞ்சமர்) இந்துக்கள் அல்ல' என்றுகூறினார். ஆனால் இன்று பி.ஜே.பி, ஆர்.எஸ்.எஸ். கும்பலானது தலித்துகளும் இந்துக்கள்தான் என்று மிகத் தீவிரமாக பிரச்சாரம் செய்கின்றனர்.

சங்கராச்சாரி தலித் குடியிருப்புகள் பகுதிக்குச் செல்கிறான், தீண்டாமை ஒழிப்பு மாநாடு நடத்துகிறான். திரு.கிருபாநிதி அவர்கள் தலைமையில் பி.ஜே.பி.யானது தீண்டாமை ஒழிப்புக்குழு அமைக்கப்போவதாக அறிக்கை விடுகிறது. நாம் ஒரு மோசமான சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பாசிசம் தம் இறுதித் தாக்குதலை தொடுப்பதற்கு முன்னுள்ள அந்த இடைக்காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சூழலின் பயங்கரத்தை மதச்சார்பின்மை பற்றி பேசுகின்ற கட்சியினர் புரிந்து கொண்டுவிட்டார்களா? அல்லது மதச்சார்பின்மை பேசுபவர்களும் தம்மளவில் இந்துக்களாகவே உள்ளதால் இதுபற்றி கவலைப்படாதவர்களாக, வெறும் ஓட்டு அரசியல் நாடகம் என்றளவில் மாத்திரம் பி.ஜே.பி. எதிர்ப்பு நாடகம் நடத்துகிறார்கள் என்று கருதலாமா? ஏனென்றால் இவர்கள் பேசும் மதச்சார்பின்மை என்பது மத சகிப்புத் தன்மை என்ற பொருளிலேயே இங்கு பேசப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆர்.எஸ்.எஸ்.அய்ப் பொறுத்தவரை இன்று தலித்துகளை வென்றெடுப்பதுதான் அதன் முக்கியக் குறியாக உள்ளது. ஏனென்றால் தான் எதிரியாக வரையறுத்துள்ள இசுலாமிய மதத்திற்கு மாறிச் செல்வதன் மூலம் இந்து மதத்தின் அழிவுக்கு காரணமாக இருக்கிறார்கள் என்பதுடன் , இந்து மதத்தினை அழிக்கும் போராட்டத்தை தன் வாழ்வின் இறுதிவரை மேற் கொண்டிருந்த அண்ணல் அம்பேத்கரின் வாரிசுகளாக இருக்கிறார்கள் என்பதாலும் தலித்துகளை

***இந்துத்துவத்தின் எதிரிகள் என்று சொல்லிக்கொள்ளும் அமைப்பு, கட்சி ஆகியவற்றின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் தம்மளவில் இந்துக்களாக இருக்கும் சூழலில் பாசிச எதிர்ப்பு என்பது எப்படி சாத்தியம்?***

தன்வயப்படுத்துவதையே தனது உடனடி இலக்காகக் கொண்டு செயல்படுகிறது.

சூத்திரர்களைப் பொறுத்தவரை ஆர்.எஸ்.எஸ். கவலைப்படத் தேவையில்லை. தமிழக அளவில் தந்தை பெரியார் காலம் மட்டுமே ஆர்.எஸ்.எஸ்.சிற்கு இடையூறானதாக இருந்தது. அதுவும் பெரியார் எதிர்நீச்சல் போட்டார் என்றே சொல்லவேண்டும். தன் வாழ்நாள் முழுவதும் பார்ப்பனியத்தை எதிர்த்தும், இந்து மதத்திலிருந்து சூத்திரர்களை பிரித்து நிறுத்தவும் முயன்றார்.

ஆனால் இன்று அந்தச் சூத்திரர்தான் இந்துத்துவாவின் படைச்சக்தியாக அணிவகுத்து நிற்கின்றனர். தலித்துகளிடம் இருந்து சூத்திரர்கள் வேறுபடக்கூடிய புள்ளி இதுவே. அதாவது தலித்துகளை இந்து மதமே தனக்கு வெளியே 'அவர்ணஸ்தர்' என்று சொல்லி நிறுத்தியது. ஆனால் சூத்திரர்களை நான்கு வருணங்களுக்குள் ஒருவராக சேர்த்துக்கொண்டது. பிரம்மாவின் பாதத்தில் இடமும் கொடுத்தது. இதன் மூலம் காலப்போக்கில் சூத்திரர்கள் பிரம்மாவின் தலையை சென்றடைய முடியாவிட்டாலும் தோள்வரை ஏறிவிட முடிந்தது. அதாவது வைசியராகவும், சத்ரியராகவும் மாறிவிட முடிந்துள்ளது. இந்த யதார்த்தத்திற்கு எதிராகத் தான் பெரியார் பேசிக்கொண்டிருந்தார். வடமாநிலங்களில், ஆரியத்தன்மை மிகுந்துள்ள பகுதிகளில் பார்ப்பனர்களே சத்ரியர்களாகவும் விளங்கினர்.

திராவிடத் தென்பகுதிகளில் குறிப்பாக, தமிழகத்தில் சத்ரியர் என்ற தனி (பார்ப்பன) சாதி இல்லாத சூழலில் சூத்திரர்களில் பல சாதிகள் சத்ரியர்களாகவும் பொறுப்பு வகித்துள்ளனர். இதனை தங்களது நலன் நோக்கில் பார்ப்பனர்களும் அங்கீகரித்துள்ளனர். இந்த இடத்தில் வர்ணாஸ்ரமக் கோட்பாடு சற்று வளைந்து கொடுத்துள்ளதாகக் கருதலாம். இந்த நெகிழ்வுதான் இன்றைக்கு சூத்திரர்களை



படிப்பகம்

www.padippakam.com

ஆர்.எஸ்.எஸ்.சின் அடித்தளமாக மிக எளிதாக மாற்றியுள்ளது.

தமிழகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஒரு இடை நிலைச் சாதி ஆதிக்கச் சாதியாக விளங்குகின்ற சூழலில் இச்சாதிகள் அனைத்துமே தங்களை ஆண்ட சாதிகள் (சத்ரியர்கள்) என்று சொல்லிக்கொள்கின்றன. பார்ப்பனர்களும் நமட்டுச்சிரிப்புடன் இதனை ஏற்றுக்கொள்கின்றனர்.

நவீன முதலாளிய வளர்ச்சியின் போக்கில் உள்ளூர் அதிகாரங்களை விட்டுவிட்டு பார்ப்பனர் மைய அதிகாரங்களை நோக்கி நகர்ந்து விட்டதால் ஏற்பட்ட காலி இடங்களைக் கைப்பற்றிவிட்டதுடன் சூத்திரர்கள் பார்ப்பனருடனான முரண்பாடுகளையும் கை கழுவி விட்டனர். கூடவே தலித்துகளின் மீது ஆதிக்கமும் செலுத்தத் துவங்கிவிட்டனர். அதனால் பார்ப்பன / சூத்திர முரண்பாடு என்பது முதன்மையாக இல்லாமல் பின்னுக்குப்போய் ஒரு அரசியல் இயக்கத்தின் கோட்பாடாக மாறிவிட்டது. சமூகத்தளத்தில் இன்று சூத்திரர்களுக்கும் தலித்துகளுக்கும் இடையிலான முரண்பாடே முக்கியமானதாக வளர்ந்து பிற்பட்ட சாதி, தலித் மோதலாக உருவெடுத்து உள்ளது.

***ஒவ்வொரு பகுதியிலும் ஒரு இடை நிலைச் சாதி ஆதிக்கச் சாதியாக விளங்குகின்ற சூழலில் இச்சாதிகள் அனைத்துமே தங்களை ஆண்ட சாதிகள் (சத்ரியர்கள்) என்று சொல்லிக்கொள்கின்றன. பார்ப்பனர்களும் நமட்டுச்சிரிப்புடன் இதனை ஏற்றுக்கொள்கின்றனர்.***

கடந்த 5 ஆண்டுகளாக படிப்படியாக இங்குள்ள பொதுவுடமை அமைப்புகள் புரட்சியாளர் அம்பேத்கர், தந்தைப் பெரியார் உருவப்படங்களை தங்களது வெளியீடுகளில் பயன்படுத்துவதும், பிறந்தநாள் கொண்டாடுவதும் நடைபெற்று வருகின்றன. ஆனால் கடந்த காலங்களில் அம்பேத்கரையும் பெரியாரையும் மிக மோசமாக விமர்சித்தவர்கள், அதாவது ஆளும் வர்க்க கைகூலிகளாக கருதியவர்கள் சமீப ஆண்டுகளில் சுயவிமர்சனம் ஏதுமின்றி, திடீரென இருதலைவர்களையும் ஏற்றுப் போற்றத் துவங்கியுள்ளனர். இந்த ஏற்றலும் போற்றலும் உளப்பூர்வமானதுதானா? அவ்விருவரது அரசியலை ஏற்றுக்கொண்டுதானா? அல்லது இன்றைய தலித் இயக்க வளர்ச்சி, சாதி எதிர்ப்பு அரசியலின் வளர்ச்சி போன்றவற்றின் நெருக்கடியில் இருந்து தங்களது அமைப்பை காத்துக் கொள்வதற்காகவா? என்ற கேள்விகள் எழுகின்றன. எது எப்படி இருப்பினும் கடந்த 75ஆண்டுகளை வீணடித்து விட்டு இப்போதுதான் சரியான இடத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறீர்கள் என்று நாம் நேர்மறையாகவே அவர்களது மாற்றத்தை எடுத்துக்கொண்டு, அம்பேத்கர், பெரியார் அரசியலை தங்களது அமைப்பிற்குள் முதற்கட்டமாக உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்வோம். அதுவொன்றே, இன்றைய பாசிசத்தின் தாக்குதல் காலகட்டத்தில் பாசிசத்தை எதிர்கொள்வதற்கான அடித்தளத்தை நமக்கு வழங்கும் என்புதையும் புரிந்துகொள்ள வேண்டுகிறோம்.

கடந்த 20-04-03 தேதியிட்ட குமுதம் ரிப்போர்ட்டர் இதழுக்கு பி.ஜே.பி.யின் பொதுச்செயலாளர் பிரமோத் மகாஜன் அளித்துள்ள பேட்டியில் . ***"மதம், தர்மம் இரண்டும் வெவ்வேறானவை. மதம் என்பது நம்பிக்கை சார்ந்த விசயம். குரான், பைபிள், கீதை போன்றவை மீதான நம்பிக்கை போன்றது. தனிப்பட்ட முறையில் என்னைப் பெரிய மத நம்பிக்கை உடையவன் என்று சொல்ல முடியாது.***

***இந்துத்துவா என்பது ஒரு வாழும் வழி. கோவிலுக்குப் போவதற்கும் அதற்கும் தொடர்பில்லை. ஒரு நாத்திகன்கூட இந்துவாக இருக்க முடியும். இந்து மதத்தின் பலமே அதுதான். குரானில் நம்பிக்கை இல்லாதவர்கள் இசுலாமியராக இருக்க முடியாது. பைபிளில் நம்பிக்கை இல்லாதவர் கிருத்துவராக இருக்க முடியாது. ஆனால் கீதையில் நம்பிக்கை இல்லாதவர்கூட இந்துவாக இருக்கலாம். பசுவதை, ராமர்கோவில், 370 போன்றவை இந்துத்துவா இல்லை.***

***இந்துத்துவா எங்கள் கட்சிக்காரர்களின் அடிப்படை உணர்வு, நம்பிக்கை, சித்தாந்தம் ஐந்தாயிரம் ஆண்டுகளாக இருப்பது இந்துத்துவா. இந்துத்துவா என்பது இசுலாம் கிருத்துவம் போன்றதல்ல . அது வர்ண தர்ம (வாழும் வழி )"*** என்று மிக வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

இதையே டாக்டர் அம்பேத்கர் 'இந்துமதம்' ஒரு மதமேயல்ல. அது ஒரு சட்டம் என்றார். ஆனால் நமது சூழலில் சமூக மாற்றத்தை விரும்பும் தோழர்கள் இசுலாம், கிருத்துவம் போன்று இந்துத்துவத்தையும் ஒரு மதமாக கருதி மதநல்லிணக்கம், மதஒற்றுமை, எம்மதமும் சம்மதம் என்று கூறுகிறார்.

இந்த அடிப்படையிலேயே மதவெறி மாய்ப்போம், மனித நேயம் காப்போம் என எல்லா மதங்களையும் சமப்படுத்தி, மதவெறிதான் ஆபத்தானது என்று கருதுகிறார்கள். ஆனால் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் சாதி ஒழிப்பு என்பதை இந்துமத ஒழிப்பாகவும் கண்டார்கள். அதாவது இசுலாம், கிருத்துவம் போன்றவற்றை மதங்களாக கண்டார்கள். இந்து மதத்தை அழிக்கப்பட வேண்டிய ஒன்றாக கண்டார்கள்.

பிரமோத் மகாஜன் சொல்வதைப்பாருங்கள், ''ஒரு நாத்திகன்கூட இந்துவாக இருக்க முடியும்'', இதுதான் இன்றைய யதார்த்தம். கடவுள் நம்பிக்கை இல்லாதவர்க்கும் இங்கு சாதி நம்பிக்கை இருக்கிறது. மகாஜன் ஒன்றை சொல்ல தவறிவிட்டார். 'ஒரு கம்யூனிஸ்ட்டும் இங்கு இந்துவாக இருக்க முடியும்' என்பதை.

ஆகவே தோழர்களே, 'மதவெறி' என்று மொன்னையாக பேசாதீர்கள். நேரடியாக, வெளிப்படையாக இந்து மத ஒழிப்பு என்று பேசுங்கள். இந்து மதத்தை சமூக மாறுதலுக்கு எதிரானது என்று அறிவியுங்கள்.

கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் தங்களது இந்துப் பெயர்களை உடனடியாகத் துறந்து மத அடையாள மற்ற பெயர்களைச் சூட்டிக்கொள்ளவேண்டும் என்று தீர்மானம் இயற்றுங்கள்.

இந்துமத சடங்குகளை கட்சி உறுப்பினர் எவரும் மேற்கொள்ளக்கூடாது என்றும், கட்சி உறுப்பினரது அடிப்படைத் தகுதிகளில் ஒன்றாக , சாதி மறுப்பு திருமணம் செய்வது என்பதையும் கட்டாயமாக்குங்கள். இவையன்றி வெறுமனே அம்பேத்கருக்கு பிறந்தநாள் கொண்டாடுவது மட்டும் பயன்தராது. மேலும் இந்துப் பாசிசம் அழிக்கப்படுவதற்கான உண்மையான, வலிமையான அடித்தளத்தையும் இவையே வழங்கும். இல்லையெனில் தலைமை 'பாசிச எதிர்ப்பு இயக்கம்' நடத்தும்போது அடிமட்டத்தில் தோழர்கள் ஆர்.எஸ்.எஸ். மனநிலையோடு வாழ்ந்து கொண்டிருப்பார்கள். இவர்களைக் கொண்டு ஒருபோதும் இந்துத்துவாவை எதிர்கொள்ள முடியாது.

இவை எதையும் செய்ய முடியாவிட்டால் , ஒரேஒரு தீர்மானம் மட்டும் இயற்றுங்கள். 'தோழர்கள் யாவரும் (இந்து மதத்திலிருந்து) கட்டாயம் மதம் மாறவேண்டும்' என்று.

•



படிப்பகம்

www.padippakam.com

# "தமிழீழத்தின் அதிகாரம் வெள்ளாளர்கள் கையில்"

இருள்வெளி, சனதரும போதினி, கறுப்பு என கடந்த சில ஆண்டுகளில் தமிழகத்திலும், புகலிடத்திலும் கவனம் பெறத்தக்க தலித் இலக்கியப் பிரதிகள் தொகுக்கப் பட்டு வெளிவர முக்கியக் காரணமாக இருந்தவர். இருபது ஆண்டுகளுக்கும் மேலான போராட்டப் பின்னணியும் இலக்கியப் பின்னணியும் கொண்டவர். நூற்றுக்கும் மேற்பட்ட புகலிடக் கவிதைகள் எழுதியிருப்பவர். பிரான்ஸில் Exil இதழ் துவங்கியதில் பங்களித்திருப்பவர். 87க்குப் பின் தேடல் (பிரான்ஸ்),பள்ளம் (பிரான்ஸ்) இனியும் சூல்கொள் (பிரான்ஸ்) ஆகிய தொகுப்புகளில் முக்கியப் பங்காளராக இருந்தவர். அவ்வகையில் புகலிட இலக்கியத்தின் தோற்ற முன்னோடிகளில் ஒருவர். "யாழ்ப்பாண சாதிய சமூகத்தால் முதன்மையாகப் பலி கொள்ளப்பட்ட தலித் போராளிகளின் தொடர்ச்சியில் புகலிடத்தில் எஞ்சியிருக்கும் ஒருவன்"என தன்னைப் பறைசாற்றிக் கொள்பவர். அதனாலேயே மீண்டும் ஒரு தலித் இயக்கத்தின் தேவையை வலியுறுத்துபவர். அரசியல் அதிகாரத்தை வென்றெடுக்க தலித்துகள் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டுமென உறுதியாக நம்புகிறவர். ஈழ விடுதலைப் போராட்டத்தில் தலித் மக்கள் தலைமைப் பாத்திரம் வகிக்காதபட்சத்தில் சுதந்திரமான, சனநாயக மான, சமத்துவக் குடியரசு அமையப் போவதில்லை என நிச்சயிப்பவர். கடந்த பதினேழு ஆண்டுகளாக பிரான்சில் ஒரு அகதியாக, புகலிட இலக்கியவாதியாக, மாற்று அரசியல் – இலக்கியக் கருத்தாக்கங்களை உயர்த்திப் பிடித்து செயல்படுபவராக புகலிடத்திலும் தமிழக இலக்கியச் சூழலிலும் பரவலாக அறியப்பட்டிருக்கும் **தோழர் சுகன் கனகசபை** சமீபத்தில் (மார்ச் 2003) தமிழகம் வந்திருந்தபோது அவரைச் சந்தித்தோம். தலித் கலைவிழா (மதுரை), ஈராக் மீதான யுத்த எதிர்ப்புக் கூட்டம் (சென்னை கடற்கரை), பேரா.அ.மார்க்ஸ் இல்லம் என அவரைச் சந்திக்க நேர்ந்த இடங்களில் நிகழ்த்திய உரையாடல்கள் ஆற அமர விரிவான ஒரு நேர்காணலாக அமையாமல் போயின என்றாலும், நாம் எழுப்பியுள்ள குறிப்பான கேள்விகளிலேயே அவர் தனது குமுறலையும் கோபத்தை யும் மாற்றுப் பார்வையையும் முன் வைத்திருப்பதாக நாம் உணர்கிறோம். எமது உரையாடலுக்கிடையில் "நாற்பது வயதைக் கடந்த பின்னும் ஏன் இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லை ?'' என்று ஒரு நண்பர் எழுப்பிய கேள்விக்குக் கூட, ''ஒருவேளை தலித்தாக இருப்பத னாலோ என்னவோ ?'' என்றுதான் பதில் சொன்னார். புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்கள் அயல்நாடுகளில்கூட சொந்தச் சாதி உறவுகளோடும் இந்து சனாதன சடங்குகளோடும்தான் (அக) மண உறவுகளைச் செய்து வருகின்றனர். புகலிடத்தில் வரன்தேடி தமிழர்கள் தரும் பத்திரிகை விளம்பரங்களிலும் இன்ன சாதி என்ற நிபந்தனை வலுக்கட்டாயமாய் இடம் பெறுவதைக் கண்டித்து ,சுகன் மற்றும் Exil நண்பர்கள் முன்பொரு முறை எதிர்ப்பு இயக்கம் நடத்தியது நம் நினைவுக்கு வந்தது. பல தளங்களில் விரிவாகப் பேச, விவாதிக்க எண்ணியிருந் தோம். நேரமும் சூழலும் வாய்க்கவில்லை. பெற்றோர்களை, உறவினர்களை, நண்பர்களை, பண்பாட்டு வேர்களை, பிறந்தகக் கனவுகளை இழந்து புகலிடம் தேடி அலையும் வேதனை யுத்த அகதிகளின் மீது திணிக்கப்பட்ட கொடுஞ்சாபம். அகதிகளின் வாழ்க்கை நெருக்கடியும், மனக்குமுறலும் புலம் பெயர்ந்து வாழும் எல்லோரையும் போல் சுகனுக்கும் பொதுவானதாக இருக்க, யாழ்ப்பாண சாதீய சமூகத்திலிருந்து விடுபட்ட சுதந்திர உணர்வையும் ஐரோப்பிய நவீன சமூக வாழ்க்கையில் ஒரு தலித்தாக தான் பெறுவதாகக் கூறும் சுகனோடு இனி. அதற்குமுன்,



உடன்பாடானவர்களோடுதான் உறவும், நட்பும் சாத்தியம். அவர்களோடு முரண்படவும் இடமுண்டு. புதிய தடம் இதழோடு அக்கறையான உறவு பேணும் தோழர். சுகனுடனான நேர்காணலிலும் அதற்கான இடமுண்டு.

*நேர்காணல்*
தோழர் இளம்பரிதி.
***நண்பர்கள் கனகசபை ,ஆண்டவர் உதவியுடன்***



படிப்பகம்

www.padippakam.com

**பரிதி : புலம் பெயர்ந்து வாழும் ஒரு அகதியாய் உங்களைப் பற்றி அறிமுகம் செய்ய முடியுமா?**

சுகன் : யாழப்பாணம் வட்டுக்கோட்டை 'ராத்திலடி' என்னும் தலித் கிராமம் நான் பிறந்த ஊர். தந்தை ஒரு தமிழாசிரியர். ஊரில் பெரும்பான்மை தலித் மக்கள் நிலமற்ற விவசாயக்கூலிகள். ஆரம்பக் கல்வி பெறுவதற்கும் வாய்ப்பில்லாமல் இருந்த வர்கள் அவர்கள். இந்நிலையில் ஈழ விடுதலைப் போராட்டம் தீவிரமடையத் துவங்குகிறது. 1984இல் நான் இணைந்திருந்த விடுதலை இயக்கத்தின் சார்பாக ஆயுதப் பயிற்சிக்காக தமிழ்நாட்டிற்கு முதன்முதலாக வந்தேன். இலங்கை திரும்பியதும் புலிகள் தவிர அனைத்து மாற்று இயக்கங்களும் தடை செய்யப்பட்டு, அழிக்கப்படுகின்ற கால கட்டத்தில் 1985இல் தலைமறைவாக இருந்தேன். பின்னர் இயக்கத்திலிருந்தும், தமிழ் தேசிய அரசியலிலிருந்தும் வெளியேறினேன். அதற்குப் பின் மீண்டும் தமிழ்நாடு வந்து ஒரு விவசாயியின் கடவுச் சீட்டில் (பாஸ்போர்ட்) தலைமாற்றி பிரான்ஸ் நாட்டிற்குச் சென்றேன். 1986 முதல் 92வரை அகதிக்கான முறையான அனுமதி விசா கிடைக்காமல் பாரிஸ் நகரில் அலைந்து திரிந்தேன். 86க்கு பிறகு இன்றுவரை எனது பெற்றோர்களை, உறவினர்களை மற்றும் நண்பர்களை யாரையும் சந்திக்க இயலவில்லை. ஏறத்தாழ அனைவரும் இறந்துவிட்டனர். நண்பர்கள் சிலர் கொல்லப்பட்டு விட்டனர்.

**பரிதி : பிரான்ஸ் மட்டுமல்லாமல் உலகம் முழுவதிலுமான புகலிட தமிழ் இலக்கிய சூழலில் தலித் இலக்கியத்தின் அமைவிடம் எவ்வகையில் நிலை கொண்டுள்ளது? தமிழ்நாட்டின் தலித் இலக்கிய முயற்சிகளும் தலித் அரசியல் செயல்பாடுகளும் எத்தகைய பாதிப்புகளை புகலிடச் சூழலில் ஏற்படுத்தி வருகின்றன?**

சுகன்: தமிழ் இலக்கியத்திற்கும், புகலிட இலக்கியத்திற்கும் எந்த சம்பந்தமுமில்லை. உள்ளார்ந்த அர்த்தத்தில் தமிழ் இலக்கியக் கட்டமைப்பை, தமிழ் இலக்கிய மனோபாவத்தை, தமிழ் வாசிப்பு உளவியலை, தமிழ் உணர்வை, தமிழ் அடையாளத்தை மறுத்து அதை அன்னியமாக்கி நிராகரிப்பதன் மூலம் தன்னை தனித்துவப்படுத்தி சர்வதேச புகலிட இலக்கியங்களோடு தன்னை இனங்காட்டி, குறித்துக்காட்டி வருகிறதேயொழிய தமிழ் இலக்கியம் மையத்தில் கொள்ளும் எந்தப் பிரச்சினையிலும் எந்தப்புள்ளியிலும் அது தன்னைக் காட்டிக் கொள்ளாது. புகலிட இலக்கியத்தில் இருந்து தமிழ் அடையாளத்தை அகற்றுவதே எமது இலக்கியம்.

**புலிகள் ஈழ புனரமைப்புத் திட்டத்தில் 1 லட்சம் பனைகள் வளர்க்கும் திட்டத்தை அறிவித் திருக்கிறார்கள். பனையேறப்போவது வெள்ளாளர்களா? தலித் மக்களின் வாழ்க்கையை பனைத் தொழிலோடு இணைத்து பழைய நிலப்பிரபுத்துவ சாதியச் சமூகத்தை கட்டமைக்கும் திட்டம் இல்லையா இது?**



புகலிட இலக்கியத்தை தனித்த ஒன்றாகத் தொடங்கி வளர்த்தெடுத்தவர்கள் தலித் எழுத்தாளர்கள்தான். கலாமோகன், அருந்ததி, செல்வம், முரளி, கி.பி. அரவிந்தன இப்படி சில வெள்ளாளர்களும் 'மண்ணள்ளிப்' (பங்களிப்பு) போட்டிருக்கிறார்கள். பின்னர் ஒதுங்கிவிட்டார்கள். புகலிட சஞ்சிகைகளின் பின்னணியும் இப்படியே. அம்பதுக்குட்பட்ட சஞ்சிகைகள் வந்திருக் கின்றன. பெரும்பாலும் உயர் இந்து வெள்ளாளப் பின்னணியில் இருந்து வந்ததால் ஆரம்பத்தில் தமிழ் அரசியல் பெரும்போக்காக இருந்தது.

ஜேர்மனி 'தூண்டில்' – பார்த்திபன் யாழ்ப்பான உயர் இந்து வெள்ளாளப் பின்னணியில் இருந்து வந்தவர் 'சிந்தனை' – பரா மாஸ்ரர், 'அ ஆ இ – சார்லஸ், 'சமர்' – ரயாகரன், 'ஓசை' – மனோ இப்படி ஒதுங்கும் மனோபாவம் வெள்ளாள வேர்களில் இருந்து வருகிறது. வெள்ளாள எழுத்தாளர்களுக்கு ஊர் நினைவு வந்தால் எழுத்துக் களில் கோவில் வரும், தேர் ஓடும். நாம், தமிழ் அரசியலில் கேள்விகளோடும் விமர்சனங் களோடும், எதிர்ப்புகளோடும் இருந்த தொடர்ச்சி யில் தலித் இலக்கியம் எமக்கு பெரும் ஆதர்சமாக இருந்தது. தலித் அரசியல் எமக்கு புதிய இரத்தத்தைக் கொடுக்கிறது. தலித் அரசியல் பின்னணியில் யாழ்ப்பாண சாதிய சமூகம் குறித்த ஆழமான புரிதல் ஏற்பட்டிருக்கிறது.

**பரிதி: புகலிடப்பிரதிகளில் தலித் இலக்கியத்தை வேறுபடுத்தி இனங்காண்பது எப்படி?**

சுகன் : இருள்வெளி, எக்ஸில் இரண்டு மட்டுமே நமக்கான அரசியலைப் பேசுகின்றன. எமது தலித் பின்னணி இதற்குக் காரணம். 'தலித்' என்ற சொல்லை, புகலிடத்தில், பொதுப்புத்தி மட்டங்களில் ஏற்றுக் கொள்ளச் செய்திருக் கிறோம். தலித் இலக்கியம், தலித் பண்பாடு சக்திவாய்ந்த போக்காக ஆகியிருக்கிறது. சிவத்தம்பிக்கு தலித் என்ற சொல் சங்கடத்தைக் கொடுக்கலாம். 'பள்ளத்தமிழர்' என்று ஒரு கட்டுரையில் பாவிக்கிறார். வெள்ளாளன் 'தமிழன்' நாம் பள்ளத் தமிழரா ? சிவத்தம்பிக்கு பீ தோய்ச்சு அடிக்க வேணும்.

வெள்ளாளப்பிரதிகளில் முடிவு சோகமாக இருக்கும்.

> பஞ்சமர் என்பது தலித்துகளை இழிவுபடுத்தும் ஒரு சொல். நான்கு வருணங்களிலும் அடங்காத அவருண சாதிகள் என இந்து சாத்திரங்கள் சுட்டும் மக்கள் திரளையே பஞ்சமர் எனும் சொல் குறிக்கிறது. ஒரு கண்டறியாத விளக்கம் கூறி பஞ்சமர் எனும் சொல்லில் புதைந்து கிடக்கும் இந்துமத சாத்திர அர்த்தங்களை 'தத்துவாசிரியர்கள்' மறைத்து விட்டார்கள். நமது முன்னோர்களும் இவர்களிடம் ஏமாந்து போனார்கள். நாமும் ஏமாறலாமா ? இனிமேற்பட்டு எவனாவது பஞ்சமரியம், பஞ்சமரிலக்கியம் என பேசினால் அவன் பல்லை உடையுங்கள்
>
> – NON வெளியீட்டிலிருந்து



படிப்பகம்

www.padippakam.com

இங்கே வந்து கோப்பை கழுவுகிறோமே, கக்கூஸ் கழுவுகிறோமே, இயந்திரமாகி விட்டேனே என்ற புலம்பல் கேட்கும். நாட்டுக்குக் போய் நாலு தலித்துகளைப் பிடித்து வேலை வாங்கும் நாள் எப்போது வருமோ என்ற ஏக்கம் தொக்கி நிற்கும். ஊரிலே போய் தோட்டம் கொத்தியாவது பிழைக்கலாம் என்று பிதற்றும் இவர்களும், இவர்களது முன்னோரும் எப்போதும் தோட்டம் கொத்தியதும் கிடையாது, வலை தள்ளியதும் கிடையாது

பரிதி : ***இன்றைய அமைதிப்பேச்சுவார்த்தை காலகட்டத்தில் ஈழ அரசியல் சூழல் எப்படி இருக்கிறதென அறிகிறீர்கள்?***

சுகன் : வெள்ளாளர் பிடி மேலோங்கியுள்ள ஈழவேளாளர் அரசியல் தமக்கான அதிகாரத்தை கேட்கின்ற பேச்சுவார்த்தை இது. பாதிக்குமேல் தலித்து களை பலி கொடுத்தாகிவிட்டது. மீதி தலித்துகள் அகதி முகாம்களில். முஸ்லீம்களை விரட்டியாயிற்று. வெள்ளாளர்கள் எல்லோரும் வீடுகளுக்குப் போய் வேலைவாய்ப்பு, கல்வி, கலை கலாச்சாரம், தமிழ்ப்பண்பாடு இப்படிப் போகிற சூழல். தங்கள் பிள்ளைகளை அவுஸ்திரேலியா, கனடா, லண்டன், இப்படி அயல்நாடுகளுக்கு அனுப்பி படிக்க வைத்து எல்லாப்பேறும் பெற்றபின், எஞ்சியிருக்கிற தலித்துகளை மீண்டும் போர்க் களத்திற்கு அனுப்ப வெள்ளாளர்கள் தங்கள் உழைப்பில் கணிசமான பகுதியை மண் மீட்பு நிதியாகக் கொடுக்கிற புகலிட சூழல்.

பரிதி : ***அமைதிப் பேச்சுவார்த்தைக்குப் பிந்தைய புதிய அரசில், தலித் மக்களின் சமூக இருத்தல் கடந்தகால கொடுமைகளிலிருந்து விடுபட்டு மாற்றங்களை அடைவதற்கான அரசியல் சாத்தியப்பாடுகள் உருவாகி இருப்பதாக தமிழகத்தில் எம் மத்தியில் நிலவும் நம்பிக்கையை உங்களால் உறுதி செய்ய முடியுமா?***

சுகன் : ஒரு தலித் பார்வையிலிருந்து பேச்சுவார்த்தை நிகழ்வதற்கு வாய்ப்பில்லை. முஸ்லீம்கள் வட கிழக்கிலிருந்து விரட்டியடிக்கப்படாமல் இருந்திருந்தால் இந்தப் பேச்சு வார்த்தைக்கு இடமில்லை. போர் உக்கிரமானவுடன் வெள்ளாளர்கள் வெளிநாடு ஓடிவிட்டனர். அகதி முகாம் களில் திக்கற்றவர்களாக இருக்கும் தலித்து களுக்கு இந்தப் பேச்சு வார்த்தையில் என்ன இருக்கிறது ? தமிழ் தேசியக் கட்சிகள் ஒரே குரலாக முஸ்லீம்களுக்கு எதிராக இருக்கிறார்கள். 'வலு நுணுக்கமான அரசியல் தலைவர்தான் பிரபாகரன்'. தலித்துகளுக்கு நிலமனைப் பட்டா கிடைக்க வழி செய்தவரும், இடதுசாரி அரசியலுக்கு மிக நெருக்கமானவருமான அல்பர்ட் துரை யப்பாவின் படுகொலையில்தான் புலிகளின் அரசியல் துவங்கியது.

நூற்றுக்கும் மேற்பட்ட கோயில்கள் போர்க்காலத் தில் மூடப்பட்டன. வெளிநாடுகளில்



கோவில்களை திறக்கிற புலிகள், உள்நாட்டில் இன்னும் திறக்காமல் இருக்கிறார்கள். சமாதான பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு கோயில்கள் திறக்கப் பட்டாலும் அவை வெள்ளாளர் வசம்தான் ஒப்படைக் கப்படும். (புலிகளின் முதல் விமானப் படை வெள்ளோட்டம் விடப்பட்டபோது வெட்டாப்பற்றி அம்மன் கோவிலின் மீது பூ தூவினார்கள். முஸ்லீமகளோடு பிரச்சினைகளை வலுப்படுத்து வதற்காக இந்துப் பெருமையை தட்டியெழுப்பவே அம்மன் கோவிலை ஒரு குறியீடாகத் தேர்ந்தெடுத்தனர்) கிருத்துவ வெள்ளாளர், வவுனியா, மட்டக்களப்பு வெள்ளாளர் களைவிட தூய்மையானவர்களாகவும், உயர் தமிழர்களாகவும் தங்களைக் கருதிக் கொள்வார்கள், யாழ்ப்பாண வெள்ளாளர்கள். அவர்கள் மத்தியில் இரட்டை டம்ளர் முறையை ஒழிக்கவே எங்களுக்கு முப்பது வருடமானது.ள

லங்கா சமாஜ் கட்சி, மஸ்கோ கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட மாற்று அரசியல் அனைத்தையும் புலிகள் அழித்தனர். ஹிட்லர் ஒரு இனத்தை கலைச்சான் இவர்கள் தலித்துகள், முஸ்லீம்கள், அப்பாவி சிங்களர்கள் என மூன்று இனத்தை அழித்தனர். 1983–ல் அரசாங்கத்தால் கொல்லப் பட்டவர்களைவிட விடுதலைப்புலிகளால் கொல்லப்பட்டவர்களே அதிகம். இடதுசாரி அரசியலை பலகீனப்படுத்தி, மாற்று இயக்கங்களை அழித்து, தலித் அரசியல் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் தமிழ் பிரதேசத்தின் அதிகாரத்தை வெள்ளாளர்கள் கையில் வைத்திருக் கிறார்கள்.

பரிதி: ***சிங்கள ராணுவம் நேரடியாக வன்முறையில் ஈடுபடும் யுத்த சூழலில் போராடுகின்ற ஓர் அமைப்பின் எதிர் நடவடிக்கைகளை வன்முறையாக சித்தரிப்பதும் குறைவுபடுத்திப் பேசுவதும் சரியா?***

சுகன் : சந்திரிகாவும், சிங்கள இனவெறியர்களுமே இராணுவ நடவடிக்கைகளை நிகழ்த்திக் கொண்டி ருப்பவர்கள். சிங்களர்களின் மதம் பவுத்தமாக இருக்கலாம். ஒரு அரசாங்கம் புத்தம் சரணம் கச்சாமி என்று நடத்த இயலாது. ஆனால் ஒரு விடுதலை இயக்கம் மக்களின் மீதும் சகோதர இயக்கங்களின் மீதும் அழித் தொழிப்பைச் செய்து பாசிச இயக்கமாக தலை யெடுத்தது சரியாகுமா ?

பரிதி : ***தெற்காசியாவில் மலரப்போகும் முதல் சோசலிசக் குடியரசாக ஈழ புலிகளின் அரசு அமையும் என்று தியாகு (தமிழ் தமிழர் இயக்கம்) ஒருமுறை குறிப்பிட்டிருந்தார். அப்படித்தானா?***

சுகன் : சோசலிசம் அல்ல, பாசிசம்தான் உருவாகும்.

பரிதி : ***புலிகள் மீது இவ்வளவு கடுமையான விமர்சனங்களை எழுப்புவதற்குக் காரணம் என்ன?***

சுகன் : அமெரிக்கன், சிங்கள ஆர்மிக்காரன், இந்திய ராணுவம்

**சிங்களவர்களுக்கும், புலிகளுக்கும் இடையிலான நிரந்தரப் போர் நிறுத்தம், புலிகளின் புதிய அரசு என வந்தபிறகு, யாழ்ப்பாணத்தில் வெள்ளாளர் களுக்கும் தலித்துகளுக்கும் இடையிலான போராட்டம் துவங்கப்போவது நிச்சயம். சாதி ஒழிக்கப்படும்வரை ஈழப் போராட்டத்திற்கு முடிவில்லை.**



படிப்பகம்

www.padippakam.com

***01. 06. 1981 : இன வெறியர்களால் யாழ் பொது நூலகம் எரிக்கப்பட்டது***

***14.02.2003 : சாதி வெறியர்களால் யாழ் பொது நூலகம் மூடப்பட்டது.***

1927 : தலித் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முதலாவது அமைப்பாக ' ஒடுக்கப்படும் தமிழ ஊழியர் சங்கம் ' உருவாக்கப்பட்டது. இச்சங்கத்தின் செயலாளர்களில் ஒருவரான யோவேல் போலால் 'ஜனதர்மபோதினி' என்ற தலித் விடுதலைப் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது .

1928 : மிசனரிப் பாடசாலைகளில் சம இருக்கை, சமபந்தி இயக்கம் தொடங்கப்பட்டது.

1929 : முன்னணிப் போராளி யோவேல் போல் ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாக தேசாதிபதியைச் சந்தித்து உரையாடினார்.

1930 : மிசனரிகளில் சம இருக்கை, சமபந்தி ஆகியவை சட்டமாக்கப்பட்டன.

1931 : சங்கானை மயானத்தில் சமத்துவம் கோரிய போராட்டம்.

1933 : வட இலங்கை கள் இறக்கும் தொழிலாளர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

1936 : வடபகுதிக்கு மரவரி முறை அறிமுகப்படுத்தப்பட்டது .

1943 : வட இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை ஆரம்பிக்கப்பட்டது .

1944 : அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையாகப் பெயர் மாற்றமும் 2வது மாநாடும்.

1944 : வில்லூன்றி மயானத்தில் உரிமைப் போர்.

1956 : நல்லூர் கந்தசுவாமி ஆலய நுழைவுப் போராட்டமும் வெற்றியும்.

1957 : 'சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டம் 'நிறைவேறல் .

1958 : யாழ் நகரத் தேநீர்க் கடைகளினுள் தனிக்குவளை முறையை எதிர்த்தும் உள்நுழைந்தும் போராட்டம்.

1966 : பொன்னாலையில் பொது இடங்களில் தலித்துகள் நீர் இறைப்பதற்கான போராட்டம்.

1966 : வடபுலமெங்கும் தலித் எழுச்சி தீண்டாமைக் கொடுமைக்கு எதிராக ஒக்ரோபர் 21ம் திகதி மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் .

1967 : சங்கானைக் களம், சாதி வெறியர்களுக்கு எதிராக இரத்தம் தோய்ந்த உக்கிரமான போர்.

1967 : தீண்டாமை ஒழிப்பு – வெகுசன இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

1968 : அச்சுவேலியில் ஆலய – தேநீர்க்கடை நுழைவுப் போராட்டம்.

1968 : சாவகச் சேரி – கொடிகாமம் தேநீர்க்கடைப் போராட்டம்.

1968 : மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலய உள் நுழைவுப் போராட்டம் .

1968 : மாவட்டபுரம் ஆலயப் பிரவேசப் போராட்டம் .

1969 : தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தின் இரண்டாவது மாநாடு.

1969 : கரவெட்டி கன்பொல்லையில் சாதியொழிப்பும் போர்.

மேலேயுள்ள வரலாற்றுக் குறிப்புகள் ஈழத்தில் தலித்துகளின் நீண்ட நெடிய விடுதலைப் போராட்டத்தைச் சுட்டுவன. எழுபதுகளில் ஆரம்பித்த தமிழ்த் தேசிய அரசியல் அலையும் தலித்துகளின் உரிமைப் போராட்டத்துக்கு பல வழிகளில் துணை நின்ற இடது சாரிகளின் அரசியல் வீழ்ச்சியும் தலித் எழுச்சியை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தன.

பின்னும் அங்கொன்றும் இங்கொன்றுமாக எண்பதுகள் வரையில் நிகழ்ந்த தலித் விடுதலைப் போராட்டங்கள் (எ.டு : புத்தூர், ஈவினை , எழுதுமட்டுவாள் போராட்டங்கள் ) ஆயுதந் தாங்கிய தமிழ இயக்கங்களின் வருகையோடு முற்றுப் பெறுகிறது.

கடந்த காலங்களில் நிகழ்ந்த சாதி எதிர்ப்புப் போராட்டங்களில் தலித்துகளுக்குப் பெரும் உறுதுணையாய் நின்றவர்கள் இடதுசாரிகள் என்பதில் மறுப்பேதுமில்லை. ஆனால் இந்தத் 'துணை' தான் வெறும் அற்ப வெற்றிகளுடன் தலித் எழுச்சிகளை அடங்கிப் போகச் செய்தது என்பதில் சந்தேகமுமில்லை. இந்த முரண் இடதுசாரிகளின் சமூகஅமைப்புக் குறித்த தவறான புரிதல்களுடன் தொடர்புடையது.

'ஒரு வரலாற்றுக் குற்றம்' என்ற NON பிரசுரத்திலிருந்து



படிப்பகம்

**முஸ்லீம்கள் வட கிழக்கிலிருந்து விரட்டி யடிக்கப்படாமல் இருந்திருந்தால் இந்தப் பேச்சு வார்த்தைக்கு இடமில்லை. போர் உக்கிரமானவுடன் வெள்ளாளர்கள் வெளிநாடு ஓடிவிட்டனர். அகதி முகாம்களில் திக்கற்றவர்களாக இருக்கும் தலித்துகளுக்கு இந்தப் பேச்சுவார்த்தையில் என்ன இருக்கிறது?**

அத்தனை பேரும் யாழ்ப்பாணத்தின் வாசலில் வந்து நிற்பதற்கு , புலிகளின் அரசியல் கொள்கைகளும் நடவடிக்கைகளுமே காரணம். ஆண்ட பரம்பரை மீண்டும் ஆள நினைப்பது, மீண்டும் வாழ நினைப்பது இதுதான் அவர்களின் தாரக மந்திரம். மட்டக்களப்பில் சிறுவர்களை வலுக்கட்டாயமாக ராணுவத்தில் சேர்த்தார்கள். தாய்மார்களிடமிருந்து கதறும் சிறுவர் களைக்கூட இழுத்துச் சென்றார்கள். இதற்கெல்லாம் 'நாங்கள் எவ்வளவுக்கு ரத்தமும், பலியும் கொடுக்கி றோமோ அவ்வளவிற்குத்தான் சுதந்திரத்தின் பெருமதி எங்களுக்குத் தெரியும்' என்று கற்பிதம் செய்தார்கள்.

பள்ளிக்கூடம் செல்லும் தலித் சிறுவர்கள் கட்டாய ராணுவச் சேர்ப்புக்கு புலிகளால் இழுத்துச் செல்லப்படு வதால் பலர் பள்ளிக்கே செல்வதில்லை. விடுதலைப் போராட்டத்தில் தலித்துகளின் பங்களிப்பு அதிகமாக இருப்பதன் பின்னணி இதுவே. இலங்கை ராணுவத் திற்கு எதிரிகளாக்கி அழிக்கின்றனர். தப்பியோடுப வர்களை, 'எதிரிகளைவிட துரோகியே ஆபத்தானவன்' என்ற கோட்பாட்டின்படி அழிக்கின்றனர். மிச்ச மிருக்கும் வெள்ளாளர்கள் தான் இந்த அழிவு களுக்குப்பின் ஆளப் போகிறார்கள்.

**பரிதி:** ***யாழ்ப்பாண சமூகத்தில் நிலவிய சாதிக் கொடுமைகள், ஈழவிடுதலைப் போராட்டத்தின் விளைவாகஒழிக்கப்பட்டுவிட்டதாக,தமிழகத்தில் செய்யப்படும் பிரச்சாரத்தில் உண்மை யிருக்கிறதா?***

சுகன் : யாழ்ப்பாணத்தில் தலித்துகளுக்கென்று பத்திரிகை இல்லை. அதனால் தலித் மக்களின் உணர்வுகள், வேதனைகள் அறியப்படுவதற்கு இடமில்லை. பெரும்பான்மையான தலித் மாணவர்களுக்கு ஆரம்பக் கல்விகூட கிடைக்கவில்லை. ஒரு ஆரம்ப பள்ளிக்கூடத்தில் தலைமையாசிரியராகக் கூட ஒரு தலித் வருவதையும் பொறுத்துக் கொள்ளாத வெள்ளாளர்கள் 'தச்சன் கதிர்வேலு தலைமை யாசிரியனாம்' என்று இழிவுபடுத்தி பள்ளிச் சுவற்றிலேயே எழுதினார்கள்.

தலித்துகளுக்கென்று ஒரு வங்கியோ, மருத்து வமனையோகூட இல்லை. வடமாராட்சி யில் ஒரு தலித் கிராமமே எரிக்கப்பட்டது. வேறு போக்கிடமில்லாமல் தலித்துகள் தமிழர்களாலும் அகதிகளாக்கப்பட்டனர். தொழிற் சங்கங்கள் வெள்ளாளச் சங்கங்களாகத்தான் இருக்கின்றன. அகதி முகாம்களும் சாதிப்பிரிவுகளோடுதான் தனித்தனியாக இருக் கின்றன. மலையகத் தமிழர்களில் 90 சதவீதம் பேர் தலித்துகளே . இலங்கைப் பொருளாதாரத்தை மலையகம்தான் தீர்மானிக்கிறது. வடக்கத்தியான், எதோட்டக் காட்டான், இந்தியாக்காரன் என்று வெறுப்புணர்வோடு யாழ் வெள்ளாளர்களால் விளிக்கப்படும் மலையகத் தமிழர்களின் பிரச்சினைகள் பேசப்படுவதில்லை. இலங்கைக்குச் சென்ற நெடுமாறன் மலையகம் செல்லவில்லை. தொண்டைமான் கட்சியில் தொழிற்சங்கத் தலைவராக இருந்த வெள்ளையன் சாதியின் காரணமாகவே கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். இவற்றையெல்லாம் என்ன வென்று சொல்வது ?

**பரிதி:** ***ஈழ விடுதலைப் போராட்டம் சாதியை ஒழித்து விடவில்லை, என்றாலும்கூட நடைபெறும் அமைதிப் பேச்சுவார்த்தைக்குப்பின் புலிகள் தலைமையில் ஓர் அரசு அமையும்போது தலித்துகள் தங்கள் பிரச்சினைகளை பேசித் தீர்ப்பதற்கு இடமில்லையா?***

சுகன்: முஸ்லீம்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படுவது போல தலித்துகளை அவர்கள் அணுகப்போவதில்லை. இந்துக்களாக அரவணைத்து, தங்களது அடிமைகளாக மட்டுமே பயன்படுத்துவார்கள். பெரு முதலாளியும், சாதி வெள்ளாளனுமான இலங்கை அரசின் இந்துக் கலாச்சார அமைச்சர் சி.மகேஸ்வரனால் கடந்த ஆண்டு இலங்கையில் மதமாற்றத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அப்போதே பேச்சுவார்த்தை துவங்கிய காலத்தில் இதே காலகட்டத்தில்தான் தமிழகத்தில் ஜெயலலிதாவால் மதமாற்றத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இந்து மாநாடு ஒன்று நடத்தப்போவதாக அறிவித் திருக்கிறார்கள். இவையெல்லாம் மீண்டும் சைவ வேளாள இந்து சமூகக் கட்டமைப்பு தலித் மக்கள் மீது கட்டமைக்கும் ஒடுக்குமுறை அல்லாமல் வேறென்ன ?

புலிகள் ஈழ புனரமைப்புத் திட்டத்தில் 1 லட்சம் பனைகள் வளர்க்கும் திட்டத்தை அறிவித் திருக்கிறார்கள். பனையேறப்போவது வெள்ளாளர்களா ? தலித் மக்களின் வாழ்க்கையை பனைத் தொழிலோடு இணைத்து பழைய நிலப்பிரபுத்துவ சாதியச் சமூகத்தை கட்டமைக்கும் திட்டம் இல்லையா இது ? வெள்ளாளர்கள் வெளிநாடுகளில் கம்ப்யூட்டர் எஞ்சினியர், டாக்டர் என உயர் பதவிகளில் பாதுகாப்பாக சகல வசதிகளோடும் வாழ்ந்து கொண்டு , ஈழத்தில் தலித் மக்களின் வாழ்க்கைக்கு திட்டங்களை வகுத்துத் தருகிறார்கள். புலிகளின் அரசில் பாடசாலைகள் இந்து மயமாக்கப்படும் . இந்து சனாதனக் கல்வித் திட்டங்கள் புகுத்தப்படும். சமூகமே இந்து சமயமாக்கப்படும். அவதாரமாக்கப்பட்ட ஆறுமுக நாவலர் (ஐந்தாம் குறவர்) கடவுளாக முன்னிறுத்தப்படுவார். கொடூரமான தொழிலாளர் விரோத அரசாக, தொழிற்சங்கங்கள், பொதுவுடமை கட்சிகளை அடக்கி ஒடுக்கும் அரசாக புலிகளின் அரசு இருக்கும். ஈழ வரலாறு புலிகளின் வரலாறாகவும், குறிப்பாக பிரபாகரனுக்குப் பிந்தைய வரலாறாகவும் எழுதப்படும்.

இருந்தாலும் இப்பேச்சுவார்த்தையினூடாக அமையவிருக்கும் புதிய அரசில் போதிய பிரதிநிதித்துவம், இரட்டை வாக்குரிமை, அனைத்து மட்டங்களிலும் இட ஒதுக்கீடு போன்ற தங்களுக்கான பங்குகளை தலித்மக்கள் பெற்று உத்திரவாதப்படுத்த வேண்டும்.

தலித் அரசியல் அதிகாரத்தை முன்வைத்து, தனித்துவமாக ஆயுதம் எடுக்காதபட்சத்தில், தலித்துகள் அடிமை, கூலி வாழ்க்கையில் உழலப்போவது உறுதி. சிங்களவர்களுக்கும், புலிகளுக்கும் இடையிலான நிரந்தரப் போர் நிறுத்தம், புலிகளின் புதிய அரசு என வந்தபிறகு, யாழ்ப்பாணத்தில் வெள்ளாளர்களுக்கும் தலித்துகளுக்கும் இடையிலான போராட்டம் துவங்கப் போவது நிச்சயம்.

சாதி ஒழிக்கப்படும்வரை ஈழப் போராட்டத் திற்கு முடிவில்லை.

●



படிப்பகம்

www.padippakam.com

# அவரவர் வானம் அவரவர் சிறகு

பாப்லோ அறிவுக்குயில்


கானல்வெளியாகிக் காடெங்கும் அலைகிறது உருமு வெய்யில். வழிநெடுகிலும் நிற்கும் நடுகற்களெல்லாம் நாவைச்சுழற்றி காங்கலைக் கக்கிக்கொண்டிருப்பது போலொரு பிரம்மையைத் தந்தன. கருப்புக்கோயில் எதிரே முன்னங்காலைத் தூக்கிக்கொண்டு பாயக் காத்திருக்கும் குதிரையையும், மிரட்டும் விழிகளோடும் முறுக்கிய மீசையோடும் வாளேந்தி நிற்கும் 'கருப்பை'யும் நேரில் காண, அவ்வழியைக் கடந்து செல்லத்துணிவின்றி கோவிலை சுற்றிக் கொண்டு புதர் மண்டிய குறுக்குப்பாதை வழியாக பயத்துடன் சென்றாள் 'துரமான' பெண்ணொருத்தி. தீய்ந்து போயிருந்த புல் பூண்டுகளைக் கூட விட்டு வைக்காமல் வேரோடு சுரண்டிக்கொண்டிருந்தன செம்மறிகள். வேலிகளில் பசுமையை இழந்து பட்டுப் போயிருந்த பால்கள்ளிகளைக் கடித்துப் பசியாத்திக் கொண்டிருந்தன வெள்ளாடுகளும்.

பாதி தூரம் வந்துவிட்டதால் திரும்பி பஸ் ஸ்டாண்ட் போவது வீண் அலைச்சல் என்பதால் பஞ்சராகிப் போய்விட்ட மிதிவண்டியைத் தள்ளிக் கொண்டே சென்றான். இரவு ஷிப்ட்டை முடித்துவிட்டு வருவதாய் இருந்தாக்கூடப் பரவாயில்லை. பகல் முழுவதும் தூங்கியே பொழுதைக் கழித்து விடுவதின் மூலம்,, தனிமைப் பொழுதுகளையே பார்த்துக் குறி வைத்து தாக்கும் துயரத்திடமிருந்து தப்பித்துக்கொள்ளலாம். இந்த வாரத்திலிருந்து முதல் ஷிப்ட் தொடங்கி இருக்கிறது. காலை ஆறுமணி ஷிப்ட்டை முடித்துவிட்டு ஃபேக்டரியிலிருந்து புறப்பட்டு அரியலூர் பஸ் ஸ்டாண்ட் வருவதற்குள் மணி இரண்டரையாகி இருந்தது. அங்கிருந்து பிறிதொரு வண்டியைப் பிடித்து மணகெதி வந்தடைந்தபோது மூன்றரையாகிவிட்டது. பேருந்து நிறுத்தத்திலிருந்து தென்புலமாய் விரியும் கொடிபாதையைக் கடந்து கோயில் வழியாகத் தொடர்ந்து உப்புவாரியைத் தாண்டி ஊர்போய்ச் சேருவதற்குள் சாயுங்காலமாகி விடும். இப்படி ஒவ்வொரு நாளும் அல்லலும் அவஸ்தையும் பட்டுத்தான் கல்லங்குறிச்சி அருகேயுள்ள சிமெண்ட் ஆலைக்குச் சென்று வருகிறான்.

காட்டின் கடைசி எல்லையாகவும் ஊரின் துவக்கமாகவும் இருந்தன இருளசனங்களின் ஆறு கூரை வீடுகள். ஒவ்வொரு வீட்டிலும் வேட்டை நாயும் முறுவமும் அடைந்து கிடந்தன. இக்கூரையைத் தாங்கியுள்ள செம்மண் சுவர்கள் வரை காடு விரிந்து கிடக்கிறது கெவர்மென்ட் பாரஸ்டாகிய பின்னும் தன் அடையாளங்களின் மிச்ச மீதியாய் சிலவகை தாவரங்களை மட்டும் 'மானாங்காணியாய்' பயிரிட்டுக்கொண்டு, வெளாரிச்செடியில் பழுத்திருந்த இலைகள்கூட மஞ்சள்நிற மலர்கொத்தைப் போல பார்க்க அழகாய் இருந்தன. சிறிது இளைப்பாறிக்கொள்ள மரநிழலில் ஒதுங்கினான். வாளெறும்புகள் சூடுதாங்காமல் புளியமரப்பட்டையில் பதுங்கியிருந்தன. ஒன்றிரண்டு எறும்புகள் மட்டும் இரைதேடும் பொருட்டு கீழிறங்கிக் கொண்டிருந்தன. நிழல் விரிப்பில் ஏற்பட்ட பொத்தலைப்போல திட்டுத்திட்டாய் வெயில் உறைந்திருந்தது.

இப்படித் தினமும் சிரமப்பட்டு இவன் வரத்தேவையில்லைதான். சிமெண்ட் ஆலையிலிருந்து வெளியேறும் நச்சுப்புகையிலிருந்து விடுபட்டு இருக்கலாம் என்பது மட்டுமல்ல... அப்பகுதியில் கிடைக்கும் சுண்ணாம்பு நீரைக் குடித்துவிட்டு 'நீர்க்குத்து' வலியால் அவஸ்தைப்பட வேண்டுமே என்ற பயமும்தான் வேலை பார்க்கும் ஊரிலேயே தங்கிக்கொள்ளும் எண்ணத்தைக் கைவிட வைத்தது. படிப்பதற்கும் எழுதுவதற்கும் போதுமான தனிமை கிராமத்தில்தான் சாத்தியமாயிற்று என்று சொல்லலாம்.

இவற்றோடு இவனை நம்பியே இலவசமாய் டியூசன் படிக்கவரும் பிள்ளைகளை அம்போவென்று விட்டுவிட்டு விலகி ஓடிவிட முடியாத எண்ணமும் ஒரு காரணமென்றால், வண்டிப்புறம்போக்கு - ஏரிப்புறம்போக்கு, விளைச்சலைத் தராத களர்பூமி, இடுகாட்டிற்குப் போகும் ஒழுங்கை ஓரங்கள் உபயோகமில்லாமல் வீணாய்க் கிடக்கும் தரிசு நிலங்கள், இவைகள் யாவற்றிலும் கடந்த ஐந்து வருடங்களாய்த் தானே முன்நின்று நட்டு வைத்த, விதையூன்றிய தாவரங்களை எல்லாம் பார்க்காமல் பராமரிக்காமல் தன்னால் இருக்க முடியாது என்பதால்தான் தன் தாவரக் குழந்தைகளுக்காகவே, தினமும் ஏற்படும் சிரமத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இருபத்தைந்து கிலோ மீட்டர் பயணத்தைத் தொடர்ந்து அனுபவித்து வருகிறான்.



கிளுவை குறுமரத்திலிருந்து இறங்கிய உடும்பு கௌா புதர் நோக்கி ஓடி மறைந்தது. அமைதியாய் இருந்த தெருவில் பள்ளிக்கூடம் விட்டு வந்த சிறுவர்களால் சலசலப்பு பரவத்தொடங்கின. காட்டிலிருந்து வியர்வை படர்ந்து மினுங்கும் உடம்போடு மணவெட்டிக்காரர்கள் சளசளவென்று பேசிச் சிரித்தபடியே வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். துயரத்தைக் கேலியாலும் கிண்டலினாலும் விரட்டும் மனிதர்களின் உடல்



படிப்பகம்

www.padippakam.com

களைத்துப் போயிருந்தாலும் குசும்பு மட்டும் குறையாமலிருந்தது. கயிறை அவிழ்த்துத் திறந்தான். அரவம் கேட்டதாலோ இல்லை இவனின் வியர்வையை மோப்பம் பிடித்தோ சிணுங்கியபடியே ஓடிவந்து வாலிலும், துள்ளலிலும் தாவுகால் போட்டும் தன் தோழமையை உணர்த்தியது டைகர்.

உடை மாற்றிக்கொண்டு நாற்காலியோடு பூவரசு நிழலில் வந்தமர்ந்தான். டைகர் இவனைச் சுற்றி சிணுங்கியபடியே வட்டம் போட்டுக் கொண்டிருந்தது. அதன் பார்வையில் 'எதுவும் வாங்கி வரலியா', என்ற ஏக்கமும், 'எப்பப் போடப்போற' என்ற எதிர்பார்ப்பும் இழையோடுவதைப் புரிந்துகொண்டான். மடியில் ஒளித்து வைத்திருந்த பொரையை எடுத்து ஒவ்வொன்றாய் தூக்கிப் போட்டு டைகரைத் தாவிக் கவ்வும்படி விளையாடிக்கொண்டிருந்தான். வேலியோரத்தில் நட்டு வைத்திருந்த தூதுவளை வதங்கிப் போயிருந்தது. வெயில் தாழ்ந்ததும் நீரூற்ற வேண்டு மென்று எண்ணினான். இவன் வந்திருப்பது தெரிந்ததும் ஒன்பது, பத்து படிக்கும் மாணவர்கள் புத்தகங்களோடு படிக்க வந்தார்கள். எல்லோரையும் திண்ணையில் அமரச் சொல்லி விட்டு, கொல்லை வரை நடந்துவிட்டு வரலாமென்று எழுந்தான். கூடவே டைகரும் கிளம்பியது.

நெருப்புத்தணல் ஆறிப்போய் மஞ்சள் நிறத்தில் வெயில் சிரித்துக்கொண்டிருந்தது. கீழக்கொல்லைக்குப் போகும் செம்மண் பாதையில் இறங்கினான். வடதிசை யிலிருந்து வீசியகாற்று வருடிக் கொடுப்பதுபோல் இதமாய் இருந்தது. பாதையோரத்தில் செழிப்பாய் வளர்ந் திருந்த புங்கை மரங்கள் காற்றில் இலைகள் அசைய இவனைக் கண்டு புன்னகைத்தன. இவனைப் பின்பற்றி ஊர் மக்கள் அவ்வப்போது குட்டை நீரையும், குடிக்கும் நீரில் கால் பகுதியையும் ஊற்றி வளர்த்த மரங்கள் கொளுத்தும் வெயிலிலும் பசுமையை இழந்திடாமல் இருந்தன.

மேய்ச்சலை முடித்து ஆடோட்டிக் கொண்டு எதிரில் வந்த கோலியன் தாத்தா 'போனவளையே நெனச்சிகிட்டு எத்தனை நாளைக்குப்பா ஒண்டிக்கட்டையா கெடப்பே, ஒனக்கின்னு ஒரு தொண வேணாமா... காலாகாலத்துல கண்ணாலத்த பண்ணுற வழியப் பாருப்பா...' நமத்துக் கிடந்த வெடியை வெயிலில் காய வைத்துக் கொளுத்தி விட்டுப் போகிறார் தாத்தா. அமைதியாய் இருக்க முற்படும் தருணங்களிலெல்லாம் ஆறுதல் சொல்லுவதாய் நினைத்துக்கொண்டு, ஆறிவரும் வடுவை கிண்டிக்கிளறி



***பெண்ணைப் பலகீனமானவளாகவும் பாலியல் மிகையுணர்வு உள்ளவளாகவும் எழுதிவிட்டு அதற்கு முரண்பாடாய் கதைக்கு 'மீறல்' என்று தலைப்பை வேறு வைத்திருக்கிறீர்கள், வேடிக்கைதான் போங்கள். உங்களின் நேர்ப்பேச்சிலுள்ள நேர்மை , சமுக அக்கறை இவற்றில் துளிகூட எழுத்தில் இல்லையே?***

காயமுண்டாக்கிவிட்டுப் போகிறார்களே! என்று வருத்தப்பட்டான். செம்மறிகளை பட்டிக்கு ஓட்டிக்கொண்டு வந்தார்; மேலத்தெரு 'கட்டாரு' என்கின்ற கலியன். கமழ்ந்து கொண்டிருந்த முந்திரிப் பூக்களின் மணத்தை மந்தையிலிருந்து கிளம்பிய கவிச்சை அமுக்கிவிட்டிருந்தது. செம்மறிகளின் குளம்புகள் கிளறி விட்ட புழுதியோடு புழுக்கையின் வீச்சமும் காற்றில் பரவியது.

கள்ளியில் சரபுராவென்று சத்தங் கேட்டதும், ஒவ்வொரு கள்ளியாய்த் தாவி மோப்பம் பிடித்துப் பார்த்து, தப்பியோடிய அணிலைப் பிடிக்க முடியாமல் முகம் தொங்கியபடியே இவனைப் பின் தொடர்ந்தது டைகர். இவனை முந்திக்கொண்டு படவாசலின் இடைவெளி வழியே உள்நுழைந்து சென்று, வாலாட்டி 'கொணட்டிக்' காட்டியது டைகர். அதன் பசியறிந்து அலுமினியத் தட்டில் சோறு போட்டு வைத்தான். செல்லமாய் முதுகை வருடிக் கொடுக்க கொடுக்க வாலை ஆட்டி சினேகத்தை வெளிப்படுத்தியது.

எட்டுமணிவரை டியூசன் நடந்தது. வீட்டுப் பாடங்களைப் படித்துவிட்டு நாளைக்கு வந்தால் 'டெஸ்ட்' என்றான். விருப்பப்பட்டு வந்த ஒன்பது படிக்கும் மாணவர்களை மட்டும் வைத்துக் கொண்டு, பிளாஸ்டிக் குடத்தில் நீரைக் கொண்டு வந்து வதங்கிப்போயிருந்த பால, வேம்பு, பூவரசு கன்றுகளுக்கெல்லாம் ஊற்றினான். வெயிலில் வறண்டு போய்க் கிடந்த செடி களெல்லாம் உயிர் தண்ணீரைக் குடித்துப் பசியாறிக்கொண்டு காற்றில் அசையத் தொடங்கின.

சாப்பிட்டு முடித்து அரிக்கேனின் திரியைக் குறைத்து திண்ணையின் கெங்கில் வைத்துவிட்டு, காசரைநார்க் கட்டிலை வாசலில் போட்டு உடம்பைக் கெடத்தினான். படவாசலை நோக்கிக் குரைத்துக்கொண்டே ஓடிய டைகரிடம், ஆக்ரோஷம் குறைந்துபோய் அதன் குரலில் குழைவு தொற்றிக்கொள்ள 'கொணட்டியபடியே' பெட்டை நாயின் பின்னாலேயே தெருவைப் பாக்க ஓடியது.

துறவியைப் போல் மனம் வேதாந்தம் பேசினாலும், உடம்பு என்னவோ கட்டுப்படாமல் திமிறுகிறது. விலங்குகள் கூட 'தேவை' என்றவுடன் தனக்கொரு துணையைத் தேடிக்கொள்கின்றன.. அடியாழத்தில் குமிழ்விட்ட ஏக்கம் மேலெழுந்து உடைந்து சிதறி பெருமூச்சாய் வெளியேறியது. சிறுவனாய் இருந்தபோது அப்பனின் அரவணைப்பைப் பெறும் வாய்ப்பினை தகப்பனோடு சேர்ந்தே இழந்தான். கல்லூரிப்படிப்பை முடிக்கும் முன்னேயே தாயைப் பறிகொடுத்தான். அண்ணன் பார்த்துக் கட்டி வைத்தவளை... ஆறு மாதங்கள் அவனோடு தன்னையே பகிர்ந்துகொண்ட மனைவி மஞ்சுவை சாலை விபத்தில் இழந்துவிட்டு . தனி மரமாய் துயரக்கொடி பின்னிக்கிடக்க உயிர்ப்பிணமாய் வாழும்போது உணர்வு எப்படி எழும்? நல்ல நூல்களைப் படிப்பது... பார்த்ததை பாதித்ததை மனசில் புதையுண்டு கிடக்கும் அர்த்தம் நிறைந்த வார்த்தைகளைத் தனிமை துளைக்கும் போதெல்லாம் வலிநிவாரணி மாத்தி ரையைப்போல் ஒவ்வொரு சொல்லாய் கோர்த்துக் கோர்த்து எழுதுவது... படிக்க வரும் பிள்ளைகள் துவக்கி வைக்கும் உரையாடலின் இடைவெளியில் தற்காலி கமாய்த் தொடர்ந்து வரும் நிகழ்வுகளை தள்ளி வைத்துவிட்டு நிகழில் மறந்து கிடப்பது... டைகரின் சிணுங்கலில் சினேகமான பார்வையில் துணையின் அருமையை உணர்வது...

பார்க்கும் செடிகள், கிளை விரித்து நிமிரும் மரங்களுக்காகவே, வலிகளை எல்லாம் உட்செரித்துக்கொண்டு ஆறு வருடகாலமாக வாழ்ந்து வந்த இவனுக்குள்தான்... வவ்வால் புழுக்கையின் நெடியையும், படர்ந்து கிடக்கும் நூலாம்படையையும், மண்டிக்கிடந்த இருளையும் அழித்துவிட்டு மின் மினியைப்போல் திடீரெனத் தோன்றி திரியில் ஒளியேற்றி வைத்தாளே ஒருத்தி!... பரணில் கிடந்த பொருள்களையெல்லாம் எடுத்துத் தூசு தட்டி குழந்தையிடம் கொடுத்து விளையாடச் சொல்லும் அவள் ஒண்டிக்கட்டையாய் வாழ்ந்து விட்டுப்



படிப்பகம்

www.padippakam.com

போய் விடலாமென்ற தன் எண்ணத்தை... ஆப்பை ஆட்டி எடுத்து விட்டு தவிக்கும் குரங்காய், ஆட்டி... ஆட்டங்காணச் செய்துவிட்டாளே ஒருத்தி! தவிக்கும் உடம்பையும், திமிரும் மனசையும் மூச்சைப் பிடித்துக்கொண்டு பலத்தைத் திரட்டி இழுத்துப் பிடித்தான்.

மஞ்சுவிற்குப் பிறகு மனதில் இப்படியொரு அலையெழுப்பிய அவளை எப்பொழுது சந்தித்தோம்? அசைபோடத் தொடங்கியது மனசு... பார்க்க... படித்ததைப் பகிர்ந்துகொள்ள... எப்போதாவது முருகபூபதியைப் பார்க்க யூனியன் ஸ்கூல் செல்வது உண்டு. அப்படி ஒருமுறை சென்றிருந்தபோதுதான் டீச்சரை சந்திக்க நேரிட்டது. மற்றவர்களைப் போல சராசரியாகத்தான் இருப்பாளென்று நினைத்தவனுக்கு அதிர்ச்சி வைத்தியம் தந்தாள் டீச்சர். சமகால அரசியல் எவ்வாறெல்லாம் மக்களை மழுங் கடிக்கின்றன என்பதைப் பற்றி ஒரு ஆய்வாளனைபோல அவள் பேசப் பேச நாம் உரையாடிக்கொண்டிருப்பது ஒரு அரசு ஊழியரிடமா? வியப்பால் அவனை திக்குமுக்காட வைத்தாள் டீச்சர். அடுத்த வாரமே இன்னொரு வாய்ப்பு கிடைத்தது டீச்சரைப் பார்க்க.

இரண்டாம் முறை சந்திப்பு இருவருக்குள்ளும் இருந்த இடை வெளியை வெகுவாய்க் குறைத் திருந்தது. பாசாங்கு இல்லாமல் நேர்மையாக இருந்தது பேச்சு. குடும்பம், வாழ்க்கை , குசலம் விசாரிப்புகள் இதுபோல் எதுவுமில்லாமல் இலக்கியம், நிகழ்கால அரசியல் இவை பற்றியே ஒரு விவாதத்தை துவக்கி வைக்கும் அளவிற்கு உரையாடல் இருந்தது. இதுபோன்றதொரு நல்ல இலக்கிய ரசனை உள்ளவரை, தேர்ந்த வாசகியை , அறிவுப்பூர்வமான விமர்சகரை அறிமுகம் செய்து வைத்த நண்பனுக்கு மானசீகமான தன் நன்றியைச் சொன்னான். பள்ளிக்கூடத்திலிருந்து பேசிக்கொண்டே... டீச்சர் தங்கியிருக்கும் டவுனுக்குப் போகும் தார்ச்சாலை வரை உரையாடல் தொடரும். ஒருமுறை கூட அவரும் வீட்டிற்கு அழைத்ததில்லை. இவனும் சென்றதில்லை. கடந்த இரண்டு மாத காலமாகத்தான் இந்நட்பும் உரையாடலும் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டு வருகிறது.

கடந்த முறை இவன் கொடுத்துவிட்டு வந்த கதைகளுக்கு டீச்சர் எழுதியிருந்த கடிதம்தான் இவனை பாதித்த முதல் விமர்சனம் என்று சொல்லலாம். கடித விமர்சனத்தை நாம் இவ்வாறு தொகுத்துக் கொள்ளலாம்.

'அன்புத் தோழருக்கு பி.ஜானகி எழுதிக்கொள்வது, தங்களின் இரண்டு சிறுகதைகளையும் வாசித்தேன். கதைக்கான வடிவம் உங்களுக்கு சிறப்பாக வந்திருக்கிறது. கட்டமைப்புதான் சிதில மடைந்து பாழடைந்து போய்விட்டது. சராசரி வாசகர்களிடம் சென்றடையும் விதமாய் எழுதப்பட்ட கதையாக இருந்த தால்தான் வெகுஜன இதழ்களில் வெளியிட்டு இருக்கிறார்கள் போலும். நீர்த்துப்போன நடையும் அலங்காரமான மொழியும் படிக்க ஒவ்வாமையையே ஏற்படுத்தின. தமிழ்ச் சினிமாவின் தாக்கம் அப்படியே தூக்கலாய்த் தெரிகிறது. 'தாலி சென்டிமெண்டை' நீங்களுமாத் தோழர் தூக்கிப்பிடிக்க வேண்டும்? இது வெகுஜன இதழின் வண்ணத்திற்கு ஏற்ப தன் நிறத்தை மாற்றிக்கொள்ளும் பச்சோந்தித்



தனமல்லவா? பெண்ணைப் பலகீனமான வளாகவும் பாலியல் மிகையுணர்வு உள்ளவளாகவும் எழுதிவிட்டு அதற்கு முரண்பாடாய் கதைக்கு 'மீறல்' என்று தலைப்பை வேறு வைத்திருக்கிறீர்கள், வேடிக்கைதான் போங்கள். உங்களின் நேர்ப்பேச்சிலுள்ள நேர்மை , சமூக அக்கறை இவற்றில் துளிகூட எழுத்தில் இல்லையே? இப்பிரதி களைப் பெண்ணியம் பேசும் படைப்பென்று வேறு எழுதி இருக்கிறீர்கள். இதுபோன்ற கதைகளெல்லாம் எழுதி தங்களின் பெயரையும் மதிப்பையும் கெடுத்துக் கொள்ள வேண்டாமே?

தோழமையுடன்

ம.ஜானகி

இக்கடிதத்தைப் படித்தபோதுதான் தனக்குள் படிந்துபோயிருந்த 'நானை' - முதன்முறையாகத் தரிசனம் செய்தான். அவன் அறியாமலேயே பிரதிகளில் பொதிந்துள்ள ஆணாதிக்க கருத்தியலை அறிந்து கொண்டவுடன், தான் இதுநாள் வரையும் சராசரி எழுத்தாளனாகத்தான் இருந்து வந்திருக்கிறோம் என்றுணர்ந்து அதிர்ந்தான். ' தந்தை வழிச் சமூகத்தின் பிரதிநிதியாகத்தான் இருந்து வந்திருக் கிறேனா?' அவனுக்கு வியப் பாகவும் அவமானமாகவும் இருந்தது. முதன் முதலாக 'தான்' என்கின்ற திமிரை உதறிவிட்டு தெளிவடைந்தான்.

அடுத்தடுத்துப் பேச நேரிட்ட போதெல்லாம், டீச்சர் வழக்கம்போலவே உரையாடினாலும் இவனால்தான் இயல்பாக இருக்க முடியவில்லை.

இடையில் ஒருமுறை பள்ளிக்கூடம் போயிருந்தபோது, முருகபூபதி திடீரென்று லீவு போட்டுவிட்டு ஊருக்குப் போயிருப்பதாகத் தலைமையாசிரியர் கூறினார். அன்று டீச்சரோடு பேசிக் கொண்டு போகும்போதுதான், தயங்கித் தயங்கிக் கேட்டான்.

'நீங்க ஏன் டீச்சர் மேரேஜ் பண்ணிக்காம இருக்கீங்க?' அவன் கேள்வியே 'பாதாளக் கரண்டியாகி' மனசின் ஆழத்தில் புதைந்து கிடந்த கசடை யெல்லாம் வெளிக்கொணர்ந்தன. கலகல வென்று சிரித்தாள் ஜானகி. பிசிறின்றி ஒலியெழுப்பும் குரலுக்குத் தெரியும் துயரத்தின் வலியைப் பற்றி. அவள் உதட்டோரம் வழியும் புன்னகையின் அடியாழத்தில் படிந்துள்ள கண்ணீரையும் கவலையையும் பற்றி யாருக்குத் தெரியும்?

'ஆகும்போது சொல்றேன் தோழர்...' பொய்யான பதிலென்றாலும், பிறரின் பரிதாபமான பார்வையும் கேலியும் தன் மீது விழுவதைத் துளியும் விரும்பாததால்தான், தன்னைப் பற்றி எதுவுமே கூறாமல் வாயை மூடிக்கொண்டாள்.

ஜானகியே தனக்கு மனைவியாய் அமைந்தால்... நினைக்கவே வானில் மிதப்பது போலிருந்தது. ஒத்த சிந்தனை, ஒத்த ரசனை, இலக்கிய அறிவு, நுட்பமான விமரிசனப் பார்வை அதை முகத்திற்கு நேராகவே சொல்லும் துணிச்சல் இன்று தன் விருப்பத்தை ஜானுவிடம் சொல்லி சம்மதிக்க வைக்கவேண்டும். 'ஜானு... ஜானு...' மனம் அவளையே சுற்றிக் கொண்டிருந்தது. காலை ஷிப்டை முடித்துவிட்டு ஐம்பது ரூபாய்க்குப் பழங்களை நல்லதாய் பார்த்து வாங்கிக் கொண்டு ஜானகி டீச்சர் வாடகைக்குக் குடியிருக்கும் ஊருக்கு பஸ் ஏறினான்.

கோடை வெயிலுக்கு இன்றொரு நாள் விடுமுறையா? தெரியவில்லை. மழை வருவதற்கு அறிகுறியாய் சில்லென்ற குளிர்காற்று விரையும் பேருந்தின் ஜன்னலினூடே உள்வீசியது. படிப்பதற் காகக் கையில் வைத்திருந்த வங்கமொழி நாவலாசிரியர் போதிச்சத்துவ மைத்ரேயின் 'முத்துக்குள் சிப்பி' காற்றில் படபடத்தது. இன்று படிக்கக்கூட விருப்பமின்றி , மனம் கனவு காணத் தொடங்கியது.

பள்ளிக்கூடத்தில் பலமுறை பார்த்துப் பேசி இருந்தாலும் முதன் முறையாய் இன்றுதான் ஜானகியைப் பார்க்க வீட்டிற்குச்



படிப்பகம்

www.padippakam.com

**அவளையும் அறியாமல் சாயம் இழந்த மலரைப்போல ஒரு வறண்ட புன்னகை இதழோரத்தில் தேங்கியிருந்தது. கோர்த்திருந்த விரல்களைப் பிரிப்பதும் கோர்ப்பதுமாய் இருந்தவளின் விழிகள், ஒரு பக்க காது அறுக்கப்பட்ட வான்கோ ஓவியத்திலேயே பதிந்து போயிருந்தது.**

செல்கிறான். என்றுமில்லாமல் ஒருவித பயமும் பதட்டமும் அவனுக்குள் பரவியிருந்தது. முகவரியை வைத்துக் கொண்டு விசாரித்துச் சென்றடைந்தான். தெருவில் விளையாடிக்கொண்டிருந்த சிறுமி இவன் இரும்புக்கேட்டை திறந்து கொண்டு உள்ளே நுழைவதைப் பார்த்ததும், இவனைக் கடந்து உள்ளே சென்று "அம்மா ஒங்களப் பார்க்க தோழர் ஒருத்தர் வந்திருக்காங்க'' என அழைத்தாள் . வீட்டிற்குள் நுழைவதிற் குள்ளேயே அவனுக்குள் கேள்விகள் முளைக்கத் தொடங்கின. சிறுமியின் தெளிவான உச்சரிப்பும் விளித்துச் சொன்ன வார்த்தையும் இது டீச்சரின் மகளாகத்தான் இருக்குமென்ற முடிவுக்கு வந்திருந்தான். அவங்களைப் பார்த்தால் திருமணம் ஆனவங்களாகத் தெரியலியே! ஒருவேளை அக்கா மகளா இருக்குமா? இல்லை கணவனை இழந்தவங்களா இருப்பாங்களா? சரி இருந்தால்தான் என்ன? முடிவை மாற்றிக்கொள்வதாய் இல்லை. மனம் சமாதானம் செய்தது.

புன்னகை விரியும் இதழோடு அவனை வரவேற்று பிரம்பு நாற்காலியில் அமரச் சொன்னாள். டீப்பாயில் ஆங்கில, தமிழ் இதழ்கள் கிடந்தன. சுவரில் நவீன ஓவியங்கள் லேமினேஷன் செய்யப்பட்டு மாட்டப்பட்டிருந்தன. இவன் பார்த்திராத வான்கோ, ஆல்பர்க் காம்யூ ஓவியங்களும் இருந்தன. வழக்கத்தைவிட மாறுதலுக் காகக் குடும்பத்தைப் பற்றி விசாரித்துக்கொண்டிருந்தாள். தன்னைப் பற்றியும் குடும்பத்தைப் பற்றியும் சுருக்கமாக எடுத்துச் சொன்னாள்.

ஆவி பறக்கும் டீயும், நான்கு பிஸ்கட்களும் அவனுக்காகப் பரிமாறி னாள். எதிர்வீட்டுச் சுட்டிப்பயல் ஜெயக்குமார் கூப்பிட்டானென்று பந்தைத் தூக்கிக்கொண்டு தெருவுக்குள் ஓடினாள் ரேணு.


''செல்லம் ரோட்டுக்கு போயிடாதடா''

''சரிம்மா...'' பதில் சொல்லிக் கொண்டே கேட்டைக் கடந்தாள் சிறுமி.

பேச்சு டீச்சரின் குடும்பத்தைப் பற்றித் திரும்பியது. அப்பாவும், அம்மாவும் தவறிவிட்டதாகவும் தங்கை திருச்சியில் குடும்பத்தோடு இருப்பதாகவும் அண்ணன் ஒருத்தர் ஊரோடு இருந்துகொண்டு விவசாயம் பார்த்து வருவதாகவும் கூறினாள். மறுமணத்தைப் பற்றியும் தங்களுக்கு விருப்பம் இருக்கும்பட்சத்தில் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகவும் தன் நிலைப்பாட்டை வெளிப் படையாகப் பேசினான். டீச்சரின் விருப்பத்தை அல்லது முடிவைக் கேட்டான் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.

இயல்பாய் இருந்தவளின் முகத்தில் மின்னல் கீற்றைப்போல் ஒரு மாற்றம் நிகழ்ந்து மறைய, ஒரு நெடிய பெருமூச்சை இழுத்துவிட்டாள். அவளையும் அறியாமல் சாயம் இழந்த மலரைப்போல ஒரு வறண்ட புன்னகை இதழோரத்தில் தேங்கியிருந்தது. கோர்த்திருந்த விரல்களைப் பிரிப்பதும் கோர்ப்பதுமாய் இருந்தவளின் விழிகள், ஒரு பக்க காது அறுக்கப்பட்ட வான்கோ ஓவியத்திலேயே பதிந்து போயிருந்தது. சில நொடிகளுக்குப் பிறகு அவனை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்துவிட்டு பேசத் தொடங்கினாள். வழக்கம்போல் அவள் உரையாடலில் இழையோடும் நளினமும் தெளிவான சொற்பிரயோகமும் இம்முறை தொலைந்து போயிருந்தது.

" ஒருமுறைபட்ட அடியே போதும் தோழர். குடும்பங்கிற பொறிக்குள் இன்னொரு முறையும் தெரிஞ்சே மாட்டிக்க நான் விரும்பல. இந்த சமூக



அமைப்புலேருந்து வர்ற எல்லா ஆண்களுமே பெண்ண ஒரு உடைமைப் பொருளாதான் பார்க்குறாங்க. ஏன்னா குடும்பங்கிற அமைப்பு அப்புடி. பாதுகாப்பையும் பாசத்தையும் தர்ற இதே அமைப்புதான் அதிகாரத்தையும் ஆணாதிக்கத்தையும் உற்பத்தி செய்யுற கருப்பையா இருக்குது. கல்வி அமைப்பு கூட அதைவிட மோசமாயில்ல இருக்கு. இல்லேன்னா பொறியியல் பட்டதாரியாகி உயர் அதிகாரியா பதவியில இருந்தவன், குழந்தை இல்லேங்கிற ஒரு காரணத்தை வெச்சி என்னை 'டிவோர்ஸ்' பண்ணிவிட்டு இன்னொருத்தியோடு குடும்பம் நடத்தியதோடு... அவ மோகத்தில் என்னை அடிச்சு தெருவுக்கு துரத்தியடிக்கத் துணிவானா? பூக்கிற பூவெல்லாமா காயாகி கனியக் கொடுக்குது? குழந்தைய பெக்கிறது ஒண்ணுதான் பெண்ணோட தகுதியா?

என்னைப்போல விதிவிலக்கு களையும் இயற்கை படைக்கத்தானே செய்யுது! இந்த சூட்சுமத்தை புரிஞ்சிக் கிறவங்ககூடத்தான் நிம்மதியா வாழ முடியும் . அப்ப பொண்ணுன்னா குழந்தை பெற்றால்தான் வாழத் தகுதியானவளா? இல்லெ ஒரு வாதத்திற்காகக் கேட்கிறேன். ஒரு ஆண் மலடனா இருந்தான்னா தன்னோட மனைவிக்கு இன்னொரு கல்யாணத்த செஞ்சி வெப்பானா? முடியாதில்ல, அத இச்சமூகத்தால தாங்கிக்க முடியாதில்ல... இந்த சமூகத்தைப் பற்றி தெளிவா சிந்திக்கத் தூண்டாத , வெறும் பட்டதாரிகளை உற்பத்தி செய்யிற தொழிற் கூடமாத்தானே நம்ப பல்கலைக்கழகங்கள் இருக்கு. 'மெக்கெல்லன்' கொடுத்திட்டு போயிருக்கிற அடிமைக் கல்வியத்தானே நாமும் வேறு வழியில்லாம வயிற்றுப் பாட்டுக்காக சொல்லிக்குடுத்துக்கிட்டு இருக்கிறோம். அப்புறமென்ன? நான் படிச்சவன், அறிவாளிங்கிற வீண் ஜம்பமெல்லாம்...? மனிதர்கள புரிஞ்சிக்கத் தெரியாத... சக மனிதர்களை நேசிக்கத் தெரியாத... பெண்ண ஒரு மனுசியா மதிக்கத் தெரியாத ஒருத்தன். எவ்வளவு பெரிய பட்டங்கள் வாங்கி பெரிய பதவியில இருந்தும் என்ன பிரயோஜனம்? அவனும் சராசரிக்கும் கீழான ஒரு ஜந்து இல்லாம வேறென்னவாம்?

... எனக்கு இன்னொரு வாய்ப்புக் கிடைச்சாக்கூட குடும்பங்கிற கட்டமைப் புக்குள்ள கழுத்த நீட்டிகிட்டு மூச்சுத்திணற தயாரா இல்ல... இதுல விதிவிலக்காக சில ஆண்கள் இருக்கலாம் இல்லேண்ணு சொல்லல. விதிவிலக்குகளே பெரும் பான்மை இல்ல, இல்லீங்களா? இப்ப எனக்கென்ன குறை? குழந்தைக்கு குழந்தையாகவும் நல்லதொரு துணை யாகவும் என் ரேணு இருக்கா... நான் பெறாவிட்டாலும் அவளைப் பொருத்த வரை நான்தான் அவளோட அம்மா... நான்



படிப்பகம்

www.padippakam.com

தவறாகப் பேசியதாக நினைக்க வேண்டாம். நீங்க ஒரு எழுத்தாளராக இருந்ததால தான் இது வரைக்கும் மனசுக்குள்ளேயே போட்டு அழுத்தி வெச்சிருந்தத எல்லாம் இப்புடி கொட்டிட்டேன்... இப்பவாவது, என்ன... என்னோட உணர்வுகள புரிஞ்சிக்கிட்டு இருப்பீங்கண்ணு நினைக்கிறேன். ஒங்கள புண்படுத் தணுங்கிறது என்னோட நோக்கம் இல்ல. இனிமேலும் திருமணம் குடும்பம்னு என்னையே நான் முடமாக்கிக் கொள்ள தயாரில்ல. ஒங்களுக்கு விருப்பம்னா என்னுடைய நண்பரா எப்பவும் நீங்க வீட்டுக்கு வரலாம், போகலாம். இப்படிப் பேசுறத, பழகுறத இந்த ஊரு உலகம் எப்படிப் பார்த்தாலும், விமர்சனம் செய்தாலும் அதபத்தி எனக்குக் கவல இல்ல.. என்ன தோழர் சரீங்களா...?''

நினைத்துக்கொண்டு வந்ததிற்கு நேர்மாறாய் நிகழ்ந்திருப்பதைத் திரும்பவும் மனதிற்குள் அசைபோட்டுப் பார்த்தான். இனிமேல்பட்டு எதைப்பற்றி பேச? அதுதான் எல்லாவற்றையும் சேர்த்து டீச்சரே பேசிவிட்டாரே! என்ன பேசுவதென்று தெரியாமல் சிறிது நேரம் மௌனமாகவே இருந்தவன், தான் கொண்டு வந்திருந்த சிற்றிதழ்கள் இரண்டையும் கொடுத்துவிட்டு விடை பெற்றுக்கொண்டு எழுந்து வெளியே வந்தான். இவன் கேட்டைத் திறப்பதற்கும் கைநிறைய மகிழம்பூவோடு ரேணு உள்ளே நுழைவதற்கும் சரியாய் இருந்தது. குழந்தையின் முதுகை செல்லமாய்த் தட்டிக்கொடுத்துவிட்டு தெருவில் இறங்கினான். ரேணு சினேகமாய்ச் சிரித்துக் கையசைத்தாள். பிள்ளைகளின் கூச்சலும் சிரிப்பொலியும் இல்லாமல் தெரு நீண்டு கிடந்தது. எல்லோரும் டி.வி. பெட்டியின் முன்னால் விளையாட்டைத் தொலைத் திருந்தனர். தெரு முக்கிற்குச் சென்றவன் அனிச்சையாய்த் திரும்பிப் பார்த்தான். ஜானகி வாசலில் நிற்க, குழந்தை கையசைத்தபடியே ஓடி வந்தாள்.

"அம்மா குடுக்கச் சொன்னாங்க...'' தன் பிஞ்சு விரல்களிலிருந்து அவன் கையில் கொட்டினாள். விழியில் நீர்ப்படலம் உருவாக சிறுமியின் கன்னத்தில் முத்தத்தைப் பதித்துவிட்டு, கையசைத்த படியே நடக்கத் தொடங்கினான். இறுக்கமும் படபடப்பும் கரைந்து மனம் லேசாகிப் போயிருந்தது. மண்ணின் மனத்தோடு குளிர்காற்று வீச, கோடை மழை தூறலாய் விழத் தொடங்கியது. மழைத் தூரலின் குளிர்ச்சி யான தொடலும் நாசியுள் பதிந்த மணமும் மனசெல்லாம் அலைந்த தணலைக் கழுவி விட்டபடியே பொழிய... பூந்தூறலில் நனைந்து கொண்டே சென்றான். மூடிய கைகளுக்குள் மகிழம்பூ மணந்து கொண்டிருந்தது.

●

# தடம் தொட்டு...

தோழமையின் நெகிழ்ச்சியுடன்,

புதிய தடம் தோழர்கள் அறிவது, இதழ் 11ல் 25 பிரதிகளும் கிடைத்தது. பாரிஸ் அறிவாலயத்தில் விற்பனைக்கு 10 பிரதிகள் போட்டேன். 1 பிரதி = 1 யூரோ. லண்டன், சுவிஸ் போகும்போது மீதி இதழ்களைக் கொண்டு போக வைத்திருக்கிறேன். இதழில் என்.டி.ராஜ்குமார் உள்அட்டைக் கவிதை உச்சம். ஆசிரியர் தலைகளின் சாரம். எதிர்ப்புகளை இன்னும் தீவிரப்படுத்த வேண்டும். நம்பிக்கையை இழக்கவேண்டாம். உலகம் நமது கைகளில். நான் இந்தியாவில் பிறந்திருக்கவேண்டும். எந்தக் குறிக்கோளுமற்று 16 வருடங்கள் இந்த நரகத்தில் உழலுகிறேன். இதழ் 12 வேலைகட்குத் திட்டமிடவும்.

**நேசத்துடன் சுகன், பிரான்ஸ்.**

தமிழ்த் திரைப்படங்களின் விமர்சனம் - ஓர் உதாரணம் கட்டுரை,சில ஆரோக்கியமான முன்னறி வித்தல்களைக் கொண்டிருக்கிறது. இன்றைய சினிமாவுக்கு இதுபோன்ற பார்வை அத்தியாவசியம். ஆனாலும் அவசியத்தைக் கண்டுகொள்ளும் அக்கறையின்றியே இன்றைய சிற்றிதழ்களின் போக்கும் தொடர்கிறது.

பிராமணர், பிராமணர் அல்லாத மேல் சாதியினர் கைவசமிருக்கும் தமிழ் சினிமா, தாழ்த்தப்பட்ட , ஒடுக்கப்பட்ட சாதி மக்களின் குரலாகவும் பிம்பமாகவும் ஒலிக்கும், ஒளிரும் என்று நம்புவது வீண் கனவு. அது, அதன் வழியில் போய்க்கொண்டிருக்கிறது. இடைமறித்து 'ஏன்' என்று கேட்கவேண்டும். துரதிர்ஷ்டவசமாக, கேட்பதற்கான சந்தர்ப்பமும் சக்தியும் படைத்தவர்கள் பார்ப்பனியத்தின் வால்பிடித்து பயனப்பட்டுப் போனார்கள்.

சரியான தலித் சினிமா உருவாக்கப்படும்போது, அரசாங்கத்தின் ஏவலான தணிக்கைப்பிரிவு, தலித்திய விரோதிகளின் அதிகாரம் ஓங்கியிருக்கும் வெளியீடல் பற்றியும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில், மக்களுக்கான சினிமாவைக் கருவிலேயே மரித்துப் போகச் செய்கிற மருத்துவ பலம் அந்த இரண்டுக்கும் உண்டு.

**ருத்ரன், காவேரிப்பட்டனம்**

புதிய தடம் 11ல் 'அழகி' திரைப்பட விமர்சனத்தில் கருத்தளவில் எந்த முரணும் இல்லை. 'அழகி' என்று பாரம்பரிய பார்ப்பன அழகுதான் தங்கர்பச்சனால் காட்டப்பட்டிருப்பதை க் குறிப்பிட்டிருக்கலாம். விமர்சனத்தின் இறுதியில் பெண்ணின் பாலுறவு 'வக்கிரமாக, அசிங்கமாக' என்பதோடு மட்டும் முடித்திருக்கலாம். ஒரு விசயத்தின் ஆழத்தைச் சொல்ல பல ஆபாசச் சொற்கள் தேவையில்லை என்பதோடு, விபச்சாரத்தில் ஈடுபடும் ஆணைக் குறிப்பிடுவதற்கென தனிப் பெயர் சொல் தமிழ் மொழியில் இல்லை. விதவை, வாழாவெட்டி, பத்தினி போல் பெண்ணுக்கு மட்டுமே 'பெருமை' சேர்க்கும் விதத்தில் நிலவுகிற மனுவின் தமிழ்ச் சொற்களை நாம் பயன்படுத்துவது சரியல்ல.

தோழர், காளிங்கராயனின் 'நிகழ்வு பதிவு'-ல் ' தோழர்கள் மதுவிடுதியில் மெல்லிய போதையேற்றிக் கொண்டனர். இறுக்கம் தளர்ந்த நிலையில் - மனந்திறந்த உரையாடல்கள்... இனிய கனவும், நினைவும் கலந்த நிலையில் கலைந்து சென்றோம்' என்று முடித்திருக்கிறார். இறுக்கத்தை போதையேற்றித்தான் தளர்த்திக்கொள்ள வேண்டுமா என்பதோடு, அதில் கலந்து கொண்டவர்களில் யார் தாங்க முடியாத இறுக்கத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றும் தெரியவில்லை. இறுக்கம் என்பதற்கும், மகிழ்ச்சி என்பதற்கும் நம் தோழர்கள் என்ன வரையறை வைத்திருக்கிறார்கள் என்றும் தெரியவில்லை.

சாதாரண அரசியல், சமூகப் புரிதலற்ற, ஒடுக்கப் பட்ட, தலித் விளிம்புநிலை மக்கள் போதையேற்றிக் கொள்வதை, வாழ்வின் இறுக்கத்தைத் தளர்த்தி, தற்காலிக மகிழ்ச்சி அடைவதை நாம் தவறு என்று விமர்சிக்கப் போவதில்லை. இதை அளவுகோலாக வைத்து ஒரு மனிதனை குணரீதியாக நல்லவர், கெட்டவர் என்று தீர்மானிக்கப் போவதுமில்லை.

சமூக அக்கறையுடன் செயல்படும் தோழர்களை மட்டுமே இவ்விசயத்தில் கேள்விக்குள்ளாக்குகிறேன். குடிப்பது தவறு என்றவுடனே , ஆணாதிக்க எதிர்ப்பு நிலையிலிருந்து மட்டும் பேசுவதாய் நினைத்துக்கொண்டு 'சங்க காலத்தில் பெண்கள் குடித்தார்கள், அடித்தட்டு மக்களில் ஆணும், பெண்ணும் சேர்ந்து குடிப்பது சாதாரணம்' என்று விளக்குகிறார்கள். அவர்கள் கள்ளச் சாராயம் குடித்து இறந்து போவதும், குடும்பமே சிதறி சீரழிவதும் தொடர்கிறது. இதற்காக, பெண்கள் போராட்டம் நடத்தி



படிப்பகம்

www.padippakam.com

இதில் ஒரு பெண்கூட கொல்லப்பட்டார். இதையெல்லாம் நம் தோழர்கள் என்ன மாதிரி அணுகுகிறார்கள்?

இன்னும் சிலர் 'மார்க்ஸ் குடிச்சார், நாங்களும் (மார்க்ஸியர்கள்?!) குடிக்கிறோம்' என்றும், பெரும் பெரும் கவிஞர்கள், இசைக்கலைஞர்கள், மேதைகள் எல்லாருமே குடிகாரர்கள்தான் அதனால் நாங்களும் குடிக்கிறோம். என்றும் வடிவேலுபோல நகைச்சுவை பண்ணு கிறார்கள்!? நாம் நமது ஆதர்ச நாயகர்களை அவர்கள் வாழ்ந்த சூழலோடு, அவர்கள் வாழ்வின் சாரத்தை உள்வாங்கிக் கொண்டு அதை நம் சமூகத்திற்கேற்ப கடைபிடிப்பதுதான் சரியாக இருக்க முடியும். அதைவிட்டு மார்க்ஸ் குடிச்சார் நாங்களும் குடிக்கிறோம் என்பதற்கும் ரஜினி, கமல், விஜய் ரசிகர்கள் தங்கள் நாயகர்கள்போல் உடை, நடை, சிகை அலங்காரம் வைத்துக்கொள்வதற்கும் பெரிய வேறுபாடு இருப்பதாய் தெரியவில்லை.

சிலர், பார்ப்பனிய கலாச்சாரத்திற்கான எதிர்ப்பாக இச்செயலை விளக்குகிறார்கள். பார்ப்பனியம் 'குடிக்கக்கூடாது' என்ற கட்டுப்பாட்டை யாருக்கு விதிக்கிறது, 'அவாள்'களுக்கா? நமக்கா? நாமெல்லாம் குடிக்காமல் ஆரோக்கியமாய், அறிவுடன் வாழவேண்டுமென்றா பார்ப்பனியம் விரும்புகிறது? பார்ப்பனியம் தீண்டாதார் என்று மனிதரைப் பிரித்து அவர்களுக்கென வாழ்நிலையை, அடையாளங்களை சுமத்தி, அதை இழிவு என்று வேறு கூறிக்கொண்டிருக் கிறது. அதில் குடியும் அடங்கும் . இங்கு பார்ப்பனியத்துக்கெதிரான நமது நடவடிக்கையை நாம் தீர்மானிப்பவர்களாய் இருந்தால், நமது அடையாளமென பார்ப்பனியம் நம்மீது திணித்தவற்றை ஆய்வுக்குட்படுத்தி, நம் முன்னேற்றத்துக்கு தேவையானதை நம் வயப்படுத்திக் கொண்டு, பிறவற்றை தூக்கியெறிவதுதான் சரியான நடைமுறையாய் இருக்கும்.

குடிப்பதற்கு ஆயிரம் அரசியல், கருத்தியல் விளக்கங்கள் கொடுத்தாலும், அதை நடைமுறைப்படுத்த முதல் தேவை பணம். நம் தோழர்களுக்கு பணம் எப்படியாவது கிடைத்துவிடுகிறது. அடுத்து அதற்கான சூழல். சாதாரண ஆண்களுக்கு திருமணம், சடங்கு, திருவிழா, எழவு, எட்டு என்பதுபோல சமூக அக்கறையுடன் ஏற்பாடு செய்துகொள்ளும் கூட்டங்கள். இன்று குடித்தால் நாளைக்கே சாவு நிச்சயம் என்ற அளவிற்கு மோசமில்லாத ஆரோக்கியமான உடம்பு. சாவு உறுதி என்றால் குடிக்க மாட்டார்கள் என்கிற அளவில் நம் தோழர்கள் அறிவாளிகள்தான்.

உடல் ஆரோக்கியம் என்றவுடன் நினைவுக்கு வருவது, நம் தோழர்கள் உதடுகளில் அதிகம் அடிபடும் விளிம்புநிலை, ஒடுக்கப்பட்ட தலித் மக்களின் வாழ்க்கைத் தரம்தான். அடிப்படை ஆரோக்கியத்திற்கு தேவையான உணவிற்குகூட சிரமப்பட்டு, உடல்நலமின்றி இறந்துபோவது மிகச் சாதாரணம் அங்கு. ஆனால், நம் அறிவாளித்தோழர்கள் இருக்கும் உடம்பை நாசம் பண்ணுவதையே ஒரு இயக்கமாக எடுத்துச் செயல்படுவதைப் பார்த்தால், அடக்க முடியாத கோபந்தான் வருகிறது. நல்ல ஆரோக்கியமான உடம்பு இருந்தால் நாலு விசயம் படிக்கலாம், விவாதிக்கலாம், அலைந்து திரிந்து வேலை செய்யலாம். நல்ல ஆரோக்கிய மான உடம்பில்தான் திடமான மனமும் இருக்கும் என்று தெளிவாய் இருக்கிறார்கள் ஆன்மீகவாதிகள். சங்பரிவாரங்கள் சாகா செய்து கொண்டிருக்கிறார்கள். நம் தோழர்கள் சிகரெட், பீடி, பாட்டில் அளவுகளில் இருந்துகொண்டு என்ன செய்யப் போகிறார்கள்? ஆணும், பெண்ணும் சமத்துவமாய் குடிப்பதை விட்டுவிட்டு, திடகாத்திரமாக நாலுபேரை வெளுக்குமளவிற்கு உடல்பலத்தை வளர்த்துக்கொண்டாலாவது இனிவரும் காலங்களில் பயன்படும்.

**இந்திரா, மதுரை.**




புதிய தடம் இதழ் -11 படித்து முடித்தேன். தலித்துகளின் விடுதலையை முன்னிறுத்தி முழக்கமிடும் இதழின் வரிசையில் இதுவும் ஒன்றாக இருப்பது கண்டு பெருமை அடைந்தேன். என்.டி.ராஜ்குமாரின் கவிதை சிறப்பாக இருந்தது. பார்ப்பனியத்தின் மூலவேரைக் கில்லி எறிவதுபோன்ற தாக்கம் . விழி.பா.இதயவேந்தனின் 'கிடப்பு' முடிவு யதார்த்தத்தை மீறியதுபோன்ற தோற்றம் தருகிறது. கதையின் போக்கிலே முடிவு வெளிப்படவேண்டும்.

தலித் இலக்கியம் படைப்போர் கலாபூர்வமாகப் படைக்க வேண்டிய பொறுப்பிலும் இருக்கிறோம். பூலான்தேவியின் வேகமான முடிவு, அவர் தேர்ந்தெடுத்துக்கொண்ட பாராளுமன்ற ஜனநாயகத்தின் விளைவு என்பது சரியாக விளக்கப்பட்டிருந்தது. தலித் பெண்கள் நிராயுதபாணியாய் ஆளுமைக்குச் சேவகம் செய்வதைவிட ஆயுதபாணியாய் விடுதலைக்குப் போராடுவதே சாலச்சிறந்தது என்பது நிதர்சனம். கல்பனா சர்மாவின் ஆதங்கத்தில் தலித்துகளின் புத்தமதச் சார்பான ஆதரவு இருக்கிறது. ஆனால் கிறித்துவத்தையும் சாட்சிக்கு இழுக்கும் இடம் நெருடலாக இருக்கிறது. கிறித்துவத்தில் பிஷப்புகளாகவும் பீட அதிகாரங்களிலும் தலித்துகள் இருந்தாலும் அங்கேயும் சாதிய முரண்பாடுகள் கூர்மையடைந்து போயிருக்கின்றன. சாதி பார்த்தே பெண் எடுப்பது, கொடுப்பது, ஒரு தலித் பாதிரியார் பிரசங்கம் பண்ணும் நாட்களில் ஆலயங்களை மற்ற சமூகத்தினர் அசட்டையாகப் புறக்கணிப்பது, ஒரு உயர்சாதி கிறித்துவர் வீட்டில் நடக்கும் காரியங்களுக்கு தலித் பாதிரியாரை அழைத்து 'பிரேயர்' பண்ண மறுப்பது - நான் கண்கூடாகக் காணும் நிகழ்வுகளாகும்.

தலித்துக்கள் மதம் மாறுவது என்பது அவர்களின் சமூக உரிமையாக இருக்கலாம். அதை யார் தடுத்தாலும் அவர்களை முறியடிப்பது உரிமையை நிலைநாட்டும் பொருட்டு நமது கடமையாக இருக்கிறது. எந்த மதத்திலும் சாதிய வேற்றுமைத் தகராறுகள் இல்லை என்று மறுப்பதற்கில்லை. தலித்துகளுக்கும் இஸ்லாமியர்களுக்குமான இடைவெளிக்கு முக்கியக் காரணமாக நான் கருதுவது, இஸ்லாமியர்கள் தங்களை ஆதிக்கச் சாதியினராக அர்த்தப்படுத்திக்கொண்டிருப்பதும், தலித்துகளை பிற இந்து சாதியினர் நடத்துவதுபோல தீண்டாதவர்களாக நடத்துவதும்தான். கோபுவின் 'பிற்பட்டோர் - தலித் ஒற்றுமைக் கூச்சலின் அரசியல்' கட்டுரை இதழின் முத்தாய்ப்பாய் விளங்குகிறது. பிற்பட்டோர் - தலித் ஒற்றுமைக் கூச்சல்கள் தலித்துகளை ஏமாற்றும் வித்தையாகும்.

தலித்துகளுக்கு எதிரான கலவரங்களில் பிற்பட்டோர்கள் எல்லோரும் ஒன்றுகூடிக் கொள்வதும், தேவைப்பட்டால் உயர் சாதிக்காரர்களை இணைத்துக் கொள்வதும் இன்றைய நிலைப்பாடு. தலித்துகளின் பக்கம் சேர்கிறவர்கள் யார்? தலித்துகளாகத்தான் இருக்கிறார்கள். தலித்திய சிந்தனையுள்ள பிற சாதியினர் கரம் சேர்த்துக்கொள்ளலாம். தலித்துகளுடன் ஆனால் அவர்களின் உறுதியான நிலைப்பாடு எதுவரை நீடித்திருக் கிறது என்பது கேள்விக்குறியே. பிடுங்குகிறவரை (எரிகிற வீட்டில்) லாபம் என்ற தொனியிலேதான் அவர்களின் ஆதரவை நாட வேண்டியதிருக்கிறது.

பார்ப்பனர்களிடம் மட்டுமல்ல, பார்ப்பனியச் சிந்தனையுள்ள பிற்பட்டவர்களிடமும் தலித்துகள் எச்சரிக்கையாக இருக்கவேண்டியது இன்றைய தேவையாகும். தலித்திய விடுதலைமேல் அக்கறையுள்ள சில சமூகப் போராளிகளைத் தவிர.

**அபிமானி, தூத்துக்குடி**



படிப்பகம்

www.padippakam.com

# “நாங்கள் கேட்பதெல்லாம் எங்களையும் மனிதர்களாக மதியுங்கள் என்பதுதான்”

— **ஜானு,** ஆதிவாசிப் பெண் போராளி.



**கயமை நிறைந்த நாகரீக அரசியல் கட்சிகளின் தலைமையிலன்றி, பாதிக்கப்பட்ட மக்களில் ஒருவரே தலைமையேற்று நடத்திய வீரமிக்க போராட்டத்தால் ஆதிவாசிகளின் 30 வருட காலப்பிரச்சினைகள், கோரிக்கைகள் வெளியுலகிற்குத் தெரிய வந்துள்ளது.**

■ *இந்திரா*

சாதாரண மக்களைப் பொறுத்தவரை ஆதிவாசிகள் நாகரீக வளர்ச்சி இல்லாதவர்கள், அறிவு குறைந்தவர்கள், கரடுமுரடானவர்கள், தமிழ்த் திரைப்படங்களைப் பொறுத்தவரை அரைகுறை உடையுடன் கூட்டமாய் நடனமாடுபவர்கள் மேற்கத்தியர்களுக்கோ மனிதர்களைப் பலி கொடுப்பவர்கள், மனித மாமிசம் தின்பவர்கள்.

கேரள அரசு ஒருபடி மேலே போய் விலங்குகளுக்குக் கொடுக்கும் மரியாதையைக்கூட அவர்களுக்கு கொடுக்க வில்லை. கேரள அரசு முத்தங்காவில் ஆதிவாசிகள் சிரமப்பட்டு பண்படுத்திய காட்டு நிலத்திலிருந்து அவர்களை அடித்து வெளியேற்றிவிட்டு, விலங்குகளுக்கு சரணாலயம் அமைத்துள்ளது. அதற்கு மாற்றாக நிலம் தருவதாகக்கூட உறுதியளிக்கவில்லை அரசு. மண்ணின் பூர்வகுடிகளை நிலமற்றவர்களாக்கி பட்டினியால் இறக்கவிட்டது 'நாகரீக' சமூகம். வழக்கம்போல 'நாகரீக' அரசியல் கட்சிகள் தங்கள் திருகல் வேலைகளை காண்பித்து இப்பிரச்சினையை வெளியுலகிற்கு மறைத்து விட்டனர்.

ஜானுவின் தலைமையில் 2 வருடம் முன்பு திருவனந்தபுரத்தில் அரசு செயலகத்தின் முன்னால் குடிசைகளை எழுப்பி குடியேறி, அதில் பல சிரமங்களுடன் 47 நாட்கள் போராடினர். அதன்பிறகே கேரள ஏ.கே. ஆண்டனி அரசு நிலம் தருவதாக உத்திரவாதம் அளித்து, குடிசைகளை நீக்க வைத்துள்ளது. அந்த உத்திரவாதமும் வழக்கம்போல ஏமாற்றுதான் என்று உணர்ந்து, 2003 ஜனவரி 3ம் தேதியன்று முத்தங்கா வனப்பகுதியில் 1,500க்கும் மேற்பட்ட குடிசைகளை போட்டு குடியேறினர். தங்கள் எல்லைக்குள் வனத்துறையினர் நுழையக்கூடாது என எச்சரித்தனர். அதை மீறி உள்ளே நுழைந்த ஒரு காவலரையும் வனத்துறை ஊழியரையும் பிணைக்கைதிகளாகப் பிடித்து வைத்துக்கொண்டு தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு அரசை நிர்ப்பந்தித் தனர்,

ஆனால், பிப்.19 அன்று போலீஸ் பெரும்படையுடன் நுழைந்து எதிரிநாட்டு ராணுவத்தினரை தாக்குவதுபோல் ஆதிவாசிகளை தாக்கி, வனப்பகுதியைக் கைப்பற்றியது அரசு. இதில் ஒரு ஆதிவாசியும் ஒரு காவலரும் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. போராட்டத் தலைவர் ஜானு, ஆதிவாசி கோத்ர மகாசபா அமைப்பின் வழிகாட்டியான கீதானந்தன் மற்றும் பலர் கைது செய்து சிறையிலடைக் கப்பட்டனர். ஜானு தற்போது பிணையில் வெளிவந்துள்ளார்.

கயமை நிறைந்த நாகரீக அரசியல் கட்சி களின் தலைமையிலன்றி, பாதிக்கப்பட்ட மக்களில் ஒருவரே, தலைமையேற்று நடத்திய வீரமிக்க போராட்டத்தால் ஆதிவாசிகளின் 30 வருட காலப் பிரச்சினைகள், கோரிக்கைகள் வெளியுலகிற்குத் தெரிய வந்துள்ளது.வனப்பகுதியை ஆதிவாசிகளிடமிருந்து கையகப்படுத்தி உள்ளதற்கு அரசும், சுற்றுச் சூழலியலாளர்களும் சொல்லும் காரணம், இயற்கை வளங்களை / வனங்களை / விலங்குகளைப் பாதுகாக்கிறோம் என்பதுதான். நம் மக்களும் சரிதானே? ஆதிவாசிகளிடம் காட்டைவிட்டால் அழித்து மொட்டையாக்கி விடுவார்களே (!) என்று நினைக்கிறார்கள். ஆனால் உண்மை என்ன? அரசு இதுவரை எந்தளவிற்கு இயற்கை வளங்களைப் பாதுகாத்து வைத்திருக்கிறது? இயற்கை வளங்களைப் பாதுகாக்க நிறைய சட்டங்கள், திட்டங்கள் அமுலில் இருக்கத்தான் செய்கின்றன.

ஆனால் அவற்றிற்குப் புறம்பாக அணைகள் கட்டுவது, மரங்களை வெட்டுவது, மலைகளைப் பிளப்பது, சுரங்கங்கள் தோண்டுவது, போக்குவரத்து சாலைகள் அமைப்பது என்று எதிர்கால அபாயங்கள் பற்றிய எந்த அறிவோ, கவலையோ இல்லாமல் லாப நோக்கோடு இயற்கை வளங்களை அழித்து தீர்த்துவிட்டார்கள். கடும் புயல், வெயில், வறட்சி, நிலநடுக்கம் எல்லாமே இந்த நாகரீக அரசுகள் இயற்கை வளங்களைப் பாதுகாத்த லட்சணத்தின் விளைவுதான். இன்று கொஞ்ச நஞ்சம் மிஞ்சி நிற்கும் வனம், வன உயிரிகள், இயற்கை வளங்களுக்காக நாம் ஆதிவாசிகளுக்குத்தான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

ஆதிவாசிகள் காடுகளோடு உடலாலும் மனதாலும் உணர்வாலும் பின்னிப் பிணைந்தவர்கள் . காடுகள் அவர்களது வாழ்வில் ஓர் அங்கம். மரம், செடி, கொடி, விலங்கு, பறவை, மண்வளம், பருவநிலை மாற்றம் குறித்த அவர்களுடைய அறிவின் முன் நம் நாகரீக 'இயற்கை வளம் காக்கும்' பல்கலைக்கழக அறிவுக் கொழுந்துகள் வாய்மூடி நிற்க வேண்டிய நிலைதான் இன்னும் இருக்கிறது. தாவர வகை பிரிப்புத்துறையில் பட்டம் பெற்றுள்ளவர்களை விட ஆதிவாசி மூலிகை மருத்துவர்களின் தாவரவியல் ஞானம் அசாதாரணமானது. நாம் பேசும் நாகரீக மொழியில் பிறமொழிக் கலப்பின்றி பல தாவரங்களின் பெயர்களை சொல்ல முடிவதில்லை. ஆனால் அவர்களின் மொழி நூற்றுக்கணக்கான தாவரங்களை பிறமொழிக் கலப்பின்றி ஒற்றைச் சொல்லில் குறிப்பிடுமளவிற்கு இயற்கை






படிப்பகம்

www.padippakam.com

வளமிக்கதாய் இருக்கிறது. நாகரீக சமூகந்தான் பல நல்ல தாவர மரவகைகளை அழித்ததோடு மொழியின் இயற்கை குறித்த சொல்லாடல்களையும் அழித்துவிட்டது. ஆதிவாசிகள் ஒருபோதும் மருந்துக்காகப் பயன்படும் மூலிகைகளை வேரோடு அழிப்பதில்லை. தொழில் வளர்ச்சி என்ற பெயரில் மரங்களை வேரோடு வெட்டி எறிந்து விட்டு, மழையே பொழிய முடியாத நிலைக்கு இயற்கையை ஆளாக்கி. அதன்பின் மழைநீர் சேகரிப்பு பற்றி விழிப்புணர்வுப் பிரச்சாரம் (!) செய்யத் தெரியாது ஆதிவாசிகளுக்கு.

சரியாகச் சொன்னால், இயற்கையின் மொழியைப் புரிந்து கொள்ளும் திறனும் அறிவும் அவர்களுக்கு மட்டுமே உண்டு. இயற்கையின் செழிப்பான காலங்களையும் பற்றாக் குறையையும். அவர்களால் அறிந்து கொள்ளமுடியும். அதற்கேற்றாற் போல் வாழவும் தெரியும். அறிவு வளர்ச்சி பெற்ற மனிதர்கள்போல் பூமியை இரண்டாய் பிரிக்குமளவிற்கு பல்லாயிரம் அடிகளில் ஆழ்துளைக் கிணறு தோண்டி பூமியின் நீரை கடைசிச் சொட்டு வரை உறிஞ்சத் தெரியாது, உயிரினச் சுழற்சி-பெருக்கம் என்றெல்லாம் படிக்காவிட்டாலும், கர்ப்பமாய் இருக்கும் விலங்குகளை ஒரு போதும் வேட்டையாட மாட்டார்கள். அடை காத்துக் கொண்டிருக்கும் பறவை களுக்கு விலை பேசமாட்டார்கள். இயற்கை வளப் பாதுகாப்பு இயக்கம் நடத்திக் கொண்டிருப்பவர்களை விட, சாதாரண ஆதிவாசி



ஒருவர் அனைத்து இன பறவைகளின் முட்டையிட்டு அடைகாக்கும் காலம், விதம் தன் குஞ்சுகளுக்கு உணவூட்டி, பாதுகாத்து வளர்க்கும் விதம் பற்றிய நிறைய தகவல்களை தன் அனுபவத்தின் மூலம் கற்று வைத்திருப்பார்

விவசாயம் செய்யும்போது சூழல் பாதுகாப்பு (Ecology) மண்வளம் என்று நாம் இன்று புதிதாய் கண்டுபிடித்து சொல்லிக்கொண்டிருப்பவற்றை அவர்கள் செவ்வனே கடைபிடித்துக் கொண்டிருக் கிறார்கள்.

ஆதிவாசிகள் காடுகளைப் பயன்படுத்துவது சந்தையில் விற்று, பொருளீட்டி, காங்கரீட் கட்டிடங்களில் ஏ.சி., இன்டர்நெட் என்று வாழ்வதற் காக அல்ல, தங்கள் வாழ்வின் அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டும்தான். விலங்குகளும் உயிர்வாழ்வதற்கு மட்டும்தான் இயற்கையைப் பயன் படுத்துகின்றன. ஆனால் இயற்கையைப் புரிந்துகொண்ட, அறிவின் மூலம் அதைப் பாதுகாக்கும் பொறுப்புடன் செயல்படும்போது மனிதன் விலங்குகளிலிருந்து வேறு படுகிறான். இயற்கையின் முன் எந்த உயிரினங்களுக்கும் இல்லாத (இயற்கையை பாதுகாக்கும்) பொறுப்பு மனிதனுக்கு மட்டுமே உள்ளது. அந்த பொறுப்பை உணர்ந்து வாழும் ஆதிவாசிகளே உண்மையில் மனிதர்கள். அவர்கள்தான் வரலாற்று ரீதியாக இயற்கை வளங்களின் பாதுகாவலர்கள். அவர்களிடம்தான் இயற்கை வளங்கள் பாதுகாப்பாக இருக்கும் என்பதை உணர்ந்து, ஆதிவாசிகளிடம் அவர்களின் நிலத்தை திரும்ப ஒப்படைக்க வேண்டும். இந்த வரலாற்று உரிமையை மறுக்கும் அரசுக்கு எதிராக, ஆதிவாசிகள் நடத்தும் போராட்டங்களுக்குத் துணை நிற்க வேண்டியது சமூக உணர்வுள்ள ஒவ்வொரு மனிதனின் கடமையாகும்.

***என்.டி.ராஜ்குமார்***

# பெரியார்தான் ஆனதென்ன ராஜாஜி

*(வரிகள் வாலி, படம் : பாபா)*

ஏலேய் பாபா மானங்கெட்ட பயலேய்
மானமுண்ணா இன்னாண்ணு தெரியுமாடா

இந்திய வரலாறே தெரியாத பார்ப்பனீய நாய்
காஞ்ச பீயத்தூக்கிக்கினு வந்து ஒனக்க
சோத்துப் பாத்திரத்துல போடுது

**நீ இன்னாடாண்ணா**
**ரொட்டித்துண்டுன்னுநெனச்சுக்கினு துண்ணுறியே**

**ஒனக்கு நாக்கு என்ன செத்தாப் போச்சுது**

**ஏலேய்**
**வாலிங்குறவன் கொஞ்சம் குப்பக்கூட நெறயா**
**சொத்தையான வார்த்தைகளை அம்மணமாவச்சுகினு**
**யாவாரம் பண்ணக்கூடிய ஒரு சொரணயத்த பய**

அவனுக்கு
பூலேய தெரியாது பண்டிதர அறியாது
பெரியார படிச்சதே கெடையாது

கல்விய சனநாயகப்படுத்துன சமணம் பௌத்தம்
ஒண்ணுமே தெரியாது

அவன்கூட சேந்துகினு
நீயும் பயாஸ்கோப்பா காட்டுற

அயோக்ய பயல்களா

தமிழன் தமிழன்னு சொல்லிகிணே
தமிழனுக்க சூத்துல குத்துறியளா?

இழுத்துவச்சு அறுத்துப்போடுவோம்

பொறவு
பாட்டுகீட்டுண்ணுட்டு எழுதவும் முடியாது
சாட்டு பூட்டுண்ணுட்டு நடிக்கவும் முடியாது

www.padippakam.com



மேகவண்ணன்.

முட்டாள்களின் வசமிருக்கிறது
அரசு
காந்தி புகைப்படம் பார்த்திருக்கிறீர்களா
சாவர்க்கருக்குப் பக்கத்தில்?

பசுக்களை ஆதரிப்பவர்களின் சட்டம்
புலிகளை ஆதரித்தவனை
சிறையில் வைத்திருக்கிறது

சிறுத்தைகள் தமிழ்ப் பெயர்
சூடிக்கொள்கின்றன

எல்லாவற்றையும் போலவே
மொழியையும் தின்ற சாதி
உயிர்த்திருக்கிறது விழித்து.

கருவூலங்களில் கொள்ளையிட்ட
மந்திரிகுமாரர்களை யாரும்
தேர்க்காலில் இடவில்லை

மரணத்துக்குத் தீர்ப்பெழுதி
முனைகள் உடைக்கும் பேனாவோடு
வீதிகளில் திரிகிறார்கள் போலீஸ்காரர்கள்

அனைவருக்கும் பேச்சுரிமையிருப்பதாக
அரசியல் சட்டம் 19ஐ நம்பி
இக்கவிதையை எழுதுகிறவன்
மீதித்தாள்களை
தன்
உள்ளாடையில் மறைத்துக்கொள்வான்

## ...சொல்ல ஒன்றுமில்லை

ஸ்ரீதேவி

அறிந்து வைத்திருக்கும்
எனது நிர்வாணம் பற்றி
வெட்கப்பட ஒன்றுமில்லை...!

எனது அந்தரங்கத்தின்
புறச்சுவர்கள் மீது
படர்ந்து நகரும் உனது பார்வை
வெயிலடித்தலாய்ப் பொங்கி
மழை ஈரமாய்ச் சொட்டும்...!
நீ
என்னிடம்
சொல்லவைத்திருக்கும்
வார்த்தைகள்
என் ஆழங்களில் அர்த்தமிழக்கும்...!

எனது நிர்வாணம் தாண்டி
பிரவேசித்தல் அறியாத
உனது கண்களைப் பற்றி
எதுவும் சொல்லவியலாத வெறுமையுள்
என் காலம்...!

ஒரு முதலிரவில் சந்திக்கநேரும்
யாரோவான உன்னை
எனக்கென நிர்பந்திக்கப்பட்ட வாழ்வில்...!

